கலைஞர் 100
1924 - 2023

தமிழரசு
Tamilarasu

(Monthly)

டிசம்பர் 2023 (December 2023)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 54
இதழ் (Issue) : 6

மேனாள் இந்தியப் பிரதமர் சமூக நீதிக் காவலர் திரு. வி.பி.சிங் அவர்களின் திருவுருவச்சிலை திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில்
ரூ.2.49 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள திராவிடப் பேரொளி அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின்
திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை 01.12.2023 அன்று திறந்து வைத்தார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்
கார்த்திகை - மார்கழி
டிசம்பர் 2023

மலர் : 54 விலை ரூ.30 இதழ் : 6

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
சி. சுஜிதா
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய். (குறள் 429)

வருமுன் அறிந்து காத்துக்கொள்ளும் திறனுடையவர்களுக்கு அதிர்ச்சி தரக்கூடிய துன்பம் ஏற்படாது.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ 'மிக்ஜாம்' புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் களப்பணிகள் 4

★ மேனாள் இந்தியப் பிரதமர், சமூகநீதிக் காவலர் திரு. வி.பி. சிங் அவர்களின் முழு திருவுருவச்சிலை 23

★ திராவிடப் பேரொளி அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்குத் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் 30

★ ரூ. 77.87 இலட்சம் செலவில் தூத்துக்குடி மாநகரில் தந்தை குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் திருவுருவச்சிலை 36

★ திருப்பி அனுப்பப்பட்ட சட்ட முன்வடிவுகளை மீண்டும் சட்டப்பேரவையில் மறுஆய்வு செய்து நிறைவேற்றிடும் அரசினர் தனித்தீர்மானம் 38

★ நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்காக நில எடுப்புச் செய்ததால் பாதிக்கப்பட்ட 3,543 பயனாளிகளுக்குப் பட்டாக்கள் 43

★ திருக்கோயில்கள் சார்பில் 1,100 மணமக்களுக்குத் திருமணம் நடத்தி வைக்கும் நிகழ்வை நிறைவு செய்திடும் விதமாக, இரண்டு மணமக்களுக்கான திருமணம் 54

★ பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ. 400 கோடி முதலீட்டில் 4,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் காலணி உற்பத்தித் தொழிற்சாலை 56

★ "நீயே உனக்கு ராஜா" என்ற புதிய திட்டம் அறிமுகம் 59

★ ரூ.264.10 கோடி மதிப்பீட்டில் 11ஆம் வகுப்பு பயிலும் 5,47,676 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் 64

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
27.11.2023 அன்று சென்னை, மாநிலக்கல்லூரி வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நிறுவப்பட்டுள்ள மேனாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் திரு.வி.பி.சிங் அவர்களின் முழு திருவுருவச்சிலையைத் திறந்து வைத்தார்.

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள : tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

‘மிக்ஜாம்’ புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் களப்பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 03.12.2023 அன்று சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள மாநில அவசரகாலச் செயல்பாட்டு மையத்தில் கனமழையையும், மிக்ஜாம் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் ஆய்வு செய்தபின்னர், செய்தியாளர்களிடம் ஆற்றிய உரை

"கடந்த 01.12.2023 மற்றும் 02.12.2023 அன்று அரசு உயர் அலுவலர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்களுக்கு நான் ஏற்கெனவே அவர்களை எல்லாம் அழைத்து அறிவுரை வழங்கியிருக்கிறேன்.

அந்த அடிப்படையில், 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 4,967 இதர நிவாரண மையங்களில், பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் இருந்து முன்கூட்டியே பொதுமக்களை நிவாரண மையங்களுக்கு அழைத்து வந்து தங்கவைக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவள்ளூர், கடலூர், செங்கல்பட்டு, சென்னை மாவட்டங்களில் மீட்பு, நிவாரணப் பணிகளுக்காக, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 350 வீரர்கள் கொண்ட 14 குழுக்கள், தேசிய பேரிடர் மீட்புப் படையின் 225 வீரர்கள் கொண்ட 9 குழுக்கள் தயார் நிலையில் உள்ளனர்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் 2 கோடியே 44 இலட்சம் பொதுமக்களுக்குப் பொதுவான எச்சரிக்கைக் குறுஞ்செய்திகள் மூலமாக அனுப்பப்பட்டிருக்கின்றன.

கடலோர மாவட்டங்களில் உள்ள 437 முன்னெச்சரிக்கை அமைப்புகள் மூலம் மீனவர்களுக்கும், பொதுமக்களுக்கும் தொடர்ந்து எச்சரிக்கைச் செய்திகள் அனுப்பப்பட்டு வருகின்றன.

அதிலும், மீனவர்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கைச் செய்திகள் அனுப்பப்பட்டன. இதனால் அனைத்துப் படகுகளுக்கும் பாதுகாப்பான ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம்.

புயல், கனமழை குறித்துப் பொதுமக்களுக்குத் தொடர்ந்து உங்களைப் போன்ற ஊடகங்கள் மூலமாகவும், செய்திகளை வெளியிட்டுத் தொடர்ந்து அந்தப் பணியை ஆற்றி வருகிறோம். புயலின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள பொதுமக்கள் செய்ய வேண்டியவையும், செய்யக் கூடாதவை குறித்தும் விளக்கமாகத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் பாதிப்பிற்குள்ளாகி இருக்கக்கூடிய இடங்களில் இருந்து 685 நபர்கள் 11 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மழை எச்சரிக்கை உள்ள மாவட்டங்களில் கண்காணிப்பு அலுவலர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறார்கள்.

மாநில அவசரகாலச் செயல்பாட்டு மையம், பெருநகரச் சென்னை மாநகராட்சி ஒருங்கிணைந்த கட்டளை, கட்டுபாட்டு மையம், மின்சாரத்துறை உட்பட அனைத்துக் கட்டுப்பாட்டு அறைகள் 24 மணி நேரமும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

பொதுமக்களுக்கு நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருப்பது:

புயலின் காரணமாக, பலத்த காற்றுடன் அதி கனமழை பெய்யும் என்று கூறப்பட்டுள்ளது. இதனால், மின் கம்பங்கள், மின் கம்பிகள், மரங்கள் விழுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற காரணமாக, பொதுமக்கள் தேவையில்லாமல் வெளியில் வருவதைக் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேவைப்பட்டால், மாவட்ட நிருவாகம்/ மாநகராட்சியின் அறிவுரையின் பேரில் நிவாரண முகாம்களில் தங்குமாறும் நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்துகொடுக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மேலும், சென்னையைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. கே.என்.நேரு அவர்கள், திரு. கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள், திரு. தங்கம்

தென்னரசு அவர்கள், திரு. மா.சுப்பிரமணியம் அவர்கள், திரு. சேகர்பாபு அவர்கள் ஆகியோர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். செங்கல்பட்டு மாவட்டத்திற்கு மாண்புமிகு அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்களும் அங்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.



மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அவர்கள் தொலைபேசி வாயிலாக 'மிக்ஜாம்' புயல் பாதிப்புக் குறித்துக் கேட்டறிந்தார்.

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக உருவாகியுள்ள மிக்ஜாம் புயலினால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணிகள் குறித்தும் மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அவர்கள் 04.12.2023 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு கேட்டறிந்தார்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள புயல் பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

தேசியப் பேரிடர் மீட்புக்குழு, மாநிலப் பேரிடர் மீட்புக் குழுவினர், அரசு, காவல்துறை அதிகாரிகளுடன் இணைந்து துரிதமாக மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும், கூடுதலாகத் தேசியப் பேரிடர் மீட்புக் குழுவினரைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்திடுமாறும் கேட்டுக் கொண்டார். உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொண்ட பிறகு பாதிப்புகள் குறித்து உரிய கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டுத் தேவைப்படும் உதவிகள் ஒன்றிய அரசிடம் கேட்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று உறுதியளித்தார்.

திருவள்ளூர்மாவட்டத்தைப்பொறுத்தவரைக்கும், மாண்புமிகு அமைச்சர் மூர்த்தி அவர்கள் அங்கே தன்னுடைய பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி அவர்களும், இராணிப்பேட்டை மாவட்டத்தில் மாண்புமிகு காந்தி அவர்களும் தங்களுடைய நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள், என்னென்ன பணிகள் செய்யவேண்டுமோ, மக்களுக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அந்தப் பணிகள் எல்லாம் அவர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 3 நாட்களுக்கு முன்னர் பெய்த மழையின்போது, இரவு பகல் பாராமல் அனைத்துப் பணியாளர்களும் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக முதலில் அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, அடுத்த இரண்டு நாட்களுக்கும் பாதிப்பு ஏற்படும் பகுதிகளைச் சீரமைக்கவும் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றுமாறு நான் அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

ஊடகங்களும் அரசின் செயல்பாடுகளுக்குத் துணைநிற்க வேண்டும் என்று உங்களையும் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்."

போர்க்கால அடிப்படையில் சீரமைப்புப் பணிகள்

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை தொடங்கிய பின்னர், கடந்த இரண்டு நாட்களாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக, சென்னை,காஞ்சிபுரம்,திருவள்ளூர்,செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில், வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள 'மிக்ஜாம்' புயல் காரணமாக, தொடர்ந்து பெய்துவந்த வரலாறு காணாத மழையால், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மீட்பு, நிவாரண நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் இந்த புயல் மழையின் தாக்கம் மிக அதிகமாக ஏற்பட்டது.

மேலும், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் மேற்பார்வையில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உடனடியாகத் தேவையான நிவாரணம் வழங்கப்பட்டதுடன், சீரமைப்புப் பணிகளும் போர்க்கால அடிப்படையில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன. சென்னை மாநகராட்சியில் உள்ள ஒவ்வொரு மண்டலத்திற்கும், ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலரும், தாம்பரம், ஆவடி மாநகராட்சிகளுக்கெனத் தலா ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலரும் நியமிக்கப்பட்டு, அவர்கள் அனைவரும் களத்தில் பணியாற்றினர்.

முன்னதாக, வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள், மீட்புப் பணிகள் குறித்தும், வங்கக் கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், வேலூர், இராணிப்பேட்டை ஆகிய 12 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் 01.12.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடத்தி உரிய அறிவுரைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, 02.12.2023 அன்று சென்னை, எழிலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திற்கு மாண்புமிகு

நான்காம் பக்க அட்டைப்பட விளக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.12.2023 மற்றும் 06.12.2023 அன்று சென்னையில் ஓட்டேரி, கந்தன்சாவடி, யானைகவுனி, கல்யாணபுரம், தரமணி பகுதிகளில் கனமழையால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, அங்குள்ள மக்களுக்கு உணவு, உடை, போர்வை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்ததையொட்டி மாவட்ட ஆட்சியர்கள், மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் பொதுமக்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு கள நிலவரங்கள் குறித்துக் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, 03.12.2023 அன்று சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள மாநில அவசரகாலச் செயல்பாட்டு மையத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று கனமழை, மிக்ஜாம் புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்தார்.

05.12.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கண்ணப்பர் திடலில் உள்ள சமுதாய நலக் கூடத்திற்கு நேரில் சென்று அங்குத் தங்க வைக்கப்பட்டிருந்த பொதுமக்களுக்கு உணவு, பாய், போர்வை ஆகியவற்றை வழங்கி, அவர்களிடம் வசதிகள் குறித்துக் கேட்டறிந்து, மழைநீரை அகற்றிட போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. கூடிய விரைவில் இயல்புநிலை திரும்பும் என்றும், அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அரசு செய்து தரும் என்று தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, கல்யாணபுரத்தில் உள்ள சிறப்பு மருத்துவ முகாமைப் பார்வையிட்டு, அங்குள்ள மருத்துவர்களிடம் மக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை விவரம் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். மேலும், அம்முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு உணவு, போர்வை, பாய் ஆகியவற்றை வழங்கினார்.

பின்னர், யானைகவுனியில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்களைச் சந்தித்துப் பேசி, அவர்களுக்கு உணவு, போர்வை, பாய் ஆகியவற்றை வழங்கினார்.

பின்னர், பெருநகரச் சென்னை மாநகராட்சி அலுவலகத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தூய்மைப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாட்டின் பல்வேறு மாநகராட்சிகள், நகராட்சிகளிலிருந்து களப் பணி ஆற்றுவதற்காக வருகை தந்தவர்களுடன் கலந்துரையாடி, இக்கட்டான இச்சூழ்நிலையில்

பெருநகரச் சென்னை மாநகராட்சி அலுவலகம்

பணிகளை மேற்கொள்ள வருகை தந்திருந்த அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்து, பணிகளைச் செவ்வனே மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, பெருநகரச் சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒருங்கிணைந்த கட்டளை, கட்டுப்பாட்டு மையத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று, கனமழையால் பாதிக்கப்பட்டிருந்த பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள், மீட்புப் பணிகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு. இ.பரந்தாமன், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., பெருநகரச் சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இணை மேலாண்மை இயக்குநர் திரு. வே.சரவணன், இ.ஆ.ப., பெருநகரச் சென்னை மாநகராட்சிச் கூடுதல் ஆணையர் திருமதி இரா.லலிதா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களைச் சந்தித்து பேசியதாவது:

“அனைவருக்கும் வணக்கம்.

வரலாறு காணாத வகையில், பெரு மழையானது நேற்றைய தினம் கொட்டித் தீர்த்திருக்கிறது. பெருநகரச் சென்னை மாநகராட்சியின் மழை அளவீடுகளின்படி, மீனம்பாக்கத்தில் 43 செ.மீ. பெருங்குடி 44 செ.மீ. பதிவாகி இருக்கிறது. இதை வைத்தே நீங்கள் முடிவு செய்து கொள்ளலாம். நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

அப்போது, அதாவது 2015ஆம் ஆண்டில் பல இடங்களில் தண்ணீர் தேக்கம் ஏற்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு 2021ஆம் ஆண்டு நவம்பரில் பெருமழை ஏற்பட்டது. அதை மனதில் வைத்துக்கொண்டுதான் அப்போது தேங்கி இருந்த மழைநீரை கணக்கில் எடுத்து, அந்த அடிப்படையில்தான், சென்னை மாநகராட்சி, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள ஒட்டுமொத்த மழைநீர் வடிகால் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக நாங்கள் திட்டமிட்டோம். பல்வேறு முயற்சிகளை இந்த அரசு எடுத்தது. இதற்கெனப் பல்வேறு வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. திருப்புகழ் அவர்களுடைய தலைமையில் அமைத்தோம்.

சூளை கண்ணப்பர் திடல்

சூளை கண்ணப்பர் திடல்

கல்யாணபுரம்

சென்னை, எண்ணூர்

அந்தக் குழு ஆய்வு நடத்தி, அவர்கள் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில், சுமார் ரூ.4,000 கோடி மதிப்பிலான பல்வேறு வெள்ளநீர் வடிகால் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொண்டோம். இந்தப் பணிகள் செய்த காரணத்தினால், தற்போது ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த வரலாறு காணாத வெள்ளத்தை நாம் சந்தித்தபோதும், அதனுடைய தாக்கம் கடந்த காலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பெருமளவு குறைந்திருக்கிறது. அதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

உதாரணமாக, 2015ஆம் ஆண்டு கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை யாரும் மறந்திருக்கமாட்டீர்கள். அதை ஒப்பிடும்போது, அன்று நுங்கம்பாக்கத்தில் 29.4 சென்டிமீட்டர் மழையும், மீனம்பாக்கத்தில் 34.5 சென்டிமீட்டர் மழையும் 24 மணி நேரக் கால அளவில் பதிவானது. இதனை ஒப்பிடும்போது, தற்போது வீசியிருக்கக்கூடிய மிக்ஜாம் புயலால் ஏற்பட்டிருக்கக்கூடிய மழை என்பது மிக மிக மிக அதிகம் என்பதை நீங்கள் உணர்வீர்கள். பெருங்குடியில் மட்டும் 44 சென்டிமீட்டர் மழையும், மீனம்பாக்கத்தில் 43 சென்டிமீட்டர் மழையும் 36 மணி நேரத்தில் பதிவாகியுள்ளது. இது மிக மிக அதிக அளவாகும்.

மிக்ஜாம் புயலானது விரைவாகக் கடந்து செல்லாமல், நின்று மழை பெய்த காரணத்தினால், இரண்டு நாட்கள் சென்னையில் பெருமழை ஏற்பட்டது. அதனால்தான் சென்னையில் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

இத்தகைய ஒரு மிகப்பெரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டாலும், இந்த அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாகவும், உடனடி நிவாரணப் பணிகள் மூலமாகவும் உயிரிழப்புகளும், மற்ற பிரச்சினைகளும் பெருமளவு குறைக்கப்பட்டிருக்கின்றன. சொல்லப் போனால் 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 199 பேர் இறந்திருக்கிறார்கள். ஆனால், இன்று அதைவிட அதிகமான மழை பெய்திருக்கக்கூடிய நேரத்தில் 7 பேர் மட்டுமே இறந்திருக்கிறார்கள். இதுவும் ஏற்பட்டிருக்கக்கூடாது. ஆனால் தவிர்க்க

முடியாத காரணத்தினால் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நான் வருத்தப்படுகிறேன். அதில் குறிப்பாக, செங்கல்பட்டில், சுவர் இடிந்து அங்கே சிலர் இறந்திருக்கிறார்கள். அடுத்து, குருநானக் கல்லூரி அருகே நடந்த விபத்து. அதுவும் உங்களுக்குத் தெரியும். அதனுடைய முழு விபரம் வரவில்லை. வந்த பிறகு நாங்கள் சொல்கிறோம்.

தற்போது 9 மாவட்டங்களில், 61,666 பேர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 11 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் இதுவரைக்கும் வழங்கியிருக்கிறோம். அவர்களுக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. காலையிலிருந்து 1 இலட்சம் பால் பாக்கெட் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. தேவையான அத்தியாவசியமான பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

மழைநீர் வடிகால் பணிகளை நல்ல முறையில் செய்தாலும், மழைநீர் இறுதியாகக் கடலில் வடியக்கூடிய அடையாறு, கூவம் நதிகளின் முகத்துவாரங்களில் புயலின் காரணமாக அலைகளின் அளவு அதிகமாக இருந்த காரணத்தினால், இந்த நதிகளில் வெள்ள நீர் மிக மெதுவாகவே வடிந்து வருகிறது. இருந்தாலும், அரசு மேற்கொண்ட பல்வேறு வெள்ள நிவாரணப் பணிகளால் இச்சூழ்நிலையிலிருந்து பெருமழையின் தாக்கம் குறைக்கப்பட்டிருக்கிறது, வெள்ளநீரும் விரைவாக வடிந்து வந்து கொண்டிருக்கிறது.

அரசு மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி குறிப்பிட நான் விரும்புகின்றேன். 2015ஆம் ஆண்டில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திட்டமிடப்படாமல், அடையாறு வரும்பொழுது, 1 இலட்சம் கன அடி அளவிற்குப் பெருமளவு நீர் திடீரெனத் திறந்து விடப்பட்டது.

ஓட்டேரி, நல்லான் கால்வாய்

கந்தன் சாவடி

வெள்ளம் ஏற்பட்டதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அது ஒரு செயற்கை வெள்ளம். இது இயற்கையாக ஏற்பட்டிருக்கக்கூடிய வெள்ளம். அதையும், இதையும் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த நான்கு நாட்களில் செம்பரம்பாக்கத்தில் இருந்த நீர் முன்கூட்டியே திட்டமிடப்பட்டுத் திறந்து விடப்பட்ட காரணத்தினால், இத்தகைய பெருமழையின்போது ஓரளவிற்குச் சமாளித்திருக்கிறோம். இத்தகைய பெருமழையின்போதும் அதிகபட்சமாக விநாடிக்கு 8,000 கன அடி அளவிற்கு மட்டுமே நீர் திறந்து விடப்பட்டது.

இவ்வாறு நாம் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளுக்குப் பின்னரும், வரலாறு காணாத அளவில் பெய்த பெருமழையால் சென்னை, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை நேரிலும் ஊடகங்கள் வாயிலாகவும் நாம் பார்க்கிறோம். இத்தகைய பெரும் இயற்கைச் சீற்றங்களால் மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாக நேரிட்டாலும், ஓர் அரசின் உண்மையான கடமை என்பது, இந்த இன்னல்களின் தாக்கத்தைக் குறைப்பதோடு, இந்த இன்னல்களில் இருந்து மக்கள் உடனடியாக வெளிவரத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதே ஆகும். இந்த வகையில், நேற்று மழை நிற்பதற்கு முன்பாகவே, தமிழகத்தில் உள்ள மற்ற மாநகராட்சிப் பகுதிகளில் இருந்து தூய்மைப் பணியாளர்கள் உட்பட பல்வேறு

சென்னை, நேப்பியார் பாலம் அருகில், கூவம் ஆற்றின் முகத்துவாரத்தில் மழைநீர் சீராக வடிகிறதா என்பதை பார்வையிடல்

அகரம், ஆனந்தன் பூங்கா

குக்ஸ் சாலை பகுதி

தரமணி, பாரதி நகர்

அனகாபுத்தூர் பகுதி

கொளத்தூர் பகுதிக்குட்பட்ட செல்வி நகர்

அனகாபுத்தூர் பகுதி

பணியாளர்கள் வரவழைக்கப்பட்டுச் சென்னை வந்தடைந்துள்ளனர்.

நீங்களே இவர்கள் வெளியில் நிற்பதைப் பார்த்திருப்பீர்கள். இவர்கள் அனைவரும் சென்னை, தாம்பரம், ஆவடி மாநகராட்சி பணியாளர்களோடு இணைந்து ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில பேர் வருகை தந்து பணியாற்ற இருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலையை விரைவில் திரும்பச் செய்வதற்கான அனைத்துப் பணிகளையும், முனைப்போடு மேற்கொண்டு வருகிறார்கள்.

இப்பணிகளை ஒருங்கிணைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் அனைவரும் மேற்கொண்டு வரும் இந்த முயற்சிகளின் விளைவாக, சென்னை மாநகராட்சி, அதன் சுற்றியுள்ள இடங்களில், பல பகுதிகளில் இயல்புநிலை திரும்பத் தொடங்கியுள்ளது. 14 அமைச்சர்கள் களத்தில் இருந்து பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். பல இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் இதற்காக நியமிக்கப்பட்டு அவர்களும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ரூ.4,000 கோடியில் பணிகள் செய்தும், சென்னை மிதக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் இதை ஒரு பெரிய குற்றமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார். நான் சொல்கின்ற ஒரே பதில் என்னவென்றால், இதை நான் அரசியலாக்க விரும்பவில்லை. இருந்தாலும், அவர் தொடர்ந்து இதைச் சொல்லிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, ரூ.4,000 கோடி மதிப்பிலான பணிகள் நடைபெற்ற காரணத்தினால்தான், இவ்வளவு பெரிய வரலாறு காணாத 47 வருடமாகப் பார்க்காத மழையிலிருந்து இன்றைக்குச் சென்னை தப்பி இருக்கிறது. திட்டமிட்டுச் செலவு செய்து அந்தப் பணிகளை எல்லாம் நிறைவேற்றிய காரணத்தினால்தான் அது சாத்தியமானது. அதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் காலத்தில் எதுவும் செய்யவில்லை. ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டு காலத்தில் இதைச் செய்து முடித்திருக்கிறோம் என்பதை நான் உங்களிடத்தில் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.”

உணவு, நிவாரணப் பொருட்களும் வழங்கல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 06.12.2023 அன்று கொளத்தூர் பகுதிகளில் 'மிக்ஜாம்' புயலினால் ஏற்பட்ட கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கி, அரிசி, போர்வை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கினார்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஓட்டேரி பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை, போர்வை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். பின்னர், ஓட்டேரி, நல்லான் கால்வாயில் நீர்வரத்தினைப் பார்வையிட்டார்.

தொடர்ந்து, குக்ஸ் சாலைப் பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கி, அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். மேலும், மழைநீர் தேங்கியுள்ள பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வழங்குவதற்காகத் தேவையான உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைப் படகுகளில் அனுப்பி வைத்தார்.

பின்னர், அகரம் - ஆனந்தன் பூங்கா, பாலாஜி நகர் பிரதான சாலை, செல்வி நகர் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கி, அம்மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கினார்.

கொளத்தூர் பகுதிகளில் வெள்ள நிவாரணப் பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு நீரை வெளியேற்றி, வெள்ளநீர் வடிந்த பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு உடனடியாக மின்சாரம் வழங்கிட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தரமணி, பாரதிநகர், துரைப்பாக்கம், கல்குட்டை பகுதிகளில் கனமழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். மேலும், நேப்பியர் பாலம் அருகில், கூவம் ஆற்றின் முகத்துவாரத்தில் மழைநீர் சீராக வடிகிறதா என்பதையும் பார்வையிட்டார்.

"மிக்ஜாம்" புயல் நிவாரணம் ரூ.5,060 கோடி வழங்கிடக் கோரிக்கை

மாண்புமிகு இந்தியப் பிரதமர்
திரு. **நரேந்திர மோடி** அவர்களுக்கு,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
கடிதம் – 05.12.2023

தமிழ்நாட்டில் 'மிக்ஜாம்' புயல் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களை சீர்செய்திட இடைக்கால நிவாரணமாக ரூ.5,060 கோடி வழங்கிடக் கோரி மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 05.12.2023 அன்று கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழ்நாட்டில் கடந்த 2, 3, 4 ஆகிய தேதிகளில் தாக்கிய 'மிக்ஜாம்' புயல் காரணமாக பெய்த வரலாறு காணாத பெருமழையின் காரணமாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களில் மிக அதிகமான மழைப்பொழிவு பெறப்பட்டது. இதன் காரணமாக, இந்த நான்கு மாவட்டங்களில், குறிப்பாகச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மிகக்கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. சாலைகள், பாலங்கள், பொதுக் கட்டடங்கள் எனப் பல்வேறு உட்கட்டமைப்புகள் சேதம் அடைந்துள்ளன. மேலும், இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் விளக்கமாகக் குறிப்பிட்டு, தமிழ்நாட்டிற்கு, இடைக்கால நிவாரணமாக குறிப்பிட்ட தலைப்புகளின்கீழ் ரூ.5,060 கோடியினை உடனடியாக வழங்கிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், 'மிக்ஜாம்' புயலால் பெய்த கனமழையின் காரணமாக ஏற்பட்ட சேதங்களைக் கணக்கிடும் பணி தற்போது துவங்கப்பட்டுள்ளது என்றும், முழு விவரங்கள் சேகரிக்கப்பட்ட பின்னர், விரிவான சேத அறிக்கை தயார் செய்யப்பட்டு, கூடுதல் நிதி கோரப்படும் என்றும் தெரிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சேதமடைந்த பகுதிகளைப் பார்வையிட ஒன்றிய அரசின் குழுவினைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்குமாறும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

படமும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடி நாள் நிதிக்கு நன்கொடை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 07.12.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், கொடி நாளையொட்டிச் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., அவர்களிடம் கொடி நாள் நிதிக்கு நன்கொடை வழங்கினார்.

'மிக்ஜாம்' புயலால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீர் செய்திடத் தேவையான நிதியினை விரைவில் விடுவிக்க வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்களிடம் கோரிக்கை – 07.12.2023

தமிழ்நாட்டில் 'மிக்ஜாம்' புயல் காரணமாக ஏற்பட்ட பெருமழையின் காரணமாக, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளைப் பார்வையிட்டு ஆலோசனை மேற்கொள்ள மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்கள், 07.12.2023 அன்று, சென்னைக்கு வருகை தந்தார். மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களுடன், மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை, பால்வளம் மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு. எல். முருகன், தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செயலாளர் திரு. கமல் கிஷோர் ஆகியோரும் வருகை தந்தனர்.

மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்கள் ஹெலிகாப்டர் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு ஆய்வு

மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., ஆகியோர் உடன் சென்று, மழை வெள்ளச் சேதங்கள் குறித்தும், ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் எடுத்துரைத்தனர்.

பின்னர், சென்னை, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்; மாண்புமிகு ஒன்றியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய, மாநில அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

இக்கூட்டத்தில், வங்கக் கடலில் உருவாகிய புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்துச் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், வேலூர், இராணிப்பேட்டை ஆகிய 12 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, பாதிப்பிற்குள்ளாகக்கூடிய மக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை வழங்கி, அவர்களை நிவாரண மையங்களில் தங்க வைத்திடவும், நிவாரண முகாம்களில் உணவு, பாதுகாப்பான குடிநீர், மின்சார வசதி உட்பட தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் உள்ளதை உறுதி செய்திடவும், மழை, வெள்ள காலங்களில் மின் கசிவினால் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க மின்சார வாரியத்தால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், அரசு மருத்துவமனைகளில் 24 மணி நேரமும் அவசர சிகிச்சைப் பிரிவு செயல்படுவதை உறுதி செய்திடவும், பாதிப்பிற்குள்ளாகும் மக்களுக்கு உணவு வழங்கிட உணவு தயாரிக்கும் சமையல் கூடங்கள் தயார் நிலையில் வைத்திருக்கவும், மாவட்ட நிருவாகம், மாநகராட்சி, உள்ளாட்சி அமைப்புகள், காவல் துறை, தீயணைப்பு, மீட்புப் பணிகள் உள்ளிட்ட அனைத்து அரசுத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டது.

'மிக்ஜாம்' புயல் காரணமாக டிசம்பர் 3, 4ஆம் தேதிகளில் பெய்த கனமழையால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் மொத்தம் 109.41 செ. மீட்டர் மழை பெய்து, மிகப்பெரிய சேதம் ஏற்பட்டது குறித்தும், குறிப்பாக வரலாறு காணாத வகையில், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லியில் 32 செ. மீட்டர் சென்னைப் பெருங்குடியில் 29 செ.மீட்டரும் பதிவாகியுள்ளது குறித்தும் தெரிவிக்கப்பட்டது.

போர்க்கால அடிப்படையில் பணிகள்

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் மேற்பார்வையில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுத் தேவையான நிவாரணம் வழங்கப்பட்டு வருவதுடன், சீரமைப்புப் பணிகளும் போர்க்கால அடிப்படையில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்தும் மாண்புமிகு ஒன்றியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் தேவையான நிவாரணம், மீட்புப் பணிகளை தீவிரப்படுத்த மாநிலத்தின் 20 அமைச்சர்களையும், 50க்கும் மேற்பட்ட இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களையும், இந்தியக் காவல் பணி அலுவலர்களையும் நியமித்து, அவர்கள் அனைவரும் களத்தில் பணியாற்றி வரும் விவரங்களும் எடுத்துரைக்கப்பட்டது.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சிக்கிய மக்களை மீட்டுப் பாதுகாப்பாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டு வருவதுடன், அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், மருந்து, போர்வை, பாய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்பட்டு வருவதையும், மழைக்காலங்களில் ஏற்படக்கூடிய நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்க மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருவது தெரிவிக்கப்பட்டது.

தேசியப் பேரிடர் மீட்புக் குழு, மாநிலப் பேரிடர் மீட்புக் குழுவினர், காவல்துறை, தீயணைப்பு, மீட்புப் பணிகள் துறை, அரசுத் துறைகளுடன் இணைந்து துரிதமாக மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருவது குறித்தும் விளக்கப்பட்டது.

புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களில், சாலைகள், பாலங்கள், பொது கட்டடங்கள் எனப் பல்வேறு உட்கட்டமைப்புகள் சேதம் அடைந்துள்ளது குறித்தும், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, சிறு வியாபாரிகள், இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரமும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்தும் விளக்கமாக மாண்புமிகு ஒன்றியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இடைக்கால நிவாரணம்

மேலும், மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களைச் சீர்செய்திட இடைக்கால நிவாரணமாக ரூ.5,060 கோடி வழங்கிடக் கோரி மாண்புமிகு இந்தியப் பிரதம மந்திரி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளது குறித்தும் தெரிவித்து, புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கு ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசின் கோரிக்கையான இடைக்கால நிவாரணத் தொகையை விரைவில் வழங்கிட வேண்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை விடுத்தார்.

முன்னதாகச் சென்னை, அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் புயலால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளைப் பார்வையிட உடனடியாகச் சென்னைக்கு வருகை தந்து வெள்ள பாதிப்புகளைப் பார்வையிட்டமைக்காக மாண்புமிகு ஒன்றியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இக்கூட்டத்தின்போது, தமிழ்நாட்டில் 'மிக்ஜாம்' புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளைத் தெரிவித்து, இடைக்கால நிதியுதவி கோரும்

கோரிக்கை மனுவினை (Memorandum) மாண்புமிகு ஒன்றியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளித்தார்.

மாண்புமிகு ஒன்றியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்திற்கு பிறகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

சென்னையும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட பெருவெள்ளப் பாதிப்புகளை மாண்புமிகு ஒன்றியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் நேரில் ஆய்வு செய்துள்ளார்கள்.

இதற்குத் தமிழ்நாடு அரசின் சார்பிலும், தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்னையில் வரலாற்றில் இல்லாத அளவிற்குப் பெய்த பெருமழையினால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மீண்டு, சென்னை நகரமும், மக்களும் இயல்புநிலைக்கு வரத் தொடங்கியுள்ளனர்.

இந்தப் பெரும் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், தன்னார்வலர்கள் அனைவரும் இணைந்து களப்பணி ஆற்றி வருகின்றோம்.

தமிழ்நாடு அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் இத்தகைய பெருமழையிலும், உயிரிழப்புகளும், பொருட்சேதங்களும் பெருமளவில் தவிர்க்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சாலைகள், பாலங்கள், கட்டடங்கள் போன்ற பொதுக் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சீர்செய்வதற்கும், நிவாரண உதவிகளை வழங்குவதற்கும் ஏதுவாகத் தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.5,060 கோடியினை வழங்கிடுமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு ஏற்கெனவே நான் கோரிக்கை விடுத்திருந்தேன்.

நமது கோரிக்கைகள் குறித்த கோரிக்கை மனு ஒன்றினையும் மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களிடம் அளித்துள்ளேன். இழப்பீடுகளை மதிப்பீடு செய்திட ஒன்றிய அரசின் குழு ஒன்றும் விரைவில் தமிழ்நாடு வர உள்ளது.

தமிழ்நாடு அரசின் இந்தக் கோரிக்கைகளைப் பரிசீலித்து, உரிய நிதி உதவியை ஒன்றிய அரசு விரைவில் வழங்கிடும் என மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்கள் உறுதியளித்துள்ளார்கள்.

நிவாரணப் பணிகளை முழுவீச்சில் தொடர்ந்து மேற்கொண்டு, அனைத்துப் பகுதிகளையும் இயல்பு நிலைக்கு விரைவில் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000 நிவாரண உதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
அறிவிப்பு-09.12.2023

தமிழ்நாட்டில் டிசம்பர் 3, 4ஆம் தேதிகளில் வீசிய "மிக்ஜாம்" புயல் காரணமாகச் சென்னை மாவட்டத்தில் கடுமையான மழைப்பொழிவு ஏற்பட்டது. மேலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு, கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன.

முன்னதாக, "மிக்ஜாம்" புயலின் தாக்கம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கைகளின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இதுகுறித்துக் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டும், ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கு முன்னதாகவே திட்டமிடப்பட்டு, தேசியப் பேரிடர் மீட்புப் படை, மாநிலப் பேரிடர் மீட்புப் படை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய துறைகளைச் சார்ந்த மீட்புப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். மீட்புப் பணிகளுக்குத் தேவையான டீசல் மோட்டார் பம்புசெட்டுகளும், படகுகளும், ஜே.சி.பி. இயந்திரங்களும், மரம் அறுக்கும் கருவிகளும் சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலகங்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. இவை புயல் மழையின் தாக்கத்திற்குப் பிறகு உடனடியாகக் களத்தில் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டன.

மேலும், மீட்பு, நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்துவதற்காக 20 அமைச்சர் பெருமக்களும், 50க்கும் மேற்பட்ட இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி அலுவலர்களும் நியமிக்கப்பட்டு, நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டன.

இதுமட்டுமின்றி, 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின் வாரியப் பணியாளர்களும், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவப் பணியாளர்களும், ஆயிரக்கணக்கான தூய்மைப் பணியாளர்களும் இந்த மாபெரும் பணியில் இரவு, பகல் பாராமல் ஈடுபட்டனர். மழையினால் பாதிக்கப்பட்ட நான்கு மாவட்டங்களில், மக்களை மீட்க சுமார் 740 படகுகள் பயன்படுத்தப்பட்டன. இதன்மூலம், 26 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளப் பகுதிகளிலிருந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு உணவு வழங்கும் பணிக்கெனத் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, பெரிய அளவில் சமையல் அறைகள் நிறுவப்பட்டு, தரமான உணவு சமைக்கப்பட்டு, சென்னை மாவட்டத்தில் மட்டும் 08.12.2023 வரை, மூன்று வேளை உணவாக, மொத்தம் 47 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமாகச் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களில் இதுவரை 51 இலட்சத்திற்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், பால் ஆகிய பொருட்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் பெறப்பட்டு, முறையாக வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

வ. எண்.	வழங்கப்பட்ட பொருள்	விவரம்
1.	பால் பவுடர்	58,222 கிலோ
2.	குடிநீர் பாட்டில்கள்	9,67,000 எண்ணிக்கை
3.	பிரட் பாக்கெட்	2,65,000 எண்ணிக்கை
4.	பிஸ்கட் பாக்கெட்	10,38,175 எண்ணிக்கை

வெள்ளம் பாதித்த பகுதிகளில் மழைநீர் தற்போது வடிந்துள்ள நிலையில், அந்தப் பகுதிகளில் தற்போது 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களை ஈடுபடுத்தி, பேரிடர் மீட்புக் குழுவினரின் உதவியுடன் போர்க்கால அடிப்படையில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மருத்துவ முகாம்களும் தேவையான இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பல்வேறு மீட்பு, சீரமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவித்தொகை வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், தலைமைச் செயலகத்தில் 09.12.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். வெள்ள சேதம் குறித்தும், வழங்கப்பட வேண்டிய நிவாரணத் தொகை குறித்தும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

- இதனடிப்படையில், மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.6,000 வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்த நிவாரணத் தொகையினை, பாதிக்கப்பட்டவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளின் மூலம் ரொக்கமாக வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.
- அதுமட்டுமின்றி, புயல், வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு, இழப்பீட்டுத் தொகையை ரூ.4 இலட்சத்திலிருந்து, ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கிடவும்;
- சேதமடைந்த குடிசைகளுக்காக ஏற்கெனவே வழங்கப்படும் தொகை ரூ.5,000த்தினை, ரூ.8,000ஆக உயர்த்தி வழங்கிடவும்;
- மழையினால் பாதிக்கப்பட்ட (33 விழுக்காடும் அதற்கு மேலாகவும்) நெற்பயிர் உள்ளிட்ட இறவைப் பாசனப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500லிருந்து, ரூ.17,000ஆக உயர்த்தி வழங்கிடவும்;
- பல்லாண்டுப் பயிர்கள், மரங்கள் (Perennial crops and trees) சேதமுற்றிருப்பின் (33 விழுக்காடு, அதற்கு மேலாகவும்) இழப்பீடாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.18,000லிருந்து, ரூ.22,500ஆக உயர்த்தி வழங்கிடவும்;
- மழையினால் பாதிக்கப்பட்ட (33 விழுக்காடு, அதற்கு மேலாகவும்) மானாவாரிப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7,410லிருந்து, ரூ.8,500ஆக உயர்த்தி வழங்கிடவும்;
- எருது, பசு உள்ளிட்ட கால்நடைகளின் உயிரிழப்பு நிவாரணமாக ரூ.30,000 என்றிருந்ததை, ரூ.37,500ஆக உயர்த்தி வழங்கிடவும்;
- வெள்ளாடு, செம்மறி ஆடு உயிரிழப்பு நிவாரணமாக ரூ.3,000 என்றிருந்ததை, ரூ.4,000 ஆக உயர்த்தி வழங்கிடவும்;
- சேதமடைந்த படகுகள், வலைகளுக்கு நிவாரண உதவிகளைப் பொறுத்தவரையில், முழுமையாகச் சேதமடைந்த கட்டு மரங்களுக்கு (மீன்பிடி வலைகள் உட்பட), ரூ.32,000லிருந்து, ரூ.50,000ஆகவும், பகுதியாகச் சேதமடைந்த கட்டுமரங்களுக்கு ரூ.10 ஆயிரத்திலிருந்து, ரூ.15 ஆயிரமாகவும், முழுவதும் சேதமடைந்த வல்லம் வகை படகுகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை ரூ.75 ஆயிரத்திலிருந்து, ரூ.1 இலட்சமாகவும், முழுவதும் சேதமடைந்த இயந்திரப் படகுகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து, ரூ.7.50 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கிடவும், சேதமடைந்த வலைகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.10 ஆயிரத்திலிருந்து, ரூ.15 ஆயிரமாக உயர்த்தி வழங்கிடவும்;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மேனாள் இந்தியப் பிரதமர், சமூகநீதிக் காவலர் திரு. வி.பி.சிங் அவர்களின் முழு திருவுருவச் சிலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 27.11.2023 அன்று, சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் ரூ.52.20 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள மேனாள் இந்தியப் பிரதமர், சமூகநீதிக் காவலர் திரு. வி.பி.சிங் அவர்களின் முழு திருவுருவச் சிலையைச் சிறப்பு விருந்தினரான உத்திரப் பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. அகிலேஷ் யாதவ், திரு. வி.பி.சிங் அவர்களின் துணைவியார் திருமதி சீதா குமாரி, மகன் திரு. அஜயா சிங், அவரது குடும்பத்தினர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுத் தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள், அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ்ச் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பைப் பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்து
ஆற்றிய உரை - 27.11.2023

உத்திரப் பிரதேச மாநிலம், அலகாபாத் மாவட்டத்தில், மிகப்பெரிய ஜமீன்தாரரான ராஜா தயா பகவதி பிரதாப் சிங் அவர்களுக்கு மகனாகப் பிறந்தவர் திரு. விஸ்வநாத் பிரதாப் சிங் என்ற வி.பி.சிங் அவர்கள். கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே காந்திய இயக்கத்தில் ஈடுபட்டார்; சர்வோதய சமாஜில் இணைந்தார், பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்தார், தனது நிலங்களையே தானமாக வழங்கினார்.

1969ஆம் ஆண்டு உத்திரப் பிரதேச சட்டமன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். பின்னர் உத்திரப் பிரதேச மாநிலத்தின் முதலமைச்சராகவும், ஒன்றிய வர்த்தக அமைச்சராகவும், வெளியுறவுத் துறை அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும், பாதுகாப்புத்துறை அமைச்சராகவும் பதவி வகித்தார். தேசிய முன்னணியை உருவாக்கி 1989ஆம் ஆண்டு இந்தியாவின் பிரதமராகப் பதவி வகித்தார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது பட்டியலின, பழங்குடியினருக்கு ஒன்றிய அரசுப் பணியிடங்களில் தனி இடஒதுக்கீடு தரப்பட்டது. ஆனால், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, அவர்களது மக்கள் தொகைக்கு ஏற்ப இடஒதுக்கீடு தரப்படவில்லை. இதனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்தான் B.P. மண்டல் தலைமையிலான ஆணையம். சமூகரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படும் சமூகத்துக்கு, B.P. மண்டல் பரிந்துரையின் ஒன்றிய அரசுப் பணியிடங்களில் 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற உத்தரவை அமல்படுத்தியவர் திரு. வி.பி.சிங் அவர்கள்.

திரு. வி.பி.சிங் அவர்கள் பதவியிலிருந்த 11 மாத காலத்தில், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு, தகவல் அறியும் உரிமைச் சட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான தொடக்கப் புள்ளி, வேலை உரிமையை அரசியல் சாசன உரிமை ஆக்கியது, தேர்தல் சீர்திருத்தங்கள், மாநிலங்களுக்கிடையிலான கவுன்சில், தேசிய பாதுகாப்புக்குழு, உழவர்கள் பிரச்சினையைத் தீர்க்க மூன்று குழுக்கள், டெல்லி குடிசைப் பகுதி மக்களுக்கு வாழ்விடங்கள், அதிகபட்ச சில்லறை விற்பனை விலை (MRP) அச்சிடுதல் போன்றவற்றைச் செயல்படுத்திய மாபெரும் சாதனையாளர் ஆவார்.

தமிழ்நாட்டு மக்களின் உயிர்ப் பிரச்சினையான காவிரி நீருக்காக நடுவர் மன்ற ஆணையத்தை அமைத்துத் தந்ததோடு, சென்னையில் அமைந்துள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்குப் பெருந்தலைவர் காமராசர் பெயரையும், பன்னாட்டு விமான நிலையத்திற்குப் பேரறிஞர் அண்ணாவின் பெயரையும் சூட்டிய பெருமைக்குரியவர் திரு. வி.பி.சிங் அவர்கள். உயர்வர்க்கத்தில் பிறந்தாலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக சிந்தித்தவர், எத்தனை உயர் பதவி வகித்தாலும் கொள்கையை விட்டுத் தராதவர் திரு. வி.பி. சிங் அவர்கள்.

இத்தகைய ஒப்பற்ற தலைவரான திரு.வி.பி.சிங் அவர்களின் நினைவைப் போற்றும் வகையிலும், அவருக்கு தமிழ்ச் சமுதாயத்தின் நன்றியைத் தெரிவிக்கும் வகையிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.04.2023 அன்று சட்டப்பேரவை விதி 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், சமூகநீதிக் காவலர், மேனாள் இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், சென்னையில் அவரது முழு உருவக் கம்பீரச் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் ரூ.52.20 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள மேனாள் இந்தியப் பிரதமர், சமூகநீதிக் காவலர் திரு. வி.பி.சிங் அவர்களின் முழு திருவுருவச் சிலையை சிறப்பு விருந்தினரான உத்திரப் பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. அகிலேஷ் யாதவ், திரு. வி.பி.சிங் அவர்களின் துணைவியார் திருமதி சீதா குமாரி, மகன் திரு. அஜயா சிங் அவர்கள், அவரது குடும்பத்தினர் முன்னிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

வி.பி.சிங் அவர்களுக்கு சிலை அமைக்கின்ற மகத்தான வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி இன்றைக்கு நான் மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் இருக்கிறேன்!

150 ஆண்டு பழமை வாய்ந்த மாநிலக் கல்லூரி வளாகத்தில், வி.பி.சிங் அவர்களின் அருமை நண்பர், தலைவர் கலைஞர் அவர்கள் நீடுதுயில் கொண்டிருக்கின்ற கடற்கரைச் சாலையில் சமூகநீதியின் சின்னமாம் வி.பி.சிங் அவர்களுக்கு சிலை அமைக்கப்பட்டுள்ளது.

எண்ணிப் பார்க்கிறேன்... மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளைப் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் அமல்படுத்தியபோது, சில ஆதிக்க சக்திகள் அதை எதிர்த்தார்கள். வன்முறைப் போராட்டங்களையும் நடத்தினார்கள். அந்த நேரத்தில், அதேநேரத்தில், தலைவர் கலைஞர் தலைமையில் இதே கலைவாணர் அரங்கத்தில் ஒரு கவியரங்கம் நடந்தது. மிகுந்த கோபத்துடன் அன்றைய நாள் கவிதை கர்ஜனை செய்தார் தலைவர் கலைஞர் அவர்கள். அந்தக் கவிதையின் சில வரிகளை மட்டும் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன்.

"மண்டல் குழு பரிந்துரையை மைய அரசு ஏற்றமைக்கு மகத்தான வெற்றி விழா! மனிதாபிமானி வி.பி.சிங்கிற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கும் திருவிழா!" என்று தொடங்கி, சமூகநீதிக்கான குரலாகத் தலைவர் கலைஞருடைய கவிதை வரிகள் அனல் தெறித்தது!

"ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் எனில் அவன் உயர்சாதிக்கு மட்டும் தங்கத்தால் மூளை செய்து தலைக்குள்ளே வைத்தானா? மற்ற சாதிக்கெல்லாம் மண்டைக்குள் இருப்பதென்ன? களிமண்ணா? சுண்ணாம்பா? கட்டை விரலோ, தலையோ காணிக்கையாக - இந்நாளில் எவரும் கேட்டால் பட்டை உரியும், சுடுகாட்டில் அவர் கட்டை வேகும்" என்று தலைவர் கலைஞருடைய பேச்சில், உணர்ச்சிக் கொந்தளித்தது! இப்போதுகூட இந்தக் கலைவாணர் அரங்கத்தில் அந்தக் கவிதை வரிகளின் வெப்பத்தை என்னால் உணர முடிகிறது!

வி.பி.சிங் அவர்கள் பிறந்த உத்திரப் பிரதேச மாநிலத்தின் Former Chief Minister - Present Leader of Opposition - My dear brother Future Chief Minister அகிலேஷ் அவர்கள், இங்கு வருகை தந்துள்ளார். வி.பி.சிங் அவர்களுக்குப் பிடித்த தலைவரான, ராம் மனோகர் லோகியா அவர்களால் உருவாக்கப்பட்ட முலாயம் சிங் அவர்களின் மகனான அகிலேஷ் அவர்கள், வி.பி.சிங் அவர்களுடைய சிலை திறப்பு விழாவுக்கு வந்திருக்கிறார்.

வி.பி.சிங் அவர்களுக்குத் தாய் வீடு, உத்தரப்பிரதேசம் என்றால், தமிழ்நாடுதான், தந்தை வீடு! தந்தை பெரியார் பெயரை உச்சரிக்காமல் அவருடைய பேச்சு இருக்காது. அதனால்தான் அப்படிப்பட்ட தந்தை பெரியாருடைய சமூகநீதி மண்ணில் வி.பி.சிங்

அவர்களுக்கு முதன்முதலாகச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. நானும், மரியாதைக்குரிய வி.பி.சிங் அவர்களும் இரண்டு முறை சந்தித்து இருக்கிறோம்.

சென்னையில் இளைஞர் படை

முதல் சந்திப்பு, 1988ஆம் ஆண்டு தேசிய முன்னணியின் தொடக்கவிழா சென்னையில் நடந்தது! அப்போது இளைஞர் அணி சார்பில், மாபெரும் ஊர்வலத்தை நான்தான் தலைமை தாங்கி நடத்தி வந்தேன். கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் இளைஞர்கள் பங்கெடுத்த அந்த ஊர்வலத்தை, இதே அண்ணாசாலையில், காயிதே மில்லத் கல்லூரி, அன்றைக்கு Arts College என்று பெயர். அந்தக் கல்லூரிக்கு அருகில் மேடை அமைத்து, மாலை தொடங்கி இரவு வரை மேடையில் இருந்தபடி, வியந்தபடி பார்த்து வாழ்த்தினார் வி.பி.சிங் அவர்கள். அப்போது நான் அவரிடம் பேச வாய்ப்புக் கிடைக்கவில்லை. அடுத்த சந்திப்பு, அவர் பிரதமராக ஆனபோது, டெல்லிக்கு சென்று எம்.எல்.ஏ. குழுவில் நான் இருந்தேன். சட்டமன்றத்தில் எல்லாக் கட்சி எம்.எல்.ஏ-க்களும் பல குழுக்கள் அமைத்தார்கள். அதில் ஒரு குழுவில் நான் இடம் பெற்றிருந்தேன். அப்போது டெல்லிக்கு சென்றபோது, ஒவ்வொருவராக அவருக்கு அறிமுகம் செய்தார்கள். அப்போது என்னிடம் வந்தபோது, என்னை அறிமுகம் செய்து வைத்தபோது, அவர் சிரித்துக்கொண்டே சொன்னார். "இவரை எப்படி மறக்க முடியும். இவர்தான் சென்னையில் இளைஞர் படையை அணிவகுத்து நடத்தினார்!" என்று மறக்காமல் பாராட்டினார் பிரதமர் வி.பி.சிங்.

அந்தப் பாராட்டு என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வு! இன்றைக்கு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று அவருக்குச் சிலை திறந்திருக்கிறேன் என்றால், இதைவிட என்ன பெருமை எனக்கு வேண்டும்? எங்களுடைய அழைப்பை ஏற்று, இங்கு வருகை தந்துள்ள வி.பி.சிங் அவர்களின் மனைவி சீதா குமாரி அவர்களுக்கும், அவருடைய மகன் அஜயா சிங் அவர்களுக்கும் உங்களுடைய அனைவரின் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வி.பி.சிங் குடும்பத்தினர் என்று உங்களை நான் அழைக்க விரும்பவில்லை. நீங்கள் வி.பி.சிங் குடும்பத்தினர் என்றால் நாங்கள் யார்? நாங்களும் வி.பி.சிங் குடும்பத்தினர்தான்!

இந்தியா முழுமைக்கும் பரவி இருக்கின்ற சமூகநீதிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள்! வி.பி.சிங் அவர்களுக்குச் சிலை வைப்பது மூலமாக அவருடைய புகழ் உயருகிறது என்று பொருள் இல்லை; நாம் அவருக்குக் காட்ட வேண்டிய நன்றியைக் காட்டி இருக்கிறோம்!

காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சமூகநீதிக் கதவைத் திறந்து வைத்தவர் வி.பி.சிங் அவர்கள். தன்னுடைய பிரதமர் பதவி போனாலும் பரவாயில்லை என்று அதில் உறுதியாக இருந்தவர் வி.பி.சிங். அவருக்கு சிலை அமைப்பதை இந்தத் திராவிட மாடல் அரசு தன்னுடைய கடமையாகக் கருதுகிறது.

தேசிய முன்னணியை உருவாக்கியவர்

சமூகநீதியைக் காக்கின்ற கடமையில் இருந்து இம்மியளவும் வழுவாமல் இந்தத் திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.

வி.பி.சிங் அவர்களைப் பற்றியும், அவரது தியாக வாழ்க்கை பற்றியும் இந்திய மண்ணில் உள்ள ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக, இளைஞர்களுக்கு அவருடைய வாழ்வு திரும்பத் திரும்பச் சொல்லப்படவேண்டும். அதனால்தான் மாநிலக் கல்லூரியில் அவருடைய சிலையை அமைத்திருக்கிறோம்.

வி.பி.சிங் அவர்கள் உத்திரப் பிரதேச மாநிலத்தில் மிகப்பெரிய ஜமீன்தாருக்கு மகனாகப் பிறந்து, ஆடம்பர வாழ்க்கை வாய்த்தாலும், அதில் மனது ஒட்டாமல் கல்லூரிப் படிக்கின்ற காலத்திலேயே காந்திய இயக்கத்தில் ஈடுபட்டார். சர்வோதய சமாஜில் இணைந்தார். பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்தார். வினோபா அவர்களிடம் தன்னுடைய நிலங்களையே தானமாக வழங்கினார்.

1969ஆம் ஆண்டு உத்திரப் பிரதேச சட்டமன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். உத்திரப் பிரதேச மாநிலத்தின் முதலமைச்சர், இந்திய ஒன்றியத்தில் வர்த்தக அமைச்சர், நிதி அமைச்சர், பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆகிய உயர் பதவிகளை வகித்தார். தேசிய முன்னணியை உருவாக்கி 1989ஆம் ஆண்டு இந்தியாவின் பிரதமராகவே ஆனார்.

மாண்புமிகு வி.பி.சிங் அவர்கள் பிரதமராக இருந்தது பதினோரு மாதம்தான் என்றாலும், அவர் செய்த சாதனைகள் மகத்தானவை! இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய மக்கள்தொகைக்கு ஏற்ப, இடஒதுக்கீடு தரப்படவில்லை. அதை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்தான் பி.பி.மண்டல் தலைமையிலான ஆணையம்!

சமூகநீதிக் காவலர்

சமூகரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படுகின்ற சமூகத்துக்கு ஒன்றிய அரசுப் பணியிடங்களில் 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பி.பி.மண்டல் பரிந்துரையின் உத்தரவை அமல்படுத்திய சமூகநீதிக் காவலர்தான் வி.பி.சிங் அவர்கள்.

வி.பி.சிங் அவர்கள் பிறப்பால் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் அல்ல! ஏன், ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்தவரும் அல்ல! ஆனாலும் ஏழை – எளிய, பிற்படுத்தப்பட்ட – ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இடஒதுக்கீட்டைச் சாத்தியப்படுத்திக் காட்டியவர்! அப்போது நாடாளுமன்றத்தில் தந்தை பெரியார் – புரட்சியாளர் அம்பேத்கர் – ராம் மனோகர் லோகியா ஆகிய மூவருடைய பெயரைத்தான் வி.பி.சிங் அவர்கள் குறிப்பிட்டார். தந்தை பெரியாருக்குத் தனிப்பட்ட நன்றியை நாடாளுமன்றத்தில் பதிவு செய்தார். பதவியில் இருந்த பதினோரு மாத காலத்தில்,

- பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு, தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்குத் தொடக்கப்புள்ளி, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்குத் தொடக்கப்புள்ளி, வேலை உரிமையை அரசியல் சாசன உரிமை உருவாக்கியது, லோக்பால் சட்டத்துக்குத் தொடக்க முயற்சிகள், தேர்தல் சீர்திருத்தங்கள், அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்குப் பாரத ரத்னா விருது, நாடாளுமன்றத்தின் நடுவே அண்ணல் அம்பேத்கர் படம், மாநிலங்களுக்கு இடையிலான கவுன்சில், உழவர்கள் பிரச்சினையைத் தீர்க்க மூன்று குழுக்கள், டெல்லி குடிசைப்பகுதி மக்களுக்கு வாழ்விடங்கள், அதிகபட்ச சில்லறை விற்பனை விலை (MRP) அச்சிட உத்தரவு, நுகர்வோர் பாதுகாப்பு என இன்னும் பட்டியல் நிறைய இருக்கிறது!

இப்படிப் பல சாதனைகளைச் செய்து காட்டிய மாபெரும் சாதனையாளர்தான் நம்முடைய வி.பி.சிங் அவர்கள். மதிப்பிற்குரிய சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் முயற்சியால்தான் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒரு அடியாவது முன்னேறியிருக்கிறார்கள். நாம் இன்னும் பல உயரங்களுக்குச் செல்லவேண்டும்.

நமக்கான உரிமைகள் இன்றைக்கும்கூட முழுமையாகக் கிடைக்காத – கிடைக்க முடியாத சூழல்தானே நிலவுகிறது! குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், கல்வி நிறுவனங்களில் ஓபிசி இடஒதுக்கீடு 2006க்கு பிறகுதான் நடைமுறைக்கு வந்தது.

இடஒதுக்கீடு இல்லாத நிலை

பல்கலைக்கழக மானியக்குழு இணை இயக்குநர் பதவிக்கு இடஒதுக்கீடே கிடையாது. எல்லாமே பொதுப்பிரிவு! ஒன்றிய அரசின் துறைச் செயலாளர்கள் 89 பேரில் 85 பேர் உயர்சாதியினர். பட்டியலினப் பிரிவைச் சேர்ந்தவர் ஒரே ஒருவர், பழங்குடிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் 3 பேர் மட்டும்தான்! பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் கூட கிடையாது! ஒன்றிய அரசுத் துறைகளின் கூடுதல் செயலாளர்கள் 93 பேரில், 82 பேர் உயர்சாதியினர். பிற்படுத்தப்பட்டவர் கிடையாது! ஒன்றிய அரசு துறைகளின் இணைச் செயலாளர்கள் 275 பேரில், 19 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள்! அசாம், உத்திரப் பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்கண்ட் உள்ளிட்ட பல மாநிலங்களில் இருக்கின்ற மத்திய சட்டப் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கையில் இந்த ஆண்டு வரை இடஒதுக்கீடே இல்லாத நிலைதான் நீடிக்கிறது.

45 மத்தியப் பல்கலைக்கழகங்களில், பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பேராசிரியர்கள் 4 விழுக்காடு மட்டும்தான்! இப்படித்தான் பல்வேறு துறைகளில் இன்றைக்கும் நிலைமை இருக்கிறது.

சரி, நீதிமன்றங்களில் சமூகநீதியின் நிலை என்ன? 2018 முதல் 2023 வரை நாடு முழுவதும் உயர்நீதிமன்றங்களில் நியமிக்கப்பட்ட 604 நீதிபதிகளில், 72 பேர் மட்டும்தான் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள். ஆனால், 458 பேர் பொதுப்பிரிவைச் சேர்ந்தவர்கள்.

சட்ட முயற்சிகள்

உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு முறை அமல்படுத்தப்படவில்லை. ஏன், அரசுத் துறைகளின் பதவி உயர்வுகளின்போது இடஒதுக்கீடு முறை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த நிலையை எல்லாம் மாற்றுவதற்குத்தான் நாம் தொடர்ந்து உழைக்கவேண்டும். அதுதான் வி.பி.சிங் போன்றோருக்கு நாம் செலுத்துகின்ற உண்மையான புகழ் வணக்கம்!

அந்தப் பணியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் ஒருபோதும் சோர்ந்து போகாது. அதற்கு எடுத்துக்காட்டுதான், நாம் ஆட்சிக்கு வந்தவுடன் அன்றிலிருந்து இன்றைக்கு வரை நாம் முன்னெடுக்கின்ற சட்ட முயற்சிகள்!

இந்தியா முழுவதும் மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில் இல்லாமல் இருந்த ஓபிசி இடஒதுக்கீட்டை 29.07.2021 அன்று உச்சநீதிமன்றம் மூலமாகத் திராவிட முன்னேற்றக் கழகம்தான் இந்தியாவிற்கே பெற்றுத் தந்தது! அதுமட்டுமா! தமிழ்நாட்டில் சமூகநீதியைக் கண்காணிக்க குழு அமைத்திருக்கிறோம்.

பெரியாரின் சுயமரியாதை

தந்தை பெரியார் பிறந்தநாளை சமூகநீதி நாளாகவும் – புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாளை சமத்துவ நாளாகவும் கொண்டாடி வருகிறோம். சமூகநீதிக்குத் தடையாக அமைந்துள்ள நீட் தேர்வை அகற்றும் சட்டப்போராட்டத்திலும், அறப்போராட்டத்திலும் ஈடுபட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நம்முடைய தமிழ்நாட்டைத்தான் தன்னுடைய ரத்த சொந்தங்கள் வாழுகிற மாநிலமாக நினைத்தார் வி.பி.சிங் அவர்கள். தந்தை பெரியாரைத் தன்னுடைய உயிரினும் மேலான தலைவராக வி.பி.சிங் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

“ஒரு மனிதனுக்குச் சாவைவிட மிகக் கொடுமையானது ‘அவமானம்’. அந்த அவமானத்தைத் துடைக்கின்ற மருந்துதான் பெரியாரின் “சுயமரியாதை” என்று சொன்னவர் வி.பி.சிங் அவர்கள். தலைவர் கலைஞர் அவர்களைச் சொந்தச் சகோதரனைப் போல மதித்தார்.

“காலம் மாறினாலும்தான் மட்டும் மாறாமல் இருக்கிற ஒரு தலைவர் உண்டென்றால் அது கலைஞர் அவர்கள்தான். பதவியைக் காப்பாற்றிக் கொள்ள என்னுடைய கட்சி முதலமைச்சர்களே என்னை விட்டு ஓடிய நேரத்தில் என்னுடன் இருந்தவர் கலைஞர் அவர்கள்” என்று பாராட்டியவர் வி.பி.சிங் அவர்கள்.

வி.பி.சிங் அவர்களுக்கும், கலைஞருக்கும் இருந்த நட்பு எப்படிப்பட்டது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு சொல்கிறேன். சென்னைக் கடற்கரையை நோக்கி பிரதமர் வி.பி.சிங் அவர்களுடைய கார் செல்கிறது. முதலமைச்சர் கலைஞரும் கூட இருந்தார். வி.பி.சிங் அவர்கள், “உங்களுடைய வீட்டுக்குப் போகவேண்டும், காரை அங்கே போகச் சொல்லுங்கள்” என்று சொல்கிறார். ஆனால் அவருடன் இருந்த பிரதமருடைய செயலாளர் அவர்கள், புரோட்டகால்படி கடற்கரைப் பொதுகூட்டம், ஆளுநர் மாளிகையில் தங்குவது, இது இரண்டைத் தவிர வேறு இடத்திற்குச் செல்லக்கூடாது” என்று தடுத்திருக்கிறார். ஆனால், பிரதமர் வி.பி.சிங் அவர்கள், அதைக் கோபமாக மறுத்து, “நிச்சயமாக முதலமைச்சர் இல்லத்திற்குச் சென்றுதான் ஆகவேண்டும்” என்று சொல்லி, கோபாலபுரம் இல்லத்திற்கு சென்றுவிட்டுத்தான் கடற்கரைப் பொதுக் கூட்டத்திற்குப் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் சென்றார்.

விமான நிலையத்திற்கு பேரறிஞர் அண்ணா பெயர்

தலைவர் கலைஞர் மேல் எத்தகைய மதிப்பையும், அன்பையும் பிரதமர் வி.பி.சிங் வைத்திருந்தார் என்பதற்கு இது ஒரு பெரிய எடுத்துக்காட்டு!

அந்தக் கடற்கரைக் கூட்டத்தில்தான், சென்னையில் இருக்கின்ற இரண்டு விமான முனையத்துக்குப் பேரறிஞர் அண்ணா பெயரையும், பெருந்தலைவர் காமராசர் பெயரையும் வைக்கவேண்டும் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கோரிக்கை வைத்தார். அப்போதெல்லாம் செல்ஃபோன் கிடையாது. அவருக்கென்று ஒரு பிரைவேட் ரூம் இருக்கும், அதில் லைட்டினிங் கால் இருந்தது, அதிலிருந்துதான் ஃபோன் பேச முடியும். பிரதமர் வி.பி.சிங் மேடையிலிருந்து கீழே இறங்கி வந்து, டெல்லிக்கு Lightning call செய்து சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் பேசி, இப்படி ஒரு கோரிக்கை இருக்கிறது, இதை நிறைவேற்றவேண்டும் என்று கலந்துபேசி அதை அந்த மேடையில் அறிவித்தார். அதே மேடையில் கலைஞர் அவர்கள் கேட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவேன் என்று அறிவித்தார். இன்றைக்கு அந்தப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

கலைஞரின் கருத்துதான் என் கருத்து

இங்கே அண்ணன் துரைமுருகன் அவர்கள் இருக்கிறார், காவிரி பிரச்சினை பற்றி அவருக்கு முழுமையாகத் தெரியும், முழுமையாக அறிந்தவர். அவர் அதில் பின்னிப் பிணைந்தவர். தமிழ்நாட்டு மக்களுடைய உயிர் பிரச்சினையான காவிரி நீருக்காகப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, பல போராட்டங்களுக்குப் பிறகு, தலைவர் கலைஞருடைய கோரிக்கை ஏற்று, வி.பி.சிங் அவர்கள் ஆட்சியில் தான் காவிரி நடுவர் மன்றத்தை அமைத்துத் தந்தார்.

அதேபோல், இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் எவ்வளவு அக்கறையோடு நடந்துகொண்டார் என்றால், தன்னுடைய வீட்டிலேயே அகில இந்தியத் தலைவர்களையும் – மாநில முதலமைச்சர்களையும் 1990ஆம் ஆண்டு கூட்டினார்.

9 மாநில முதலமைச்சர்கள் – 7 ஒன்றிய அமைச்சர்கள் – 5 அகில இந்தியக் கட்சித் தலைவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். எல்லோரையும் வரவழைத்து, தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞரைத்தான் பேசச் சொன்னார் பிரதமர் வி.பி.சிங். பேசச் சொன்னதற்குப் பிறகு சொல்கிறார், 'இப்போது கலைஞர் சொல்லப் போவதுதான் என்னுடைய கருத்து' என்று சொன்னவர் வி.பி.சிங் அவர்கள்.

கலைஞர் அவர்கள் மீதும், தமிழினத்தின் மீதும் வி.பி.சிங் அவர்கள் எந்தளவுக்குப் பாசம் வைத்திருந்தார் என்பதற்கு இதைவிட எடுத்துக்காட்டுத் தேவையில்லை!

இன்னொரு சம்பவத்தை சொல்கிறேன்.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம்

"தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் டெல்லியில்தான் கூட்டணுமா? மாநிலங்களில் கூட்டலாமே?" என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கோரிக்கை வைத்தார். 'அப்படியென்றால், தமிழ்நாட்டில் நடத்துவீர்களா?' என்று பிரதமர் வி.பி.சிங் கேட்டார். உடனே, சரி என்று சொன்னார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

முதன்முதலாகத் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் சென்னையில் நடந்தது என்பது வரலாறு! நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் அடிக்கடி பிரதமர் வி.பி.சிங் சொல்வது, "நீங்கள் கோரிக்கைகளை எடுத்துக்கொண்டு டெல்லிக்கு வரக்கூடாது, சென்னையில் இருந்து சொன்னால் போதும்" என்று சொன்னவர் பிரதமர் வி.பி.சிங் அவர்கள். எத்தகைய வசந்த காலங்களை நாம் பார்த்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கும் போது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

சமூகநீதியின் காவலர்

அதேபோன்ற காலம் இனியும் வரவேண்டும். அது நாம் ஒன்றிணைந்து உழைத்தால் முடியும்! வி.பி.சிங் அவர்கள் உடல்நலிந்த நிலையில்கூட டெல்லி மக்களுடைய குடியிருப்புப் போராட்டத்தில் பங்கெடுத்தவர்! 'அரசியல் நாட்காட்டியில் கடைசி நாள் என்பதே இல்லை' என்று கம்பீரமாகச் சொன்னவர். ஏற்றுக்கொண்ட கொள்கையில் இறுதிவரை உறுதியாக இருந்த வி.பி.சிங் அவர்கள், உடல்நலக்குறைவால் 2008ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் நாள் மறைந்தார்.

வி.பி.சிங் அவர்களுடைய மறைவு இந்தியாவுக்கே ஏற்பட்ட பெரும் இழப்பு! சமூகநீதியின் காவலரான வி.பி.சிங் அவர்களுக்குச் சிலை வைத்ததன் மூலமாகத் தமிழ்நாடு அரசு இன்றைக்குப் பெருமை அடைகிறது. சமூகநீதிப் பயணத்தில் நாம் செல்ல வேண்டிய தூரம் மிக அதிகம்!

சமூகநீதி என்பது ஒரு மாநிலத்தின் பிரச்சினை இல்லை; எல்லா மாநிலங்களின் பிரச்சினை! ஒவ்வொரு மாநிலத்துக்கும் சாதி - வகுப்பு அளவீடுகள் வேறுபடலாம். ஆனால் பிரச்சினை ஒன்றுதான்! அதுதான், புறக்கணிப்பு! எங்கெல்லாம் புறக்கணிப்பு – ஒதுக்குதல் – தீண்டாமை –அடிமைத்தனம் – அநீதி இருக்கிறதோ, அங்கெல்லாம் அதை முறிக்கின்ற மருந்தாக இருப்பதுதான் சமூகநீதி! அந்தச் சமூகநீதி தழைக்க வேண்டுமானால், நாம் முன்னெடுக்க வேண்டிய சில முக்கியப் பணிகளைச் சொல்லி, நிறைவு செய்ய விரும்புகிறேன்.

சமூகநீதி தீபம் அணையாது

தாமதப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தும்போது சாதிவாரிக் கணக்கெடுப்பையும் ஒன்றிய அரசு நடத்த வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முழுமையாக முறையாக வழங்கப்படவேண்டும். பட்டியலின – பழங்குடியின மக்களுடைய இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்படவேண்டும். சிறுபான்மையினர் இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்படவேண்டும். இதையெல்லாம் அகில இந்திய ரீதியில் கண்காணித்து, உறுதிசெய்ய அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும். இதனையெல்லாம் அகில இந்திய அளவில் சமூகநீதியில் ஆர்வம் கொண்ட அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒற்றுமையாக இணைந்து மக்கள் நலனுக்காகச் செயல்படவேண்டும்.

சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் சிலைத் திறப்பு நாளில் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய உறுதிமொழி; "இந்தியா முழுமைக்கும் வாழும் பிற்படுத்தப்பட்ட – பட்டியலின – பழங்குடியின – சிறுபான்மை – விளிம்பு நிலை மக்களுடைய உயர்வுக்கான "அரசியல் செயல்திட்டங்கள்" "அரசின் செயல்திட்டங்களாக" மாற்றி அமைக்க இன்றைக்கு உறுதி ஏற்போம்! உறுதி ஏற்போம்!" என்று கூறி,

"வி.பி.சிங் அவர்கள் மறையலாம். அவர் ஏற்றி வைத்த சமூகநீதி தீபம் அணையாது. அவரை யார் மறந்தாலும், தமிழ்நாடு மறக்காது. திராவிட மாடல் அரசு மறக்காது! மறக்காது!" என்று கூறி விடைபெறுகிறேன்.

திராவிடப் பேரொளி அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு
திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 01.12.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 01.12.2023 அன்று, செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் ரூ.2.49 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள திராவிடப் பேரொளி அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தைத் திறந்து வைத்தார்.

திராவிடப் பேரொளி அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள் கி.பி. 1845ஆம் ஆண்டு மே 20ஆம் நாள் பிறந்தவர். இவருடைய தந்தையார் திரு. கந்தசாமி, தாய் திருமதி ஆதிலட்சுமி. அயோத்திதாசரின் இயற்பெயர் காத்தவராயன். அவர் அயோத்திதாச தமிழ்க் கவிராய பண்டிதரிடம் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளுடன், சித்த மருத்துவமும் நன்கு கற்றுத் தேர்ந்தார். ஆசிரியர்பால் கொண்ட பற்றால் தன் பெயரை அயோத்திதாசர் என மாற்றிக் கொண்டார். சித்த மருத்துவம் கற்று சிறந்த மருத்துவராகத் திகழ்ந்தார்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் சிறுவனாக இருந்தபோது, அவருக்கு ஏற்பட்டிருந்த நோய்க்குத் தக்க மருந்து கொடுத்து அவரைக் குணப்படுத்தியுள்ளார். இதனை, திரு.வி.க. அவர்கள், தம்முடைய "வாழ்க்கைக் குறிப்புகள்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அயோத்திதாசர் இப்படிச் சித்த மருத்துவ வல்லுநராகத் திகழ்ந்தபோதும், அன்றைய சமுதாயத்தில் நிலவிய சாதிக் கொடுமைகளைக் கண்டு கொதித்து, அவற்றை எதிர்த்து ஒரு போராளியாக உருவெடுத்தார்.

அயோத்திதாசர் தமிழ், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம் ஆகிய பல மொழிகளில் தனிப் புலமை பெற்று, இலக்கியம், இலக்கணம், கணிதம், மருத்துவம், பவுத்தத் தத்துவம் உள்ளிட்ட பலதுறை நூல்களையும் ஆழ்ந்து கற்றுள்ளார். இத்தகைய ஆழ்ந்த படிப்பே அவரது புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளம் அமைத்தது.

ஆதிதிராவிட சமுதாயத்தை முன்னேற்றுவதற்கு உறுதிகொண்டு பாடுபடத் தொடங்கிய அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள் 1870ஆம் ஆண்டில் அத்வைதானந்த சபையை ஏற்படுத்தினார். 1881ஆம் ஆண்டு மக்கள்

தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டபோது தாழ்த்தப்பட்டவர்களை, "பஞ்சமர்", "பறையர்" எனக் குறிப்பிடாமல், "பூர்வத் தமிழர்" அல்லது ஆதித்தமிழர் எனப் பதிவு செய்யுமாறு, அன்றைய ஆங்கிலேய அரசிடம் கோரிக்கை வைத்தார். 1890இல் திராவிட மகாஜன சபையைத் தொடங்கினார். அதன் முதல் மாநாட்டை நீலகிரியில் 01.12.1891இல் நடத்தி, அதன்மூலம் 10 தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றைச் செயல்படுத்தி உதவுமாறு ஆங்கிலேய அரசுக்கு அனுப்பினார். அப்போது, அயோத்திதாசருக்குத் துணையாக நின்றவர்களில் மீனவர்குல மாமேதை எனப் போற்றப்பட்ட சிந்தனைச்சிற்பி ம.சிங்காரவேலர், பேராசிரியர் லட்சுமி நரசு நாயுடு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

"இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்குச் சாதியும், மதமுமே தடை" என்று கூறியவர் அயோத்திதாசர். சாதி பேதத்தை அகற்றி சமத்துவ சிந்தனை வளர்க்க அயோத்திதாசர், 1885இல் ரெவரெண்ட் ஜான் ரத்தினத்தோடு இணைந்து, "திராவிடப் பாண்டியன்" எனும் வார இதழைத் தொடங்கினார். பின்னர் 1907இல், "ஒரு பைசாத் தமிழன்" எனும் பெயரில் பத்திரிகையைத் தொடங்கினார். இப்பத்திரிகை, 19.06.1907 முதல் 19.08.1908 வரை 62 இதழ்களை வெளியிட்டுள்ளது. புதன்கிழமை தோறும் 4 பக்கங்களாக வெளிவந்த இந்தப் பத்திரிகையை அச்சிட 20.08.1908 அன்று அச்சகத்தார் மறுத்தபோது, புதிய அச்சகத்தில் இப்பத்திரிகை, "தமிழன்" எனும் பெயரில் 02.09.1908 அன்று பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு பைசாத் தமிழன் பெயரில் வெளிவந்த 62 இதழ்களிலும் அரசியல், சமூகச் சீர்திருத்தம், தந்தி செய்திகள் கடிதங்கள் முதலியவை இடம் பெற்றன. இந்த இதழ்களில் எழுதப்பட்ட தொடர்கள் யாவும் இன்றைய முனைவர்பட்ட ஆய்வேடுகளையும் மிஞ்சக் கூடியவை என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சாதிமத வெறியுணர்வுகளை முழுமையாக அழிப்பதற்குச் சரியான சான்றுகளை இலக்கண, இலக்கிய, தமிழ், பாலி, சமஸ்கிருத மொழிச் சான்றுகள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

அயோத்திதாசரின் சிந்தனைகள் தமிழ்ச் சமுதாயத்தில் விழிப்புணர்வையும், எழுச்சியையும் ஏற்படுத்தியவை. பல்வேறு நூல்களையும், ஏராளமான கட்டுரைகளையும் படைத்த அவர் 1914ஆம் ஆண்டு காலமானார்.

தந்தை பெரியார் அவர்கள், அயோத்திதாசப் பண்டிதரைப் பற்றிக் குறிப்பிடும்போது, "என் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும், சீர்திருத்தக் கருத்துக்களுக்கும் இவரே முன்னோடி" என்று கூறிப் புகழ்ந்துள்ளார்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் தம்முடைய, "திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்" என்னும் நூலில், "பேர்" பெற்ற மருத்துவர் அயோத்திதாசரால்தான் "என்னுடைய மதப் பற்று ஒழிந்தது" என்று இவரைப் பற்றி மனம் திறந்து பாராட்டியுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திராவிடப் பேரொளி அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் பெருமைகளைப் போற்றும் வகையில் 21.10.2006 அன்று அயோத்திதாசரின் அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், அயோத்திதாசர் சமூகநீதித் தளத்தில் ஆற்றிய தொண்டுகளைப் போற்றிப் புகழும் வகையில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் 110 விதியின்கீழ், 03.09.2021 அன்று உரையாற்றுகையில், "1845 முதல் 1914 வரை வாழ்ந்த அயோத்திதாசர் அவர்களுடைய 175ஆவது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவரது அறிவை வணங்கும் விதமாகவும் அவருக்கு நினைவரங்கம் அமைக்கப்படும்" என்று அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.

அந்த அறிவிப்பின்படி, "தமிழன்", "திராவிடன்" எனும் இந்த இரண்டு சொற்களையும் அரசியல் களத்தில் அடையாளச் சொல்லாக மாற்றி, அறிவாயுதம் ஏந்திய திராவிடப் பேரொளி அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் ரூ.2.49 கோடி செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலை, நூலகம் ஆகியவற்றுடன் கூடிய மணிமண்டபத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

தமிழ்நாட்டினுடைய அறிவியக்கத்தின் மாபெரும் பேரொளியாகத் திகழ்ந்த அயோத்திதாசப் பண்டிதருக்கு நம்முடைய திராவிட மாடல் அரசு மணிமண்டபம் அமைத்து சிறப்பு செய்கிறது. இது அரசுக்குக் கிடைத்த மிகப்பெரிய பெருமை!

"வான்புகழ் வள்ளுவர்! அறநெறி இலக்கணம் வகுத்த அவ்வை! சமரச நெறி வகுத்த வள்ளலார்! இந்த வரிசையில், தமிழ்ச் சிந்தனை மரபை வளர்த்தெடுத்த மாபெரும் ஆளுமையான அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் பெருமையைப் போற்றும் வகையில், சென்னையில், அவருடைய திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும்" என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் கடந்த 03.09.2021 அன்று நான் அறிவித்தேன்.

சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அயோத்திதாசப் பண்டிதருடைய திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் எழில்மிகு தோற்றத்தோடு 'அறிவொளி இல்லமாக' அமைக்கப்பட்டிருக்கிறது.

அறிவுலகப் பேரொளியான அவருடைய மணிமண்டபத்தைத் திறந்து வைக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

➢ எழுத்தாளர், ஆய்வாளர், வரலாற்று ஆசிரியர், மானுடவியல் சிந்தனையாளர், பதிப்பாளர், பத்திரிகையாளர், மருத்துவர், பேச்சாளர், மொழியியல் வல்லுநர், பன்மொழிப் புலவர், புதிய கோட்பாட்டாளர், சிறந்த செயல்பாட்டாளர், சளைக்காத போராளி என்று பன்முக ஆற்றல் கொண்டவராகச் செயல்பட்ட அயோத்திதாசர் அவர்கள், தான் வாழ்ந்த காலம் முழுவதும் அறிவொளி பரப்பியவர்! இவர் அமைத்துக் கொடுத்த அறிவுத் தளத்தில்தான் 150 ஆண்டுகால தமிழர் அறிவியக்கம் செயல்பட்டு வருகிறது.

"என் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும், சீர்திருத்தக் கருத்துக்களுக்கும் முன்னோடி அயோத்திதாசப் பண்டிதர்தான்" என்று 'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியார் அவர்கள் சொன்னார். இவருடைய பத்திரிகைகளுக்கும், புத்தகங்களுக்கும் உலக அளவில் வாசகர்கள் உருவானார்கள்.

➢ தமிழ்நாட்டு அரசியலில் தமிழன், திராவிடன் ஆகிய இரண்டு சொற்களையும் அடையாளச் சொல்லாக மாற்றியவர் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள்! தமிழ் அல்லது திராவிடம் என்பது மொழி மட்டுமல்ல! அதை ஒரு பண்பாட்டு நடைமுறையாகப் பார்த்தவர் அயோத்திதாசர் அவர்கள்.

➢ 1881ஆம் ஆண்டே மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் 'பூர்வத் தமிழர்' என்று பதியச் சொன்னவர் அயோத்திதாசர் அவர்கள்.

➢ 1891ஆம் ஆண்டு அவர் தொடங்கிய அமைப்பின் பெயர் 'திராவிட மகாஜன சபை'!

➢ 1907ஆம் ஆண்டு 'ஒரு பைசாத் தமிழன்' என்ற இதழைத் தொடங்கி, அதையே 'தமிழன்' என்ற இதழாக நடத்தி வந்தார்.

➢ ஒடுக்கப்பட்ட மக்கள் அனைத்து வேற்றுமைகளையும் மறந்து தமிழர்களாக, சாதி பேதமற்ற திராவிடர்களாக ஒன்றிணைய வேண்டும் என்று இறுதி வரை எழுதியவர், பேசியவர், போராடியவர் அயோத்திதாசர் அவர்கள்.

"இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு சாதியும் மதமுமே தடை" என்று சொன்ன அயோத்திதாசர், "மனிதர்களை, மனிதர்களாகப் பார்க்கும் எவரோ, அவர்தான் மனிதர்" என்று முழங்கினார். அவருடைய நூல்கள் இன்றைக்கும் அறிவொளி ஊட்டுவதாக இருக்கிறது.

1845 முதல் 1914 வரை வாழ்ந்த அயோத்திதாசர் அவர்களுடைய 175ஆவது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவருடைய அறிவை வணங்குகின்ற விதமாகவும் இந்த மணிமண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளை மேம்படுத்த, "அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்" வரும் ஐந்தாண்டுகளில் ரூ.1,000 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது என்ற அறிவிப்பையும் நம்முடைய திராவிட மாடல் அரசு செய்திருக்கிறது.

மகான் புத்தரை 'இரவு பகலற்ற ஒளி' என்று சொன்ன அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுடைய சிந்தனைகளும், இரவு பகலற்ற ஒளியாக இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்படவேண்டும்.

ரூ.67.83 கோடி செலவில் புதுக்கோட்டையில் அரசு பல் மருத்துவக் கல்லூரி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.11.2023 அன்று தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத்துறை சார்பில் ரூ.67.83 கோடி செலவில் தமிழ்நாடு அரசின் மூன்றாவது அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையான புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை, புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.8.89 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பொதுச் சுகாதாரத்துறை கட்டடங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினைச் செயல்படுத்தும் வகையில் "மக்களைத் தேடி மருத்துவம்" சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளைத் தடுக்கும் வகையில் "இன்னுயிர்க் காப்போம் - நம்மைக் காக்கும்-48", நலவாழ்வு நடைப்பயிற்சி 8 கி.மீ. சுகாதார நடைபாதைத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வாயிலாகத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 15.11.2023

தமிழ்நாட்டின் மூன்றாவது பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையான புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனையைத் திறந்து வைத்தல்

70 ஆண்டுகளுக்குப் பிறகு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக, புதுக்கோட்டையில் ரூ.67.83 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாட்டின் மூன்றாவது அரசு பல் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.



கட்டடம், மலைக்குடிப்பட்டி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் செவிலியர் குடியிருப்புக் கட்டடம், பரம்பூர் துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், மேலமுத்துக்காடு துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், புலியூர் துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், நாகுடி அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், ஏம்பாவயல் துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கோட்டைப்பட்டினம் துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், மணமேல்குடி துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், மும்பாலை துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், விச்சூர் துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், பி.ஆர். பட்டினம் துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், நிலையூர் துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கொத்தமங்கலம் கிழக்கு துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கும்மங்குளம் துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், குப்பக்குடி துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், எல்.என்.புரம் துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், விராலிப்பட்டி துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், வேங்கிடக்குளம் துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், முத்துப்பட்டினத்தில் செவிலியர் குடியிருப்பு, கட்டுமாவடி துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், நெல்வேலி துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், அழியாநிலை துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கருக்காக்குறிச்சி துணைச் சுகாதார நிலையத்திற்கான கட்டடம்;

இக்கல்லூரியில் 2023-2024ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் 50 மாணவர்கள் சேர்க்கைக்காக அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த அரசு பல் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை 10.14 ஏக்கர் பரப்பளவில் மருத்துவமனை, நிருவாகக் கட்டடம், மாணவ, மாணவியர் விடுதிக் கட்டடம், ஆசிரியர், முதல்வர் தங்கும் விடுதி போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. கூடுதலாக, பல் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனைக்கு ரூ.5.10 கோடி மதிப்பிலான தேவையான அதிநவீன உபகரணங்கள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, இக்கல்லூரி, மருத்துவமனைக்குத் தேவையான ஆசிரியர், நிருவாகம், கல்விசாராப் பணிகளுக்கு 148 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

இப்புதிய புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை இந்தியாவிலேயே மிகச் சிறந்த கட்டமைப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், தமிழகத்தின் மத்தியப் பகுதியில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு தரமான பல் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு வழிவகை ஏற்படும்.

பொதுச் சுகாதாரத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள 27 புதிய கட்டடங்களைத் திறந்து வைத்தல்

புதுக்கோட்டை, அறந்தாங்கி சுகாதாரப் பகுதி மாவட்டங்களைச் சார்ந்த கீழாநிலைப் புதுப்பட்டி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், ராசநாயக்கன்பட்டி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், பாலாண்டம்பட்டி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், நீர்பழனி துணை சுகாதார நிலையத்திற்கான

என மொத்தம், ரூ.8.89 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பொதுச் சுகாதாரத்துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

ரூ.77.87 இலட்சம் செலவில் தூத்துக்குடி மாநகரில் தந்தை குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் திருவுருவச்சிலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், தூத்துக்குடி மாநகரின் தந்தை ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் பிறந்த நாளான 15.11.2023 அன்று தூத்துக்குடி மாநகராட்சிப் பூங்காவில் ரூ.77.87 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் குவிமாடத்துடன் கூடிய திருவுருவச் சிலையைத் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுத் தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள், அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ்ச் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பைப் பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்தார் - 15.11.2023

தூத்துக்குடி மாநகர மக்களின் நலன் காத்திட தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்கள். ஏறத்தாழ 30 ஆண்டு காலம் நகரமன்ற உறுப்பினராகவும், ஐந்து முறை நகரமன்றத் தலைவராகவும் இருந்த காலத்தில், சாதிமத பேதமின்றி அம்மாவட்ட அடித்தள மக்களின் அடிப்படைக் கல்வி மேம்பாடு, குடிசை வீடுகள் மேம்பாடு, தீண்டாமை எதிர்ப்பு, கூட்டுறவு வங்கிக் கடனுதவி, சுகாதார மையங்கள், சனிக்கிழமைச் சந்தை, அங்காடிகள், பொதுவான கல்லறைத் தோட்டம் என நல்லபல திட்டங்களைச் செயல்படுத்திச் சாதனை படைத்தவர். குறிப்பாக, 1927ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் மிகக் கடுமையான குடிநீர் பஞ்சத்தில் சிக்கித் தவித்தபோது, மிகுந்த தொலைநோக்குப் பார்வையுடன், நெல்லை தாமிரபரணி ஆற்றிலிருந்து குழாய் மூலம் நீர் கொண்டு

வரும் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்தி வெற்றி கண்ட அத்திட்டம் அம்மாநகர மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகிறது.

தன்னலமற்ற தனது தியாகத்தினால், அம்மாவட்ட மக்களின் மனங்களில் இன்றும் உயர்ந்து நிற்கும் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் நினைவினைப் போற்றிடும் வகையில், அன்னாரின் பிறந்த நாளான நவம்பர் 15 அன்று அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு நினைவு மணிமண்டபம் கட்டப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க, அன்னாரின் புகழுக்கு மென்மேலும் பெருமை சேர்க்கின்ற வகையில் அவருக்குத் தூத்துக்குடி மாநகராட்சியில் குவிமாடத்துடன் கூடிய முழு உருவச் சிலை அமைக்கப்படும் எனத் தமிழ்நாடு அரசால் 13.11.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தூத்துக்குடி மாநகர மக்களின் தந்தை என்று அன்போடு அழைக்கப்படும் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் பிறந்த நாளான 15.11.2023 அன்று தூத்துக்குடி மாநகராட்சிப் பூங்காவில் ரூ.77.87 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள குவிமாடத்துடன் கூடிய அவரது திருவுருவச் சிலையைக் காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 87ஆவது நினைவு நாள்

படமும்/ செய்தியும்

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 87ஆவது நினைவு நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 18.11.2023 அன்று சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

திருப்பி அனுப்பப்பட்ட சட்ட முன்வடிவுகளை மீண்டும் சட்டப்பேரவையில் மறுஆய்வு செய்து நிறைவேற்றிடும் அரசினர் தனித்தீர்மானம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சட்டமன்றப் பேரவையில், திருப்பி அனுப்பப்பெற்ற சட்டமுன்வடிவுகளை மீண்டும் சட்டப்பேரவையில் மறுஆய்வு செய்து நிறைவேற்றிடும் அரசினர் தனித்தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை - 18.11.2023

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

"மரம் ஓய்வை விரும்பினாலும் காற்று விடுவதாக இல்லை" என்றார் புரட்சியாளர் மா சே துங். காய்ச்சல், தொண்டை வலி காரணமாகச் சில நாட்கள் வீட்டில் நான் ஓய்வெடுத்து வந்தாலும், எனது உடல்நலனை விட இந்த மாநிலத்து மக்கள் நலன் - தாய்த்தமிழ் நாட்டின் நலன், நூற்றாண்டு கண்ட இந்த மாண்புமிகு சட்டப்பேரவை நலன்தான் அதைவிட முக்கியம் என்ற மன உறுதியோடு உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

கோடிக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் நம்மை, இந்திய அரசியல் சட்டம் வழங்கிய அதிகாரத்தின் மையமாக இருந்து சட்டமியற்றும் இந்தச் சட்டமன்றத்தைத் தடுக்கும் சக்தி ஒன்று முளைக்குமானால், இந்தச் சூழ்நிலை என்பது இந்திய ஜனநாயகத்தை மிக மோசமான வகையில் கொண்டு செலுத்திவிடும் என்ற அச்சத்துடன்தான் உங்கள் முன்னால் நிற்கிறேன்.

இங்கே படமாக மட்டுமல்ல பாடமாக நின்று கொண்டு இருக்கிறார் வான்புகழ் வள்ளுவர் அவர்கள்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்

- என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதியவர் அவர்தான்.

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான் என்று இதற்கு உரை எழுதினார் எங்களையெல்லாம் ஆளாக்கிய தலைவர் கலைஞர் அவர்கள். ஆளாக்கிய தலைவரின் நெறிநின்றுதான் ஆட்சி நடத்தி வருகிறோம்.

அதற்குத் தடைக்கற்கள் விழுமானால், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வழியில், 'தடந்தோள்கள் உண்டு' என்பதையும் மெய்ப்பித்துக் காட்டி வருகிறோம்.

இந்தியாவில் மக்களாட்சி மாண்பை உருவாக்கும் சட்டமன்றமாக முதன்முதலாக எழுந்த சட்டமன்றம் நமது தமிழ்நாட்டுச் சட்டமன்றம்.

இந்திய விடுதலைக்கு முன்பும், பின்புமாக ஒரு நூற்றாண்டு காலமாகப் பல கட்சிகள், பல முதலமைச்சர்கள், பல நூறு உறுப்பினர்களைக்

கண்ட தமிழ்நாடு சட்டமன்றம், ஜனநாயக விழுமியங்களைப் போற்றிப் பாதுகாத்து வருவதுடன், சமூகநீதியின் அடிப்படையில் சமூகநலத் திட்டங்களை அனைத்துத்தரப்பு மக்களின் நலன் கருதி செயல்படுத்துவதில் இந்திய ஒன்றியத்திற்கே முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது என்றால், அது மிகையல்ல!

சிறப்பான மக்கள் நலத்திட்டங்கள்

இரட்டையாட்சி முறைப்படி தேர்தல்கள் நடந்து, 1920ஆம் ஆண்டு இங்கு அமைந்த சட்டமன்றம்தான், ஒரு சட்டமன்றம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற நெறிமுறை – நடைமுறை மரபுகளை உருவாக்கியதாக அமைந்திருந்தது.

இது எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்வையிட இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் இருந்தெல்லாம் இங்குப் பார்வையாளர்கள் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள்.

இத்தகைய சிறப்பினைப் பெற்ற, மாண்புமிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்தான், நூறு ஆண்டுகாலமாக எத்தனையோ சமூக - அரசியல் - பொருளாதார – சமதர்ம – சமூகநீதிச் சட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம்.

இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநிலங்களுக்கும் தலையாய மாநிலம் தமிழ்நாடு என்று சொல்லத்தக்க வகையில் சிறப்பான மக்கள் நலத்திட்டங்களை உருவாக்கி மாநிலத்தை வளர்த்தெடுத்து இருக்கிறோம்.

இன்று நாம் காணும் வளர்ச்சி என்பது நமது தலைவர்களால், அவர்கள் உருவாக்கிக் கொடுத்த சட்டங்களால் – திட்டங்களால் வந்தவை ஆகும்.

தந்தைப் பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்களின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் பின்பற்றி, பார்போற்றும் திராவிட மாடல் ஆட்சியை வழங்கி வருகிறோம்.

சமூகநீதி, சுயமரியாதை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமத்துவம், பெண்ணுரிமை, மதநல்லிணக்கம், பல்லுயிர் காத்தல் ஆகிய கொள்கைகளை அடித்தளமாகக்கொண்டு, எண்ணற்ற மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை இதே சட்டமன்றத்தில் அறிவித்து செயல்படுத்தி வருவதை இன்றைய தினம் அனைத்துத் தரப்பினரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவிற்கே வழிகாட்டும் திட்டங்கள்

தமிழ்நாட்டுக்கான திட்டங்கள் – தமிழ்நாட்டை வளப்படுத்தும் திட்டங்களாக மட்டுமல்ல, இந்தியாவுக்கான வழிகாட்டும் திட்டங்களாக அமைந்து வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையைக் கெடுக்கும் வகையில் என்றுகூடச் சொல்ல மாட்டேன்; தடுக்கும் வகையில் சில இடையூறுகள் இருக்கின்றன என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள்.

- நிதி நெருக்கடி
- ஒன்றிய அரசின் சில இடையூறுகள்

இவை மட்டும் இல்லாமல் இருந்தால் இன்னும் பல திட்டங்களை எங்களால் செய்துகாட்ட முடியும் என்று இதே மாமன்றத்தில் ஓராண்டுக்கு முன்னதாக நான் குறிப்பிட்டதையும் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இடையூறுகள் என்று நான் சொன்னதன் விளைவாகத்தான் இந்தச் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டியதாக உள்ளது.

பொதுவாகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சிறப்புக் கூட்டங்கள், முக்கிய நிகழ்வுகளுக்காகவும், முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காகவும் கூட்டப்படுவது வழக்கம்.

மக்களாட்சி தத்துவத்தின் கலங்கரை விளக்கம்

அதேபோல் நாம் இன்றைக்குக் கூட்டியிருக்கும் சிறப்புக் கூட்டம், அவசர, அவசியம் கருதி, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதியும், ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டிய அவசியத்தின் அடிப்படையிலும், அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியும் கூட்டப்பட்டுள்ளது.

மக்களாட்சித் தத்துவத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழும் இந்தச் சட்டமன்றப் பேரவையில் நாம் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்காமல் இருந்தார் மாண்புமிகு ஆளுநர் அவர்கள்.

"I withhold assent" அதாவது, தான் அனுமதியை நிறுத்திவைத்துள்ளதாகக் குறிப்பிட்டு, நாம் இங்கு நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளைக் கடந்த 13.11.2023 அன்று திருப்பி அனுப்பி வைத்திருக்கின்றார். ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ள சட்டமுன்வடிவுகளை நாம்

இங்கே மீண்டும் நிறைவேற்றி, அவரது ஒப்புதலுக்காக மீண்டும் அனுப்பி வைக்க இருக்கிறோம். அதற்காகத்தான் இன்றைக்கு இந்தச் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

ஜனநாயக-மக்கள் விரோதம்

மக்களாட்சித் தத்துவத்தின்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மைமிக்க ஒரு அரசால், மாநில நலன் கருதி சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்படும் சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் தரவேண்டியது ஆளுநர் அவர்களின் கடமை. அவருக்கு அதில் சட்டரீதியாக அல்லது நிருவாக ரீதியாக ஏதேனும் தெளிவுரை தேவைப்பட்டால், அதனை அவர் அரசிடம் கோரலாம். அதனை அரசு வழங்க வேண்டும். அந்த வகையில் இதற்கு முந்தைய சில நிகழ்வுகளில் அவர் எழுப்பிய சில வினாக்களுக்கு முறையாக எழுத்து மூலமாகவும், சம்மந்தப்பட்ட அரசுச் செயலர்கள், தலைமைச் செயலாளர் ஆகியோர் நேரிலும் விளக்கம் அளித்துள்ளனர்.

எந்த ஒரு நிகழ்விலும் அவர் கோரிய விளக்கங்கள் அவருக்கு வழங்கப்படாமல் இருந்ததில்லை. இந்தச் சூழ்நிலையில் அவர் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில், சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றி அனுப்பப்பட்ட சில சட்டமுன்வடிவுகளுக்கு அனுமதி வழங்காமல் திருப்பி அனுப்பி வைத்திருப்பது என்பது தமிழ்நாட்டு மக்களையும், இந்தச் சட்டமன்றத்தையும் ஆளுநர் அவர்கள் அவமதிக்கின்றார் என்றுதான் பொருளாகும்.

10 சட்டமுன்வடிவுகள் உள்ளிட்ட 12 சட்டமுன்வடிவுகள், வேறு சில கோப்புகளுக்கும் இவர் ஒப்புதல் வழங்காமல் இருப்பது சட்டவிரோதம் ஆகும்! ஜனநாயக விரோதம் ஆகும்! மக்கள் விரோதம் ஆகும்! மனசாட்சி விரோதம் ஆகும்! அனைத்திற்கும் மேலாக இந்தச் சட்டமன்றத்தின் இறையாண்மைக்கு எதிரானதாகும்!

தமிழ்நாட்டுக்கு ஆளுநராக இருப்பவர், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்க வேண்டும்; தமிழ்நாட்டின் மேம்பாட்டுக்குத் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒன்றிய அரசிடம் அவருக்கு இருக்கும் நெருக்கத்தைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டுக்கான நிதியை வாங்கித் தருவதற்கு முயற்சிக்கலாம்; ஜி.எஸ்.டி. நிலுவைத் தொகையைப் பெற்றுத்தரலாம்; எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு உரிய நிதியை வாங்கித் தரலாம்; புதிய இரயில்வே திட்டங்களைப் பெற்றுத் தரலாம்; மாநில ஆட்சிக்கும், ஒன்றிய அரசுக்கும் பாலமாக இருக்கலாம். ஆனால், இதில் எதையும் செய்யாமல், மாநில அரசின் திட்டங்களுக்கு எவ்வாறு முட்டுக்கட்டைப் போடலாம் என நாள்தோறும் யோசித்து, யோசித்து செயல்பட்டு வருகிறார்.

சமூக அமைப்பிற்கு எதிரான கருத்துக்கள்

அதோடு, தினந்தோறும் யாரையாவது கூட்டி வைத்துக்கொண்டு அவர் வகுப்பு எடுக்கிறார். வகுப்பு எடுக்கட்டும், தவறில்லை. அதில் மொத்தமும் தவறான பாடங்களைச் சொல்லித்தந்து கொண்டு இருக்கிறார்.

விழாக்களுக்கு செல்கிறார். செல்லட்டும்! ஆனால் விதண்டாவாதக் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்.

அரசின் கொள்கைகள் குறித்துப் பொதுவெளியில் விளக்கம் அளிப்பதும் - விவாதம் செய்வதும் அவர் வகிக்கும் பதவிக்கு அழகு அல்ல.

தமிழ்நாட்டில் பின்பற்றப்படும் திராவிடக் கொள்கை, சமத்துவம், சமூகநீதி, பகுத்தறிவு, சுயமரியாதை ஆகியவை மக்களின் மனங்களில் இருப்பது அவருக்கு ஏற்கவியலாத ஒன்றாக உள்ளது.

பொதுமேடைகளில் அவர் நமது தமிழ்ப் பண்பாடு, இலக்கியம், சமூக அமைப்பிற்கு எதிரான கருத்துக்களையும் தெரிவித்து வருகிறார். தெரிவித்துக் கொண்டும் வருகிறார். அவரது அபத்தமான கருத்துக்களுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் மறுப்புச் செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு வருகிறார்கள்.

அரசியல் சட்டத்திற்கு மாறான போக்கு

அவர் தெரிவிக்கும் கருத்துக்களை வைத்துப் பார்க்கும்போது, அவருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத்துக்குமான பிரச்சினை என்பது நாம் நிறைவேற்றி அனுப்பும் சட்டங்களில் மட்டுமல்ல; சமூகநீதியாகவும் இருக்கிறது. அதனால்தான் முடிந்தளவு அனைத்து வகையிலும் முட்டுக்கட்டைப் போட்டு வருகிறார்.

அவருக்கு முடிந்த வரை - அனைத்து வகையிலும் நாம் உணர்த்திக்கொண்டு வருகிறோம். தமிழ்நாடு வளர்ந்திருப்பதை, வளர்வதைக் காணப் பொறுக்காத காரணத்தினால்தான் என்னவோ, ஆளுநர் அவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார் என்று நடுநிலையாளர்கள் கருதுகிறார்கள்.

“அரசியல் சட்டத்திற்கு முழுவதும் மாறாக, அரசுடன் ஆளுநர் மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகிறார். எனவே, அவருக்கு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும்” என்று மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றக் கதவுகளை தட்டவேண்டிய கடமை

தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து இக்கோரிக்கைகள் குறித்து வலியுறுத்தியுள்ளார்கள். நானும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு இப்பிரச்சினை குறித்துக் கடிதமும் எழுதி இருக்கிறேன். இந்த அனைத்து முயற்சிகளும் எவ்வித பயனும் தராததால்தான், தமிழ்நாடு அரசு மாண்பமை உச்சநீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

மாண்புமிகு ஆளுநர் அவர்களிடம் தேங்கிக் கிடக்கும் அனைத்துக் கோப்புகள், சட்டமுன்வடிவுகள் உள்ளிட்ட விவரங்களைக் குறிப்பிட்டு, மாண்பமை உச்சநீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசு வழக்குத் தொடர்ந்தது.

தமிழ்நாடு அரசு எடுத்துரைத்த வாதங்களைக் கவனித்துக் கேட்ட மாண்பமை உச்சநீதிமன்றம், ஆளுநரின் செயல்பாடுகள் குறித்துத் தெரிவித்த கருத்துக்கள், தமிழ்நாடு சட்டமன்றத்திற்குக் கிடைத்த முதற்கட்ட வெற்றியாகும். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் இத்தருணத்தில், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அவசர அவசரமாக 10 சட்டமுன்வடிவுகளுக்கு எவ்வித ஒப்புதலும் வழங்காமல், கடந்த 13.11.2023 அன்று கோப்புகளைத் திருப்பி அனுப்பியுள்ளார்.

சட்டமுன்வடிவுகள் மீண்டும் பரிசீலனை

இந்திய அரசமைப்புச் சட்டத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்குத்தான் முழு அதிகாரமும் முதன்மையும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 200இன்படி, இந்தச் சட்டமுன்வடிவுகளை மீண்டும் பரிசீலித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கும் அதிகாரம் இந்த மாமன்றத்திற்குத்தான் உள்ளது.

அந்த அடிப்படையில்தான், இந்த 10 சட்டமுன்வடிவுகளும் இன்றைக்கு உங்கள் முன் வைக்கப்பட்டுள்ளது.

ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாட்டு மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, இந்திய நாடு இதுவரை கண்டிராத முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றி, மக்களின் எண்ணங்களில் இடம் பிடித்துள்ளது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

இதனை அரசியல் ரீதியாக சகித்துக் கொள்ள இயலாத சிலர், அரசு நிருவாகத்தை முடக்கவேண்டும் என்ற நோக்கத்தில் அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆளுநர் என்ற உயர்ந்த பதவியின் மூலமாக அரசியல் செய்ய விரும்புகிறார்கள்.

மக்களுக்கும், மனசாட்சிக்கும் கட்டுப்பட்டவர்கள்

ஆளுநர் பதவி என்பதே அகற்றப்பட வேண்டிய பதவியாக இருந்தாலும் – அது இருக்கும் வரை மக்களாட்சித் தத்துவத்துக்கு அடங்கி இருக்க வேண்டியதுதான் மரபு ஆகும்.

பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில், ஆளுநர்களின் மூலமாகக் குடைச்சல் கொடுத்து வருகிறார்கள். இப்போது மாண்பமை உச்சநீதிமன்றம் தலையில் ஓங்கி குட்டு வைத்தவுடன் அவசர அவரமாகக் கோப்புகளைத் திருப்பி அனுப்புவதும், சில கோப்புகளுக்கு ஒப்புதல் வழங்குவதும் என நாடகம் ஆடுகின்றார் ஆளுநர்.

அவருக்குத் தெரிந்ததை அவர் செய்கிறார். செய்துவிட்டுப் போகட்டும். ஆனால் நாம் எப்போதும் சட்டத்தின்வழி நடப்பவர்கள். எனவே, அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 200இன்படி அவர் எந்தக் காரணமும் குறிப்பிடாமல் திருப்பி அனுப்பி வைத்துள்ள 10 சட்டமுன்வடிவுகளையும் நிறைவேற்றித் தருமாறு நூற்றாண்டு கண்ட இச்சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லியபடி, மக்களுக்கும் மனசாட்சிக்கும் மட்டுமே நாங்கள் கட்டுப்பட்டவர்கள் என்பதையும் பதிவுசெய்து, பின்வரும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

அரசினர் தனித் தீர்மானம்

"பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையில் ஆய்வு செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்ட 2 சட்டமுன்வடிவுகள், பதினாறாவது சட்டமன்றப் பேரவையில் ஆய்வு செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்ட 8 சட்டமுன்வடிவுகள் மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், நெடுநாட்கள் நிலுவையில் வைத்திருந்து, கடந்த 13.11.2023 அன்று எவ்வித காரணமும் குறிப்பிடாமல், ஏற்பிசை அளிப்பதை நிறுத்தி வைப்பதாக (I withhold Assent) சட்டமுன்வடிவுகளில் குறிப்பிட்டு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அச்சட்டமுன்வடிவுகளைத் திருப்பி அனுப்பியுள்ளார்கள். காரணம் ஏதும் குறிப்பிடாமல் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஏற்பிசை அளிப்பதை நிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிவித்து, சட்டமுன்வடிவுகளைத் திருப்பி அனுப்பியுள்ளது ஏற்புடையதல்ல என இப்பேரவை கருதுகிறது.

இந்திய அரசமைப்புச் சட்ட உறுப்பு 200இன் வரம்புரையின்கீழ், மேற்காணும் சட்டமுன்வடிவுகள் மீண்டும் நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு ஆளுநரின் ஏற்பிசைவுக்காக முன்னிடப்படுமாயின், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அதற்கு ஏற்பிசைவு அளித்திட வேண்டும் என்பதை அவை கவனத்தில் கொள்கிறது.

ஏற்கெனவே பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையில் 08.01.2020 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 09.01.2020ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட, 2020ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 2/2020);

09.01.2020 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட, 2020ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 12/2020);

பதினாறாவது சட்டமன்றப் பேரவையில்,

25.04.2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 24/2022);

05.05.2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 10.05.2022ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 29/2022);

09.05.2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 10.05.2022ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 39/2022);

10.05.2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 40/2022);

18.10.2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 19.10.2022ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 48/2022);

19.10.2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 55/2022);

19.04.2023 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 21.04.2023ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2023ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 15/2023); மற்றும்

20.04.2023 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 21.04.2023ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2023ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 18/2023);

ஆகிய சட்டமுன்வடிவுகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 143இன்கீழ் இப்பேரவை மறு ஆய்வு செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது எனும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

நெய்வேலி
பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்காக நில எடுப்புச் செய்ததால் பாதிக்கப்பட்ட 3,543 பயனாளிகளுக்குப் பட்டாக்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்– 20.11.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 20.11.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி (NLC) நிறுவனத்திற்காக நில எடுப்புச் செய்ததால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட மாற்று இடங்களுக்கு நிலவரித்திட்டப் பணி மேற்கொண்டு அம்மக்களின் 60 ஆண்டு காலக் கோரிக்கைக்குத் தீர்வு காணப்பட்டு 3,543 பயனாளிகளுக்குப் பட்டாக்கள் வழங்கும் பணியினைத் தொடங்கி வைக்கும் விதமாக, 7 பயனாளிகளுக்குப் பட்டாக்களை வழங்கினார். மேலும், ரூ.14.86 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள திருவட்டார், கிள்ளியூர், பொன்னேரி வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள், தேனியில் கூட்டரங்கக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, இணையவழிச் சேவையின் மூலமாக நிலஅளவைக்கு (F-Line measurement) விண்ணப்பிக்கும் புதிய வசதியையும் தொடங்கி வைத்தார்.

வருவாய்த்துறை, மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குவதோடு, சாமானிய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், அரசின் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றுகிறது. மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர்

காலங்களில் மக்கள் துயர் துடைக்கும் துறையாகவும் இத்துறை விளங்கி வருகிறது. இத்துறையின் பணியினை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், துறை அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல், பொதுமக்கள் எளிதில் பயன்பெறும் வகையில் இணையவழிச் சேவைகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி (NLC) நிறுவனத்திற்காக நில எடுப்புச் செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட மாற்று இடங்களுக்கு நிலவரித்திட்டப் பணி மேற்கொண்டு அம்மக்களின் 60 ஆண்டு கால கோரிக்கைக்குத் தீர்வு காணப்பட்டுப் பட்டாக்கள் வழங்குதல்

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டபோது அந்த நில எடுப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 1959ஆம் ஆண்டு விருத்தாச்சலம் வட்டம், விஜயமாநகரம், புதுக்கூரைப்பேட்டை கிராமங்களில் குடியமர்த்தப்பட்டனர்.இவ்வாறு மறுகுடியமர்த்தப்பட்ட கிராம நிலங்களில் நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் இருந்து வந்த நிலையில், வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறையால் 26.05.2022 அன்று அரசாணை வெளியிடப்பட்டுச் சுமார் 3,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் வருவாய் நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது. அதன்படி, விருத்தாச்சலம் வருவாய்க் கோட்டாட்சியர் தலைமையில் நிலவரித் திட்ட அலகு ஏற்படுத்தப்பட்டு நிலவரித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்காக நில எடுப்புச் செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, விஜயமாநகரம் கிராமத்தில் 2,676 நபர்களுக்கு 1,371 பட்டாக்களும், புதுக்கூரைப்பேட்டை கிராமத்தில் 867 நபர்களுக்கு 475 பட்டாக்களும், என மொத்தம் 3,543 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7 பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கினார்.

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள், கூட்டரங்கக் கட்டடத்தை திறந்து வைத்தல்

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார், கிள்ளியூரில் 7 கோடியே 50 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் 3 கோடியே 75 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூட்டரங்கக் கட்டடம், என மொத்தம் 14 கோடியே 86 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வருவாய்த் துறைக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இணையவழி மூலமாக நில அளவைக்கு (F–Line measurement) விண்ணப்பிக்கும் புதிய வசதியைத் தொடங்கி வைத்தல்

நில உரிமையாளர்கள் தங்களது நிலங்களை அளவீடு செய்ய சம்பந்தப்பட்ட வட்ட

அலுவலகங்களுக்கு நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும் என்று இருந்த நிலையை மாற்றி, பொதுமக்களின் வசதிக்காக 'எந்நேரத்திலும் எவ்விடத்திலிருந்தும்' நில அளவைச் செய்ய https://tamilnilam.tn.gov.in/citizen என்ற இணையவழியில் விண்ணப்பிக்கும் புதிய வசதியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இப்புதிய சேவையின் மூலம், பொதுமக்கள் நில அளவைச் செய்ய விண்ணப்பிக்கும் பொருட்டு வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. பொதுமக்கள் நில அளவை கட்டணம் உள்ளிட்ட கட்டணங்களைச் செலுத்த வங்கிகளுக்கு நேரில் செல்லாமல், இணையவழியிலேயே செலுத்தி விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நில அளவை செய்யப்படும் தேதி மனுதாரருக்குக் குறுஞ்செய்தி அல்லது அலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படும். மேலும், நில அளவைச் செய்யப்பட்ட பின்னர் மனுதாரர், நில அளவர் கையொப்பமிட்ட 'அறிக்கை/வரைபடம்' ஆகியவற்றை மனுதாரர் https://eservices.tn.gov.in/ என்ற இணையவழிச் சேவையின் மூலமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பட்டாக்களைப் பெற்றுப் பயனடைந்த பயனாளிகள் தெரிவித்ததாவது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசால் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையால் பட்டாக்களைப் பெற்று பயனடைந்த பயனாளிகளான கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.வெங்கடாசலபதி என்பவர், கடலூர் மாவட்டம், கூரைப்பேட்டை என்ற கிராமத்தில் நாங்கள் வசித்து வந்தோம். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் தொடங்குவதற்காக. எங்களது நிலம், வீடு, மனை அனைத்தையும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், நிலக்கரி வெட்டுவதற்காக இடத்தை எடுத்துக்கொண்டு எங்களுக்கு மாற்று இடமாகப் புதுக்கூரைப்பேட்டை கிராமத்தில் நிலம் வழங்கப்பட்டது. சுமார் 60 ஆண்டுகளுக்கும் மேலாக எங்களுக்கு அந்த நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிலத்திற்குப் பட்டா, சிட்டா எதுவும் வழங்கப்படவில்லை. அந்த தரிசு நிலங்களை வைத்து நாங்கள் வங்கி, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, எங்களால் எந்த ஒரு கடனையும் பெற்றுப் பயனடைய முடியாத நிலையில் இருந்தோம். புதுக்கூரைப்பேட்டை, விஜயமாநகர கிராமங்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், எங்களது புதுக்கூரைப்பேட்டை, விஜயமாநகர

கிராமங்களுக்குப் பட்டா வழங்கிட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கரங்களால் பட்டாக்கள் வழங்கப்பட்டது. எங்களது கிராமத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

மற்றொரு பயனாளி திரு.பாலகிருஷ்ணன் அவர்கள், 1957இல் நெய்வேலிப் பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கான எனது நிலம் கையகப்படுத்தப்பட்டு, விஜயமாநகரம் கிராமத்தில் குடியமர்த்தப்பட்டேன். இந்நிலத்தை வைத்து தேசிய வங்கியின் மூலமாக எந்த ஒரு கடனும் பெற முடியாத சூழ்நிலையில் இருந்தோம். அதனால், இதுவரை கஷ்டப்பட்டு வந்தோம். நாங்கள், நெல், கம்பு, கரும்பு போன்றவற்றைப் பயிரிட்டு விவசாயம் செய்து வருகின்றோம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், எங்களுக்குப் பட்டா வழங்கியதற்காக எனது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று தெரிவித்தார்.

பட்டா பெற்ற திரு.என்.சிவக்குமார் அவர்கள், 1951இல் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், முதல் சுரங்கம் வெட்டும் பணிக்காக எங்களுக்கு சொந்தமான நிலத்தை அந்நிறுவனம் எடுத்துக் கொண்டது. எனக்குப் புதுக்கூரைப்பேட்டை கிராமத்தில் இடம் தரப்பட்டது. 65 ஆண்டுகாலமாக எங்களது நிலத்திற்குப் பட்டா வழங்கவில்லை. பட்டா வழங்குமாறு கோரி கிராமத்தின் சார்பாகக் கோரிக்கை மனு அளித்திருந்தோம். அதன்படி, 2021ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, எங்களது கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து தற்போது எங்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது கிராம மக்களின் சார்பில் நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

பயனாளி திரு.அண்ணாதுரை அவர்கள், என்.எல்.சி. நிறுவனம் 1958இல் நிலம் எடுத்துக்கொண்டு, எங்களுக்குப் புதுக்கூரைப் பேட்டையில் நிலம் கொடுத்தார்கள். நாங்கள் எங்களுக்கு வழங்கப்பட்ட அந்த நிலத்திற்குப் பட்டா இல்லை என்று சொல்லி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கை வைத்தோம். அந்த கோரிக்கையைப் பரிசீலனை செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டா வழங்கினார். பட்டா வழங்கியதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

படமும்/செய்தியும்

உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் 103ஆவது பிறந்த நாள்

உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் 103ஆவது பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், 23.11.2023 அன்று சென்னை அசோக் நகரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஜெ.கருணாநிதி, திரு. ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணைமேயர் திரு. மு.மகேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ந.அருள், குடும்பத்தினர் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

ரூ.453.67 கோடி செலவில் 4,272 புதிய குடியிருப்புகள்
ரூ.98.28 கோடி மதிப்பீட்டில் 4,680 பயனாளிகளுக்குத் தாமாக வீடு கட்ட பணி ஆணைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் - 20.11.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 20.11.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.453.67 கோடி செலவில் 9 மாவட்டங்களில் 13 திட்டப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 4,272 அடுக்குமாடிக் குடியிருப்புகளைத் திறந்து வைத்தார். மேலும், பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 4,680 பயனாளிகளுக்குத் தலா ரூ.2.10 இலட்சம் வீதம் ரூ.98.28 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளையும்,72கைத்தறிநெசவாளர்களுக்குப் பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் தலா ரூ.4 இலட்சம் வீதம் ரூ.2.88 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளையும், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 100 மாற்றுத்திறனாளிகளுக்குக் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளையும் வழங்கினார்.

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புர ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டுவசதியினை ஏற்படுத்தித் தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றுவாரியம் தொடங்கப்பட்டது. குடிசைப்

பகுதிகளை மேம்படுத்துதல் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் முதன்மையான செயல்பாடாக இருந்தாலும், நகர்ப்புர ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வீட்டுவசதி வாய்ப்புகள் மட்டுமே போதுமானதாக இருக்காது, அவர்களுக்குக் குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற போதுமான நகர்ப்புர வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 01.09.2021 அன்று, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினைத் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகளைத் திறந்து வைத்தல்

அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ்ச் செங்கல்பட்டு மாவட்டம், முருகமங்கலம் திட்டப்பகுதியில் தரை, 2 தளங்களுடனும், தரை, 5 தளங்களுடனும் ரூ.151.94 கோடி செலவில் 1,260 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள், செம்மஞ்சேரி திட்டப்பகுதியில் தரை, 5 தளங்களுடன் ரூ.20.63 கோடி செலவில் 144 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

மதுரை மாவட்டம், இராஜாக்கூர் திட்டப் பகுதியில் தரை, 3 தளங்களுடன் ரூ.50.78 கோடி செலவில் 512 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள், ஆத்திக்குளம் திட்டப்பகுதியில் தரை, 3 தளங்களுடன் ரூ.30.43 கோடி செலவில் 320 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

தருமபுரி மாவட்டம், நம்பிப்பட்டி திட்டப் பகுதியில் தரை மற்றும் 2 தளங்களுடன் ரூ.42.26 கோடி செலவில் 420 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

கன்னியாகுமரி மாவட்டம், புதுக்குளம் திட்டப்பகுதியில் தரை, 3 தளங்களுடன் ரூ.36.54 கோடி செலவில் 384 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள், ஈசாந்திமங்கலம் பகுதி – 2 திட்டப்பகுதியில் தரை, 3 தளங்களுடன் ரூ.3.45 கோடி செலவில் 32 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

திருநெல்வேலி மாவட்டம், ஜெபாகார்டன் திட்டப்பகுதியில் தரை, 4 தளங்களுடன் ரூ.31.27 கோடி செலவில் 320 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

கள்ளக்குறிச்சி மாவட்டம், கீரனூர் பகுதி – 1 திட்டப்பகுதியில் தரை, 2 தளங்களுடன் ரூ.24.35 கோடி செலவில் 264 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் பகுதி–1 திட்டப்பகுதியில் தரை, 2 தளங்களுடன் ரூ.17.28 கோடி செலவில் 192 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள், அன்னவாசல் பகுதி – 2 திட்டப்பகுதியில் தரை, 3 தளங்களுடன் ரூ.23.76 கோடி செலவில் 216 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள்,;

கோயம்புத்தூர் மாவட்டம், வடக்குப் பேரூர் பகுதி–1 திட்டப்பகுதியில் தரை, 6 தளங்களுடன் ரூ.11.22 கோடி செலவில் 112 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

கடலூர் மாவட்டம், பனங்காட்டுக் காலனி பகுதி–2 திட்டப்பகுதியில் தரை, 3 தளங்களுடன் ரூ.9.76 கோடி செலவில் 96 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

என மொத்தம், ரூ.453.67 கோடி செலவில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 4,272 குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து,

பயனாளிகளுக்குக் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 பயனாளிகளுக்கு ஆணைகளை வழங்கினார்.

இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை ரூ.2,037.08 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 19,777 அடுக்குமாடிக் குடியிருப்புகள் வீடற்ற ஏழை, எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இன்றையதினம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் சுமார் 400 சதுர அடிப் பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்துக் குடியிருப்பு வளாகங்களும், சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, சிறுவர் பூங்கா, மழைநீர்ச் சேகரிப்புக் கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. "நம் குடியிருப்பு, நம் பொறுப்பு" திட்டத்தின்கீழ் அனைத்துத் திட்டப்பகுதிகளிலும் குடியிருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ்க் குடியிருப்புகளுக்கான பணி ஆணைகள் வழங்குதல்

பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் பல்வேறு மாவட்டங்களில் வசிக்கும் 4,680 பயனாளிகளுக்குத் தனி வீடுகள் கட்ட தலா ரூ.2.10 இலட்சம் வீதம் ரூ.98.28 கோடி மதிப்பீட்டிலான பணி ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 3 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைகள் வழங்கினார்.

நகர்ப்புரக் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகள் வழங்குதல்

நகர்ப்புரக் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை ரூ.4 இலட்சமாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில், மாநில அரசு மானியமாக ரூ.2.50 இலட்சம் ரூபாயும், ஒன்றிய அரசு மானியமாக ரூ.1.50 இலட்சமும், மொத்தம் ரூ.4 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. இன்றைய தினம் 72 நகர்ப்புரக் கைத்தறி நெசவாளர்களுக்குத் தலா ரூ.4 இலட்சம் வீதம் ரூ.2.88 கோடி மதிப்பீட்டிலான பணி ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக 3 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணி ஆணைகளை வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளுக்குக் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்குதல்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 100 மாற்றுத்திறனாளிகளுக்குக் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 3 மாற்றுத்திறனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைகளை வழங்கினார்.

என் இலட்சியம்

"தமிழ்நாட்டில் எந்தத் தனிமனிதருக்கும் அரசாங்கத்திடம் கோரிக்கை வைக்க மனு இல்லாத ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும். அதுதான் என் இலட்சியம். அரசின் நலத்திட்டங்கள், சேவைகள் அனைத்தும் அனைத்து மக்களையும் சென்றடைந்தாக வேண்டும். அரசிடம் கோரிக்கை வைத்தால் நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கையை, ஒரு சூழலை உருவாக்க வேண்டும்."

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

தெரிந்து கொள்வோம்

"உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" என்ற புதிய திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு - 23.11.2023

❖ அரசினால் அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்கள் மக்களை சரியாகச் சென்று அடைகின்றனவா? பல்வேறு துறைகளால் வழங்கப்படுகின்ற சேவைகள் மக்களுக்கு முறையாகக் கிடைக்கின்றனவா? என்பதை முதலமைச்சரே களத்திற்கு நேரடியாகச் சென்று, ஆய்வில் ஈடுபட்டு, அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டு, கள அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தையும் நடத்தி உரிய அறிவுரைகளை வழங்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட திட்டம்தான் "களத்தில் முதல்வர் திட்டம்".

❖ "மக்களிடம் செல், அவர்களுடன் வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள், அவர்களை நேசி, அவர்களுக்குச் சேவை செய்" என்று சொன்ன பேரறிஞர் அண்ணாவின் கனவை நனவாக்கும் திட்டம் இது.

❖ மக்களுக்காகச் செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்கள் மக்களின் நலனையும் முன்னேற்றத்தையும் மையமாகக் கொண்டு தீட்டப்படுகின்றன; செயல்படுத்தப்படுகின்றன. அவற்றின் பலன் மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டியதும், மக்கள் அரசு நலத்திட்டங்களின் முழுப்பலனையும் அடைவதிலுள்ள இடர்ப்பாடுகளைக் களைய வேண்டியதும் அரசு இயந்திரத்தின் முதன்மையானப் பணி ஆகும்.

❖ அரசு இயந்திரம், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன், மக்களைத் தேடிச் சென்று பணியாற்ற வேண்டும். மக்களையும், அரசையும் இணைக்கும் பாலமாகச் செயல்பட்டு வருபவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள். ஒவ்வொரு கிராமத்தில் வசிக்கும் மக்களும் தங்கள் கிராம முன்னேற்றத்திற்கும், அரசு தொடர்பாகத் தனக்கிருக்கும் பிரச்சினைகளுக்கும், தீர்வை நாடிச் செல்லும் நபர் மாவட்ட ஆட்சித் தலைவர். தங்கள் அருகில் இருக்கும் பிற அதிகாரிகள் அன்புக்குரியவராக இருப்பினும், மக்களின் மகத்தான அன்புக்கும், ஆதரவுக்கும், நம்பிக்கைக்கும் உரியவர்களாக மாவட்ட ஆட்சியர்களைப் பார்க்கிறார்கள். மாவட்ட ஆட்சியர்களிடம் திங்கட்கிழமை தோறும் வந்து மனு அளிக்கிறார்கள். மாவட்ட ஆட்சியர் பதவியின் கம்பீரம் மக்களைக் கலவரம் அடையச் செய்வதில்லை, மாறாக கவர்ந்திழுக்கிறது.

❖ "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும், இனி ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் வட்டம் அளவில் தங்கி, கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும், தங்கு தடையின்றி மக்களைச் சென்று அடைவதை உறுதி செய்வர்.

❖ இந்தத்திட்டம், 'களத்தில் முதல்வர்' திட்டத்தின் அடுத்தகட்டம் எனலாம்; மக்களிடம் செல் என்று சொன்ன அண்ணாவின் கனவுத்திட்டம் என்றும் சொல்லலாம்.

❖ உங்களை நாடி, உங்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் வருகிறது. நானும் அரசு இயந்திரமும் களத்திற்கு வருகிறோம். கவனமுடன் உங்கள் குறை கேட்போம்; களத்திலேயே தீர்வு காண்போம்; மக்களின் கவலையைப் போக்குவோம்; மகத்தான தமிழ்நாட்டை உருவாக்குவோம்.

கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களின் பராமரிப்புச் செலவிற்காக ரூ.8 கோடி அரசு மானியம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் - 24.11.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 24.11.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களின் நிருவாகம், பராமரிப்புச் செலவிற்காக தற்போது வழங்கப்பட்டு வரும் அரசு மானியத்தை ரூ.6 கோடியிலிருந்து ரூ.8 கோடியாக உயர்த்தி அதற்கான காசோலையைச் சுசீந்திரம் - கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களின் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. கோ. இராமகிருஷ்ணன் அவர்களிடம் வழங்கினார். மேலும், ஒருகால பூஜைத்திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் / மகள்களின் மேற்படிப்பிற்கு உயர்கல்வித் தொகையினை 400 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 8 மாணவர்களுக்கு அதற்கான வங்கி வரைவோலைகளையும், திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் பயிலும் மாணவர்களுக்கான ஊக்கத்தொகையை முறையே ரூ.4,000, ரூ.2,000ஆக உயர்த்தி 292 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 8 மாணவர்களுக்கு அதற்கான வங்கி வரைவோலைகளையும் வழங்கினார்.

கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களின் நிருவாகம் பராமரிப்புச் செலவிற்காக ரூ.8 கோடி அரசு மானியம் வழங்குதல்

2023 - 2024ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், "கன்னியாகுமரி மாவட்டத்தின் இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத திருக்கோயில்கள் நிருவாகச் செலவினங்களுக்காகத் தற்போது ரூ.6 கோடி வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை குறைவாக உள்ள காரணத்தால் மேற்படி திருக்கோயில்கள் நிருவாக செலவினங்களுக்காக வழங்கப்படும் அரசு மானியத் தொகை இவ்வாண்டு ரூ.6 கோடியிலிருந்து ரூ.8 கோடியாக உயர்த்தப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 490 திருக்கோயில்களின் நிருவாகம், பராமரிப்புச் செலவிற்காக அரசு மானியமாக ரூ.8 கோடிக்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சுசீந்திரம் – கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களின் அறங்காவலர் குழுத் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 490 திருக்கோயில்களின் நிருவாகம், பராமரிப்புச் செலவிற்காக 2019–2020ஆம் நிதியாண்டு வரை ரூ.3 கோடி அரசு மானியமாக வழங்கப்பட்டு வந்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021 – 2022ஆம் நிதியாண்டு முதல் அம்மானியத்தை ரூ.6 கோடியாக உயர்த்தி, கடந்த 27.12.2021 அன்று வழங்கினார். தற்போது அத்தொகை போதுமானதாக இல்லாததால் இந்த நிதியாண்டு முதல் அரசு மானியத் தொகை ரூ.8 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு கால பூஜைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் / மகள்களின் மேற்படிப்பிற்குக் கல்வி உதவித்தொகை வழங்குதல்

2023 – 2024ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், "ஒரு கால பூஜைத் திட்ட திருக்கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களின் பிள்ளைகளின் நலன் கருதி மேற்படிப்பிற்கு ஆண்டொன்றுக்கு 400 மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கிட மைய நிதி ஏற்படுத்தப்படும்" எனவும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ஒருகால பூஜைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் / மகள்களின் மேற்படிப்பிற்கான உயர்கல்வித் தொகையினை 400 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 8 மாணவர்களுக்கு அதற்கான வங்கி வரைவோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள ஒருகால பூஜைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் / மகள்களின் மேற்படிப்பிற்கு உதவிடும் வகையில் பள்ளி, கல்லூரிக் கல்வி மேம்பாட்டு மைய நிதி மூலம் கல்வி உதவித்தொகையாக அதிகபட்சம் ரூ.10,000 அல்லது கல்லூரியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத் தொகை இவற்றில் எது குறைவோ அந்தத் தொகை ஆண்டுதோறும் 400 மாணவர்களுக்கு வழங்கப்படும். இதனால் அரசு, தனியார் கல்லூரிகளில் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம், சட்டம், உயர்கல்வி பயிலும் அர்ச்சகர்களின் பிள்ளைகள் பயன்பெறுவர்.

திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் பயிலும் மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகை வழங்குதல்

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க முன்னோடித் திட்டத்தை கொண்டுவந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரம் / பகுதி நேரம் பயிலும் மாணவர்களுக்கான ஊக்கத்தொகை உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி, திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் பயிலும் மாணவர்களுக்கான ஊக்கத்தொகையை முறையே ரூ.4,000, ரூ.2,000ஆக உயர்த்தி 292 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 8 மாணவர்களுக்கு அதற்கான வங்கி வரைவோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்பட்டு வரும் அர்ச்சகர், ஓதுவார், வேதாகமம், தவில், நாதஸ்வரம், பிரபந்த விண்ணப்பப் பாடசாலை ஆகிய 15 பயிற்சிப் பள்ளிகளில் முழுநேரப் பயிற்சிப் பள்ளிகளில் மாதந்தோறும் வழங்கப்படும் ஊக்கத்தொகை ரூ.3,000லிருந்து ரூ.4,000ஆகவும், பகுதி நேரப் பயிற்சிப் பள்ளிகளில் மாதந்தோறும் வழங்கப்படும் ஊக்கத்தொகை ரூ.1,500லிருந்து ரூ.2,000ஆகவும் உயர்த்தி அந்தந்த திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும். இதன்மூலம் முழுநேரப் பயிற்சி பெறும் 212 மாணவர்களும், பகுதிநேரப் பயிற்சி பெறும் 80 மாணவர்களும், என மொத்தம் 292 மாணவர்கள் பயன்பெறுவர்.

இலக்கு

“அனைத்துத் துறையும் வளர வேண்டும், அனைத்துச் சமூகமும் மேம்பாடு அடைய வேண்டும், அனைத்துத் தொழில்களும் சிறக்க வேண்டும், அனைத்து மாவட்டங்களும் செழிக்க வேண்டும் என்பதுதான் எங்களது இலக்கு.”

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

திருக்கோயில்கள் சார்பில் 1,100 மணமக்களுக்குத் திருமணம் நடத்தி வைக்கும் நிகழ்வை நிறைவு செய்திடும் விதமாக, இரண்டு மணமக்களுக்கான திருமணத்தை நடத்தி சீர்வரிசை...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார் - 24.11.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 24.11.2023 அன்று, சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் 1,100 மணமக்களுக்குத் திருமணம் நடத்தி வைக்கும் நிகழ்வை நிறைவு செய்திடும் விதமாக, இரண்டு மணமக்களுக்கான திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களுக்கு சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

திருக்கோயில்கள் சார்பில் 1,100 மணமக்களுக்குத் திருமணம் நடத்தி வைத்தல்

2022-2023ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையில், "ஒரு இணை ஆணையர் மண்டலத்திற்கு 25 இணைகள் வீதம் 20 மண்டலங்களில் ஆண்டுதோறும் 500 இணைகளுக்குத் திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்படும். இதற்கான செலவினத்தைத் திருக்கோயில்களே ஏற்கும்" என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் 04.12.2022 அன்று சென்னை இணை ஆணையர் மண்டலத்திற்குட்பட்ட திருக்கோயில்கள் சார்பில் 25 மணமக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்றுத் திருமணத்தை நடத்தி வைத்துச் சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் மொத்தம் 500 மணமக்களுக்குத் திருக்கோயில்கள் சார்பில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. மேலும், திருக்கோயில்கள் மூலம் நடத்தப்படும் திருமணத்திற்கு அனுமதிக்கப்பட்ட திட்டச் செலவினத் தொகையை 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

2023-2024ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையில், "பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்குத் திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் பொன் தாலி உட்பட ரூ.50,000 மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கித் திருமண

விழா நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 500 இணைகளுக்குத் திருக்கோயில் சார்பில் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. இவ்வாண்டு கூடுதலாக மேலும் 100 இணைகளைச் சேர்த்து ஒரு மண்டலத்திற்கு 30 இணைகள் வீதம் 600 இணைகளுக்குத் திருக்கோயில்கள் சார்பாக திருமண விழா நடத்தி வைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, முதற்கட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 07.07.2023 அன்று, சென்னை, அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், 34 மணமக்களுக்குத் திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து சென்னையில் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் தலைமையிலும், பிற மாவட்டங்களிலும் திருக்கோயில்கள் சார்பில் திருமணங்கள் நடத்தப்பட்டன.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை 2022-2023ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட 500 திருமணங்களும், 2023-2024ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட 600 திருமணங்களில் 564 திருமணங்களும், ஆக மொத்தம் 1,064 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

இன்றைய தினம், திருக்கோயில்கள் சார்பில் பிற மாவட்டங்களில் 34 மணமக்களுக்கும், சென்னையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 2 மணமக்களுக்கும் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டு மொத்தம் 1,100 திருமணங்கள் நிறைவு பெற்றுள்ளன.

தெரிந்து கொள்வோம்

கூட்டுறவு வார விழாவில் ரூ.876.84 கோடி கடனுதவிகளைப் பெற்று 1,11,027 நபர்கள் பயன்

- ஆண்டுதோறும் நவம்பர் 14 முதல் 20 வரை நாடு முழுவதும் அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா நடைபெறுவது வழக்கம் அவ்வகையில் இந்தாண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாட்டில், "ஒரு இலட்சம் கோடி டாலர் பொருளாதாரம், நீடித்த, நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளில் கூட்டுறவு அமைப்புகளின் பங்கு" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடைபெற்றது. 70ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா – 2023, நவம்பர் 14 முதல் 20 வரை, தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும், ஒவ்வொரு நாளும் ஒரு தலைப்பில் என 7 நாட்கள் மாவட்ட மற்றும் மாநில அளவில் விழாக்கள் சிறப்பாக நடைபெற்றது.
- தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் ஏழு நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்ற இந்த வார விழாக்களில் கூட்டுறவுத்துறை தொடர்பான விழிப்புணர்வு, கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் நற்பயன்களை அறிந்துகொள்ளும் வகையில், 118 உறுப்பினர் கல்வி திட்ட முகாம்கள், 26 இரத்ததான முகாம்கள், 40 கவியரங்கம்/கருத்தரங்கங்கள், 44 கால்நடை சிகிச்சை முகாம்கள், நடத்தப்பட்டதோடு, 1,500 இடங்களில் 3,872 மரக்கன்றுகள் நடப்பட்டன.
- ஏழை, எளிய, நலிவுற்ற மக்கள், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம் மேம்பாடு அடையும் வகையில், கூட்டுறவுத் துறையின் மூலம், பயிர்க்கடன், நகைக் கடன், மகளிர் சுய உதவிக்குழு கடன், டாம்கோ, டாப்செட்கோ, தாட்கோ கடன், சிறுவணிகக் கடன், மகளிர் தொழில்முனைவோர் கடன், வீட்டுவசதிக் கடன், வீட்டு அடமானக் கடன், சம்பளக் கடன் எனத் தொடர்ச்சியாகப் பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டு வந்தாலும், கூட்டுறவு வாரவிழா நடைபெறும் இந்தக் காலகட்டத்தில் 7 நாட்களில் மட்டும் தமிழ்நாடு முழுவதும் 1,11,027 நபர்களுக்கு ரூ.876.84 கோடிக்கு மேற்பட்ட கடனுதவிகள் வழங்கப்பட்டுப் பயனடைந்துள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில்

ரூ.400 கோடி முதலீட்டில் 4,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் காலணி உற்பத்தித் தொழிற்சாலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள் - 28.11.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 28.11.2023 அன்று, பெரம்பலூர் மாவட்டம், எறையூர் சிப்காட் தொழில் வளாகத்தில் அமைந்துள்ள ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணிப் பூங்காவில் ரூ.400 கோடி முதலீட்டில் 4,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள JR One காலணி உற்பத்தித் தொழிற்சாலையைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

இத்தொழிற்சாலையை அமைக்க 28.11.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். அதன் பின்னர், மிகச் சரியாக ஓர் ஆண்டு காலத்தில் இத்தொழிற்சாலை நிறுவப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்திய அளவில் தமிழ்நாடு பல பொருளாதாரக் குறியீடுகளில் முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. இப்பெருமை நிலைபெறவும், பெரும் அளவிலான முதலீடுகளை ஈர்த்துத் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கி, அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திடவும், மாநிலத்தில் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பல்வேறு நடவடிக்கைகளை முனைப்புடன் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

காலணிகளைப் பொறுத்தவரை, உலக அளவில் தோல் அல்லாத காலணிகளின் நுகர்வும், விளையாட்டு வீரர்களின் காலணிகளுக்கான நுகர்வும் அதிக அளவில் உள்ளன. மேலும், இத்துறையில் அதிக வளர்ச்சிக்கான வாய்ப்புகளும், ஏற்றுமதிக்கான மிகப்பெரிய சாத்தியக்கூறுகளும் உள்ளன. இவை மட்டுமன்றி, அதிக எண்ணிக்கையில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் துறையாகவும் இத்துறை திகழ்கிறது.

இத்துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதில் பெரும் அளவில் முதலீடுகள் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வண்ணம், 23.08.2022 அன்று "தமிழ்நாடு காலணி, தோல்பொருட்கள் கொள்கை-2022" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

"அனைவரையும் உள்ளடக்கிய பரவலான மற்றும் நிலையான வளர்ச்சி" என்பதை நோக்கமாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, பின்தங்கிய மாவட்டமான பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள எறையூர் சிப்காட் நிறுவனம் மூலமாக ஒரு தொழிற் பூங்காவை அமைத்துள்ளது. இப்பூங்காவில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டதன் மூலமாக, பெரம்பலூர் மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த இளைஞர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புக்கள் உருவாகும். இதனால் இப்பகுதி மக்களின் தனிநபர் வருமானம் அதிகரிப்பதுடன் பொருளாதாரமும் மேம்படும். இந்நிறுவனம், 2028ஆம் ஆண்டிற்குள் ரூ.2,440 கோடி முதலீட்டில் 29,500 நபருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் விரிவாக்கம் செய்திடவும் திட்டமிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சிறப்பாக நடைபெறும், JR ஒன் ஃபுட்வேர் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் உற்பத்தித் திட்டத்தின் துவக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்!

கடந்த ஆண்டு நவம்பர் மாதம்தான், பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் அமைக்கப்பட்டிருக்கின்ற சிப்காட் தொழில் பூங்காவைத் திறந்து வைத்து, ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணிப் பூங்காவுக்கும் அடிக்கல் நாட்டினேன். சரியாக ஓராண்டுக் காலத்தில் துவக்க விழாவில் பேசுவதில் எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி!

முதலீட்டாளர்களின் முதல் தேர்வு, தமிழ்நாடு!

மாநிலத்தில் முதலீடுகளுக்குச் சாதகமான சூழ்நிலை நிலவுவதுதான் இதற்கு முக்கியமான காரணம்.

இங்கே பிசினஸ் செய்வது எவ்வளவு எளிதாக இருக்கிறது என்பதும், முதலீட்டாளர்கள் பெரிதும் விரும்பும் மாநிலமாகத் தமிழ்நாடு எப்படித் திகழ்கின்றது என்பதற்கும் இது கண்கூடான சாட்சி!

வளர்ச்சித் திட்டங்கள் என்பது, வேலை வாய்ப்புகளை உருவாக்கவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

தோல், காலணித் துறைகளைப் பொறுத்தவரைக்கும், இந்த அரசுப் பொறுப்பேற்ற பிறகு பல்வேறுத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது உங்களுக்கே அது நன்றாகத் தெரியும்!

கடந்த ஆண்டு, தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் கொள்கை 2022-ஐ நான் வெளியிட்டேன். இந்த நடவடிக்கைகளுக்குப் பிறகு, இந்தத் துறையில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது நமக்கெல்லாம் கண்கூடாகவேத் தெரிகிறது.

இதுமாதிரியான வளர்ச்சியைப் பார்க்கும்போது, 2030ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதார மாநிலம் என்ற நம்முடைய இலக்கை அடைகின்ற நாள் வெகு தொலைவில் இல்லை என்ற நம்பிக்கை எங்களுக்கு வளர்ந்து கொண்டே போகிறது!

இந்தத் துறையில், நம்முடைய தமிழ்நாட்டின் நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்தவேண்டும், இன்னும் பல பன்னாட்டு நிறுவனங்களை ஈர்த்திடவேண்டும் என்ற உந்துதல் காரணமாக, நமது அரசு பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கத்தில், ரூ.400 கோடி செலவில் 250 ஏக்கர் பரப்பளவில் காலணி உற்பத்திப் பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் 20 ஆயிரம் நபருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

சிப்காட் / சிட்கோ, பொது - தனியார் கூட்டாண்மை மூலம், 30-50 ஏக்கர் பரப்பளவில் தொழில் பூங்காக்கள் வடிவில் ஆயத்த தொழில்கூடங்களுடன் புதிய தோல் அல்லாத காலணி உற்பத்திக்கான பசுமைத் தொகுப்புகளை அரசு உருவாக்க இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போது பெரம்பலூர் மாவட்டத்தில், இவ்வளவு சிறப்பானத் திட்டத்திற்கான திறப்பு விழா நடைபெறுகிறது. "பரவலான வளர்ச்சியே பார் போற்றும் வளர்ச்சி. சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி" என்று நான் அடிக்கடிச் சொல்வதுண்டு!

பின்தங்கிய மாவட்டங்களில் முதலீடுகளை ஈர்த்திட அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்குப் பலன் அளிக்கின்ற வகையில், இந்தத் திட்டத்திற்கான திறப்பு விழா இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக, பெரம்பலூர் மாவட்டம், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த இளைஞர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாகும்.

இன்றைக்கு, முதற்கட்டமாக, ரூ.400 கோடி முதலீடு மற்றும் 4,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், கோத்தாரி குழுமத்தைச் சார்ந்த JR One கோத்தாரி காலணி உற்பத்தித் தொழிற்சாலை துவக்கி வைக்கப்படுகிறது. 2028ஆம் ஆண்டுக்குள், கோத்தாரி ஃபீனிக்ஸ் நிறுவனம், மேலும் ரூ.2,440 கோடி முதலீடு, 29,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்று விரிவாக்கம் செய்யவும் திட்டமிட்டிருக்கிறது.

இவை எல்லாம் முதலீட்டாளர்களிடம் நம்பிக்கையை விதைத்திருக்கிறது. இதற்கெல்லாம் மணிமகுடமாக, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை, வருகிற ஜனவரி மாதம் சென்னையில் நடத்த இருக்கிறோம். உங்களைப் போன்ற நிறுவனங்களோடு சேர்ந்துதான் இந்த மாநாட்டை நடத்த இருக்கிறோம்.

உலகம் முழுக்க இருந்து பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வர இருக்கிறார்கள்.

அதற்கு முன்பாகவே, ஃபீனிக்ஸ் கோத்தாரி நிறுவனம், இந்த அதிநவீன உற்பத்தித் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறது மிக மகிழ்ச்சி அளிக்கிறது.

சொல்லப்போனால், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு முன்னதாகவே, பல நிறுவனங்களோடு துவக்க விழாவை நான் சமீபத்தில் மேற்கொண்டிருக்கிறேன்.

உங்கள் தொழில் முயற்சி வெற்றி பெறவும், உங்களுடைய திட்டங்கள் மென்மேலும் வளர்ச்சி பெற்றிடவும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்!

இந்தத் தொழில் மேலும் சிறப்படைய அனைத்து உதவிகளையும் இந்த அரசு உறுதியாகச் செய்யும் என்று உறுதி அளித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 135ஆவது பிறந்த நாள்

படமும்/செய்தியும்

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 135ஆவது பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் 14.11.2023 அன்று, சென்னை, கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், துறை உயர் அலுவலர்கள் ஆகியோர்கள் உடனிருந்தனர்.

"நீயே உனக்கு ராஜா" என்ற புதிய திட்டம் அறிமுகம்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் துவக்கி வைத்தார் - 01.12.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் துவங்கி வைக்கப்பட்ட மாபெரும் திறன் மேம்பாட்டிற்கான நான் முதல்வன் திட்டம் இரண்டாம் ஆண்டில் வெற்றிகரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்காகத் துவங்கப்பட்ட இத்திட்டம் பின்னர் பாலிடெக்னிக், தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் பயன்பெறும் நிலையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு முதலாம் ஆண்டில் 13.14 இலட்சம் மாணவர்களுக்கும், இரண்டாம் ஆண்டில் 14.9 இலட்சம் மாணவர்களுக்கும் தேவையான உயர்தொழில்நுட்பத் திறன்கள் அவர்கள் படிக்கும் கல்வி வளாகங்களிலேயே பயிற்றுவித்து வளர்ந்து விரிந்துள்ளது. உயர்கல்வி பாடத்திட்டத்தில் புதுமையான தொழில்நுட்பங்களைப் பெரும்பான்மையான மாணவர்களுக்குப் பயிற்றுவித்து, முன்னணி நிறுவனங்களில் பெரும்பாலானோருக்கு வேலைவாய்ப்பு என உயர்கல்வியில் மலர்ச்சி தந்து புரட்சியையும் படைத்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நான் முதல்வன் திட்ட இளையதளம் செயற்கை நுண்ணறிவு (ARTIFICIAL INTELLIGENCE) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி தேவை சார்ந்த கேள்விகளுக்குச் சரியாக பதில் அளித்து வழிகாட்டும் இளையா என்ற chatbot, திறன் பயிற்சி சார்ந்த தகவல்கள் பெற்றுக் கொள்ளும் பொருட்டு 044-25252626 என்ற உதவி எண் IVRS ஒருங்கிணைந்த அழைப்பு மையத்துடன் கூடிய தளத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்திலிருந்து வேலைவாய்ப்பு வேண்டி எந்த இளைஞர் அழைத்தாலும், அவர்களுக்குப் பொருத்தமான திறன் பயிற்சி, வேலைவாய்ப்புகளை அவர்களின் மாவட்டம் அல்லது அருகாமையில் உள்ள மாவட்டங்களில் கண்டறிந்து இந்த இளையதளம் சார்ந்த அழைப்பு மையமானது அவர்களுக்குச் சரியாக வழிகாட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இளைஞர்களுக்கு ஆட்தேர்வு, உரிய திறன் பயிற்சி, முடிவில் வேலைவாய்ப்பு (Recruit Train and Deploy Model) அளித்திடும் வகையில் நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக ஜான்சன் எலெக்ட்ரிக், போஸ் லிமிடெட், என்எல்சி, இந்தியா, நெட்டூர் டெக்னிகல் ட்ரெய்னிங் பவுண்டேஷன் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு அமைச்சர் முன்னிலையில் பரிமாறப்பட்டது.

தொன்மையும் மரபும் அழகுக்கலை நயமும் பொதிந்த தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைகளைக் காக்கும் வண்ணம் அழிந்து வரும் மரபுசார் கைவினைகளுக்குப் புத்துயிர் அளிக்கும் வகையிலும், கலை ஆர்வம் கொண்ட இளைஞர்களை ஈர்த்துக் கலைத் தொழில்முனைவோராக உருவாக்கும் முயற்சியாகத் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பாக "நீயே உனக்கு ராஜா" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி மூன்று பயனாளிகளுக்குத் தஞ்சாவூர் சிற்பக்கலை, தலையாட்டி பொம்மை, மர சிற்பங்கள் செய்ய தேவையான கைவினைப் பெட்டகங்களை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

கள்ளக்குறிச்சியில் மரவேலைப்பாடு கலைத்திறன் பயிற்சி, தஞ்சாவூரில் தலையாட்டிப் பொம்மை, பித் வேலை, தஞ்சாவூர் ஓவியம் போன்ற கலைத்திறன் பயிற்சிகள், இராமநாதபுரத்தில் பனை ஓலை கலைத்திறன் பயிற்சிகள், தூத்துக்குடியில் கடல் சிப்பிக் கலைத்திறன் பயிற்சிகள், மதுரையில் களிமண், காகிதம், மட்பாண்டம், கைகாட்டுச் சாயம் போன்ற கலைத்திறன் பயிற்சிகள், திருநெல்வேலியில் பத்தமடைப் பாய், மட்பாண்டம் கலைத்திறன் பயிற்சிகள், அந்தந்த மாவட்டங்களிலேயே அதற்கேற்ற பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. இந்த பயிற்சியின்போது மாதம் உதவித் தொகையாக ரூ.12,500, பயிற்சிக்கான கருவிகள், STARTUP TN உடன் இணைந்து பொருத்தமான இன்குபேட்டர்களை கண்டறிதல், அனுபவம் வாய்ந்த வழிகாட்டுதல், (TANSEED) நிதி ரூ.15 இலட்சம் வரை பங்கு முதலீடு, ஏற்றுமதி திறன், அரசாங்க உதவியுடன் வங்கிக் கடன், மானியம், பலவற்றை அளித்துத் தகுதி வாய்ந்த ஆர்வமுள்ள இளைஞர்களை தொழில்முனைவோராக மாற்றும் பொருட்டு வழங்கப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் கண்டறியப்பட்ட சிறந்த ஆட்சேர்த்தல், பணியமர்த்தும் நிறுவனங்கள் மூலமாகப் பணிவாய்ப்புப் பெற்ற 5,500 நபர்களில் 300 இளைஞர்களுக்கும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக் தீன் தயாள் உபாத்யயா கிராமின் கல்யாண் யோஜனா (DDUGKY) திட்டத்தின் மூலம் திறன் பயிற்சி பெற்று வேலைவாய்ப்புப் பெற்ற 1,000 இளைஞர்களுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகள் வழங்கினார்கள்.

தமிழ்நாடு திறன்மேம்பாட்டுக் கழகம் அளித்த திறன் பயிற்சிகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் 2,01,994 நபர்கள் பயிற்சி பெற்று அவர்களில் 96,856 நபர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்..

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட்ட இளைஞர் திருவிழாக்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்

கழக வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சிகள் மூலம் வேலைவாய்ப்பைப் பெற்ற 1,300 நபர்களுக்குப் பணி நியமன கடிதங்களை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இளைஞர் திறன் திருவிழாக்கள், வேலைவாய்ப்பு முகாம்கள், இளைஞர் திறன் பயிற்சித் திட்டம் ஆகியவற்றின் மூலம், சுமார் 1 இலட்சத்து 20 ஆயிரம் இளைஞர்கள், பல்வேறு தொழில்துறைகளில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். இன்றைய தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் இளைஞர் திருவிழாவின் மூலம் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களில் தேர்வான நபர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

படமும் / செய்தியும்

மிக்ஜாம் புயலால் பாதிப்புகள் ஏற்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீட்புப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு

தமிழ்நாடு அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் திரு.வி.க.நகர் மண்டலம், புளியந்தோப்பு, டிமலஸ் சாலையில் உள்ள நீரேற்று நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வெளியேற்றும் பணியினையும், குருசாமிக் கால்வாயில் மழைநீர் எளிதில் செல்லும் வகையில் குப்பைக் கழிவுகளை அகற்றும் பணியினையும் பார்வையிட்டு 08.12.2023 அன்று ஆய்வு மேற்கொண்டார்.

தெரிந்து கொள்வோம்

அடுக்குமாடிக் குடியிருப்புகள் பதிவு செய்வதில் புதிய நடைமுறை அறிமுகம்

* தற்போது தமிழ்நாட்டில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் குறித்த ஆவணங்கள் பதிவுக்கு வருகையில் இரண்டு ஆவணங்களாகப் பதிவு செய்யும் நடைமுறை பின்பற்றப்படுகிறது. அதாவது அடிநிலம் பொருத்துப் பிரிபடாத பாகத்திற்குக் கிரையமாக ஓர் ஆவணமாகவும் கட்டடப் பகுதியைப் பொருத்துக் கட்டுமான உடன்படிக்கையாக ஓர் ஆவணமாகவும் இரண்டு ஆவணங்களாகப் பதிவு செய்யப்படுகின்றன.

* அடுக்குமாடிக் குடியிருப்புகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும்போது அடிநிலம் மற்றும் கட்டடம் சேர்ந்த பகுதிக்கு என ஒரே விலையே நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. கட்டடங்களை விற்பனை ஆவணமாகப் பதிவு செய்யாமல் கட்டுமான உடன்படிக்கை ஆவணமாகப் பதிவு செய்யும் வழக்கமும் தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால், இந்தப் பரிவர்த்தனை இரண்டு வெவ்வேறு ஆவணங்களாகப் பதிவு செய்யப்படுகின்றன. விற்பனை ஆவணத்திற்கு 7% முத்திரைத் தீர்வை, 2% பதிவுக் கட்டணமும் கட்டுமான உடன்படிக்கை ஆவணங்களைப் பொருத்து 1% முத்திரைத் தீர்வை, 3% பதிவுக்கட்டணமும் வசூலிக்கப்படுகின்றன.

* தமிழ்நாட்டைத் தவிர பிற அனைத்து மாநிலங்களிலும் அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பொருத்துக் கட்டடம், அடிநிலம் சேர்ந்த ஒரு கூட்டுமதிப்பு நிர்ணயிக்கப்பட்டு இம்மதிப்பானது மொத்த கட்டடப் பரப்பைப் பொருத்துக் கணக்கிடப்பட்டு அதனடிப்படையில் விற்பனை ஆவணமாகவேப் பதிவு செய்யப்படுகிறது. மற்ற மாநிலங்களில் நிலவும் இம்முறையைத் தமிழ்நாட்டிலும் பின்பற்றலாம் என முடிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் இது குறித்துத் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 27.07.2023, 07.09.2023, 12.09.2023 ஆகிய தேதிகளில் இப்பிரதிநிதிகளுடன் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் பங்கேற்ற ரியல் எஸ்டேட் அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டு மதிப்பு அடிப்படையில் அடுக்குமாடிக் குடியிருப்புகளை விற்பனை ஆவணமாகப் பதிவு செய்யத் தங்களின் இசைவினைத் தெரிவித்தனர். ஆனால் இவ்வகை ஆவணத்திற்கான முத்திரைத் தீர்வைக் குறைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

* இந்நேர்வு தொடர்பாகப் பதிவுத்துறை தலைவரால் அனுப்பப்பட்ட முன்மொழிவு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பதியும்போது இனிப் பிரிபடாத பாக நிலத்திற்கு ஒரு தனி ஆவணம் கட்டடத்திற்கு ஒரு தனி ஆவணம் என இரு ஆவணங்களாகப் பதியப்படும் நிலையை மாற்றி கட்டடம், அடிநிலம் சேர்ந்த கூட்டு மதிப்பின் அடிப்படையில் ஒரே விற்பனை ஆவணமாகப் பதிவுசெய்யும் நடைமுறையை அமல்படுத்தவும் குறிப்பிட்ட மதிப்பு வரையிலான புதிய குடியிருப்புகள் பதிவிற்கான முத்திரைத் தீர்வையைக் குறைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. மதிப்பு ரூ.50 இலட்சம் வரையுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான முத்திரைத் தீர்வையைத் தற்போது உள்ள 7%லிருந்து 4%ஆக குறைக்கலாம் என்றும் ரூ.50 இலட்சம் முதல் ரூ.3 கோடி வரையிலான அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான முத்திரைத் தீர்வையை 7%லிருந்து 5%ஆகக் குறைக்கலாம் என்றும் அரசால் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

* இதனால் ரூ.50 இலட்சம் வரையிலான மதிப்புடைய புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை வாங்குவோர் விற்பனைக் கிரைய ஆவணம் பதியும்போது முத்திரைத் தீர்வை 4%, பதிவுக் கட்டணம் 2%ஆக மொத்தம் 6% செலுத்தினால் போதுமானது. ரூ.50 இலட்சம் முதல் ரூ.3 கோடி வரையிலான மதிப்புடைய அடுக்குமாடிக் குடியிருப்புகளை வாங்குவோர் முத்திரைத் தீர்வை 5% மற்றும் பதிவுக் கட்டணம் 2% ஆக மொத்தம் 7% செலுத்தினால் போதுமானது.

* இந்தச் சலுகையானது பிரிபடாத பாக மனையுடன் பதியப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு மட்டுமே வழங்கப்படும். மேலும் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் முதல் விற்பனைக்கு மட்டுமே இது பொருந்தும். மறு விற்பனைக்குப் பொருந்தாது.

* இனிமேல் அடுக்குமாடிக் குடியிருப்புகளை வாங்குவோர் கட்டுமான ஒப்பந்த ஆவணமாக இல்லாமல் விற்பனைக் கிரைய ஆவணமாகப் பதிந்து தங்கள் குடியிருப்பை உடைமையாக்கிக் கொள்ளலாம். அடுக்குமாடிக் குடியிருப்புகளை அடிநிலம் சேர்ந்த கூட்டு மதிப்பின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட முத்திரைத் தீர்வையைச் சலுகையுடன் பதியும் இப்புதிய நடைமுறை எதிர்வரும் 01.12.2023 முதல் அமலுக்கு வருகிறது. ஏற்கெனவே கட்டுமான ஒப்பந்த ஆவணமாகப் பதியப்பட்டிருக்கும் குடியிருப்புகளை மறு விற்பனை செய்வது தற்போது பதிவுத் துறையால் அனுமதிக்கப்பட்டு வரும் நிலையில், இந்த அனுமதியானது, 01.12.2023க்குப் பின்னர் பதியப்படும் கட்டுமான ஒப்பந்த ஆவணங்களைப் பொருத்து விலக்கிக் கொள்ளப்படும்.

* கூட்டு மதிப்பின் அடிப்படையில் அடுக்குமாடிக் குடியிருப்பு விற்பனை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை சலுகை வழங்கும் அரசின் இந்த நடவடிக்கையால் வங்கியில் கடன் பெற்றுப் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை வாங்கும் நடுத்தர மக்கள் மிகவும் பயன் பெறுவர்.

படமும்/செய்தியும்

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 145ஆவது பிறந்தநாள்

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 145ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், 10.12.2023 அன்று, சென்னை, பாரிமுனை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

ரூ.264.10 கோடி மதிப்பீட்டில் 11ஆம் வகுப்புப் பயிலும் 5,47,676 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகள்

தமிழ்நாடு அரசால் மேல்நிலைக்கல்வி பயிலும் மாணவ, மாணவியர் சிரமமின்றிப் பள்ளிக்குச் செல்லும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகள், பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்புப் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

2023-2024ஆம் கல்வியாண்டில் தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகள் , பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்புப் பயிலும் மாணவ – மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கும் விழா சென்னை தண்டையார்பேட்டை பட்டேல் நகரில் அமைந்துள்ள சென்னை மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 24.11.2023 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் – 24.11.2023

இந்த விழாவில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூ.264.10 கோடி மதிப்பில் 11ஆம் வகுப்புப் பயிலும் 5,47,676 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் அடையாளமாக 10 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.

கணித்தமிழ்24 பன்னாட்டு மாநாடு - நிரலாக்கப் போட்டி (Hackthon)

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில் நடந்த 'தமிழிணையம்99' மாநாட்டுக்குப் பிறகு 25 ஆண்டுகள் கழித்துத் தமிழ்நாடு அரசு ஒருங்கிணைக்கும் பன்னாட்டுக் கணித்தமிழ்24 மாநாடு, எதிர்வரும் பிப்ரவரி மாதம் 8, 9, 10 ஆகிய நாள்களில் சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள வர்த்தக மையத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. உலகு தழுவி வாழும் தமிழர்களுக்கு இணைய வழியில் தமிழ் கற்றுக்கொடுத்தல், தமிழ் நூல்களையும் இதழ்களையும் அரிய ஆவணங்களையும் மின்னுருவாக்கம் செய்தல், கணினித் தமிழை மேம்படுத்துதல் ஆகிய முக்கியமானப் பணிகளைச் செய்துவரும் தமிழ் இணையக் கல்விக்கழகம் இந்த மாபெரும் மாநாட்டை ஒருங்கிணைக்கிறது.

- 'தமிழிணையம்99' மாநாட்டுக்குப் பிறகு இந்த இடைப்பட்ட காலகட்டத்தில் தொழில்நுட்பம் அடைந்திருக்கும் வளர்ச்சி மிக அதிகம். செயற்கை நுண்ணறிவு என்று சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே நாம் பேசத் தொடங்கிவிட்டாலும் அண்மைக் காலத்தில்தான் அது முழுவீச்சில் களம் கண்டிருக்கிறது. எனவே, வளர்ந்துவரும் இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் தமிழுக்கான இடம் என்ன என்ற கேள்வியோடு, இந்தப் பன்னாட்டு மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆய்வுக் கட்டுரைகள், உரைகள், விவாதங்கள், கலந்துரையாடல்கள், காட்சி அரங்குகள் ஆகியவை கணித்தமிழ்24 மாநாட்டின் முக்கியக் கூறுகளாகும்.

- இம்மாநாட்டின் ஒரு பகுதியாகத் தமிழ் இணையக் கல்விக்கழகமானது StartupTN நிறுவனத்துடன் இணைந்து நிரலாக்கப் போட்டியை (Hackathon) நடத்துகிறது. இப்போட்டியின் வாயிலாக நவீனத் தொழில்நுட்பங்களான இயற்கை மொழி ஆய்வு, இயந்திரவழிக் கற்றல், செயற்கை நுண்ணறிவு, இதர டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் தமிழ் மொழியின் வளமையை வெளிக்கொணரவும், புதுமைகளைச் சிந்திக்கத் தூண்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

- டிஜிட்டல் யுகத்தில் தமிழ் மொழியின் பயன்பாட்டையும் புரிதலையும் மேம்படுத்தும் புதுமையான கருவிகள் உருவாக்குவதை ஊக்குவித்தல், மொழியியல் அறிஞர்களும் தொழில்நுட்ப வல்லுநர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டுத் தமிழ் மொழியில் தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கான சூழலை ஏற்படுத்துதல், கல்வி, உள்ளடக்க உருவாக்கம், தகவல்தொடர்பு போன்ற தளங்களில் பரந்துபட்ட பயனர்கள் பயன்படுத்தும் விதமாகத் தமிழ் மொழியைக் கொண்டு வருவதற்கான தீர்வுகளை உருவாக்குதல், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் தமிழ் மொழியைச் செழுமையுடன் பயன்படுத்துவதற்கான சூழலை உருவாக்குதல் ஆகியவை இந்த நிரலாக்கப் போட்டியின் நோக்கங்களாகும்.

- தமிழ் எழுத்துணரி (Tamil OCR), தமிழ்ப் பேச்சைப் புரிந்துகொள்ளுதல் (Tamil Speech Recognition), தமிழ் உள்ளடக்க உருவாக்கம் (Tamil Content Creation), தமிழ் உரையாடி (Tamil Chatbot), தமிழில் இயற்கை மொழி ஆய்வு (Tamil Language NLP) உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட தலைப்புகளில் நிரலாக்கப் போட்டி நடத்தப்படுகிறது. இந்தப் போட்டியில் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களும், ஆர்வலர்களும், மொழித் தொழில்நுட்பம் சார்ந்து செயல்படும் நிறுவனங்களும் கலந்துகொள்ளலாம்.

- இந்தப் போட்டியில் மிகச் சிறப்பாகப் பங்களிப்பவர்களுக்கு, கணித்தமிழ்24 மாநாட்டில் செயல்விளக்கம் அளிக்க வாய்ப்பு வழங்கப்படும். அவர்களுக்கானப் பரிசுகளும் மாநாட்டின்போது வழங்கப்படும். மேலும், நிரலாக்கப் போட்டியிலிருந்து உருவாகியிருக்கும் கருவிகள், மென்பொருள்கள், தளங்கள், தொழில்நுட்பங்கள் போன்றவை ஆய்வாளர்கள், பொதுப் பயன்பாட்டிற்காக www.tamilvu.org இணைய தளத்தில் பதிவேற்றப்படும்.

- அர்ப்பணிப்புமிக்க தொழில்நுட்ப வல்லுநர்கள், தொலைநோக்குச் சிந்தனையாளர்கள், அனுபவமிக்க மொழியியல் அறிஞர்கள், கல்விச் சமூகத்தினர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டும் முயற்சி இது. இதன்மூலம், தமிழ் மொழியின் பரவலான இருப்பையும், தற்காலத் தொழில்நுட்ப வளர்ச்சிகளில் தமிழ் மொழியின் நிலையையும் வெளிக்கொண்டுவர முடியும். இது இளம் தலைமுறையினருக்கு மிகப் பெரும் அனுபவமாக இருக்கும். இது போட்டியாக மட்டுமல்லாமல், கற்றல் செயல்பாடாகவும் இருக்கும். புதிய வாசல்களைத் திறந்துவைக்கும். நிரலாக்கப் போட்டி குறித்த விரிவான விவரங்களுக்கு: https://www.kanitamil.in/#/hackathon.

புதுடெல்லியில் 42ஆவது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி - 2023இல்

தமிழ்நாடு நாள் விழா

புதுடெல்லியில் நடைபெறும் 42ஆவது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி-2023ஐ முன்னிட்டு பிரகதி மைதானத்தில் உள்ள திறந்தவெளி கலையரங்கில் 17.11.2023 அன்று, "தமிழ்நாடு நாள் விழா"வைத் தமிழ்நாடு அரசின் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் திரு. ஆசிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப. மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இயக்குநர்/அரசு இணைச் செயலாளர் திரு. த.மோகன், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள்.

புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில், ஆண்டுதோறும் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தால் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியானது நவம்பர் 14ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை 14 நாட்கள் நடத்தப்பட்டு வருகிறது. இப்பொருட்காட்சியில் இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்கள், இந்திய யூனியன் பிரதேசங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் பங்கேற்றுத் தங்களது அரசின் வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள், கொள்கைகள் போன்றவற்றைக் காட்சிப்படுத்தியும், வெளிநாட்டு நிறுவனங்கள் தங்களது நாட்டில் தயாரிக்கப்படும் முக்கியப் பொருட்களைச் சந்தைப்படுத்தியும் வருகின்றன.

நடப்பாண்டில், இப்பொருட்காட்சிக்கான கருப்பொருள் - "உலகம் ஒரே குடும்பம் - வர்த்தகத்தால் ஒருங்கிணைக்கப்பட்டது" (Vasudhaiva Kudumpakam - United by Trade) ஆகும். அதாவது உலகமே ஒரு குடும்பம் அது வர்த்தகத்தால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாகும்.

இக்கண்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT), தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO), குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, தமிழ்நாடு சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (SIDCO), வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண் சந்தைப்படுத்தல் மற்றும் வேளாண் வணிகத்துறை, சுற்றுலாத்துறை, தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் கழகம் (POOMPUHAR), தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (Co-optex) ஆகிய 12 துறைகள் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னோடித் திட்டங்களான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப்பெண் திட்டம் போன்ற திட்டங்கள் குறித்தும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துபாய், சிங்கப்பூர், ஜப்பான் போன்ற வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொண்டு தமிழ்நாட்டில் தொழில் தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டது குறித்தும், அரசின் சாதனைகள் குறித்தும் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவன (SIPCOT)த்தின் ஸ்ரீபெரும்புதூர் வல்லம் வடகாலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிப்காட் தொழிற்சாலையில் பணிபுரியும் 18,000 ஆண் தொழிலாளர்களுக்கான தங்கும் வசதி கொண்ட விடுதிக் கட்டடங்கள், சிப்காட் தொழில் புத்தாக்க மையத்தின் மாதிரி வடிவமைப்புகள், சிப்காட் தொழில் பூங்காக்களின் விவரங்கள் கொண்ட மின்னணுத் திரைப் பலகைகள், சிப்காட் உள்ள தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் வாகனங்கள், உதிரிபாகங்களின் மாதிரி வடிவமைப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், டிட்கோ நிறுவனத்தின் நியோ டைட்டல் மாதிரி வடிவமைப்பும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. சிப்காட், டிட்கோ ஆகிய நிறுவனங்கள் தொழில்துறையில் வகிக்கும் முக்கிய பங்கு ஆகியவை தொடர்பான குறும்படங்கள் எல்.இ.டி. தொலைக்காட்சிகளில் திரையிடப்படுகின்றன. இவ்வரங்கில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதில் முக்கிய அம்சம் சென்னையில் வரும் ஜனவரி மாதத்தில் நடைபெறவிருக்கும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு (Global Investors Meet) தொடர்பான விவரங்களைப் பார்வையாளர்கள் அறிந்து பயன்பெறும் வகையில் QR Code முறை பொருத்தப்பட்டு வசதி செய்யப்பட்டுள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டத்திலிருந்து பிரதான உற்பத்திச் செய்யும் பொருட்களில் சில பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அவை மதுரையின் பிரசித்திப்பெற்ற சுங்கடிப் புடவை, சிவகங்கை கண்டாங்கிப் புடவை, ஈரோடு ஜமக்காளம், திருப்பூர் பனியன், கடலூர் செராமிக் பொம்மைகள், காஞ்சிபுரம் களிமண்ணால் செய்த பொம்மைகள், இராமநாதபுரம் பனை ஓலைகளால் செய்த கைவினைப் பொருட்கள், கன்னியாகுமரி நாரினால்

செய்யப்பட்ட மிதியடிகள், மரவள்ளிக் கிழங்கினால் உற்பத்திச் செய்யப்படும் மாவு மற்றும் ஜவ்வரிசி வகைகள், ஊட்டி இண்டுகோசர்வ் நிறுவனத்தின் 16 தொழிற்சாலைகள் மூலமாகப் பெறப்பெற்ற தேயிலைத் தூள்களைத் தரம் பிரித்து மதிப்புக் கூட்டப்பட்ட சுமையான பலவகை தரமான தேயிலைத் தூள்களைக் கவர்ச்சியான சிறிய பையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வேளாண்மைத்துறை சார்பாக அமைக்கப்பட்டுள்ள அரங்கில், சிறுதானிய ஆண்டை முன்னிட்டுச் சிறுதானியங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் உலகக் கோப்பை மாதிரி, நெல்லுக்கு மாற்றாகச் சிறுதானியங்களின் பயிர்ச் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் மாதிரி அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பாரம்பரிய நெல் வகைகளின் மேன்மையை உணர்த்தும் விதமாக 42 வகையான பாரம்பரிய நெல் ரகங்கள் காட்சிப்படுத்தப்பட்டும், அதன் மருத்துவக் குணங்கள் அடங்கிய பதாகைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அரங்கில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தரிசு நிலங்களையும் பரிசு நிலங்களாக மாற்றும் தமிழ்நாடு அரசின் மிக முக்கிய திட்டமான கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அரசின் 16 துறைகள் ஒருங்கிணைந்து கிராமத்தின் தன்னிறைவுப் பூர்த்திச் செய்யும் வகைளில் ஏரிகள், கால்வாய்கள் தூர்வாருதல், கிணறுகள் தோண்டுதல், ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், கிராமப்புறச் சாலைகள் அமைத்தல், கிராமத்தில் தரிசு நிலப் பகுதிகளில் பழமரச் செடிகள் நடவு செய்தல், சொட்டு நீர்பாசனம் அமைத்தல், காளான் வளர்ப்பு, பசுமைக் குடில் அமைப்பு, தானிய சேமிப்புக் கிடங்கு அமைத்தல், வேளாண் இயந்திரங்கள் வழங்குதல் போன்றவைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு தோட்டக்கலைத்துறையின் சார்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் தேசிய மூங்கில் இயக்கம், பனை மேம்பாட்டுத் திட்டம், மானாவரிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், தென்னை வளர்ச்சித் திட்டம், தேசிய தேனீக்கள் வளர்ப்பு, தேனீ இயக்கம், தொகுப்பு வளர்ச்சி திட்டம் போன்ற திட்டத்தின் செயல்பாடுகளும், தமிழகத்தில் தோட்டக்கலைப் பொருட்களுக்கு வழங்கிய புவியியல் குறியீட்டினையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம் துறை அரங்கில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களால் உற்பத்திச் செய்யப்பட்ட வேளாண் விளைப்பொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள், தமிழகத்தின் பாரம்பரிய நெல் வகைகள், தமிழ்நாட்டின் புவியியல் குறியீடு (GI Tags) பொருட்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தங்களது தயாரிப்புகளையும், பூம்புகார் நிறுவனம் தங்களது தயாரிப்புகளையும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவையும் தங்களது அரங்கில் விற்பனைக்கு வைத்துள்ளன.

சுற்றுலாத்துறையில் சுற்றுலா தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அமைந்துள்ள முக்கியமான சுற்றுலாத் தளங்கள் இங்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வரங்கிற்கு வரும் பார்வையாளர்களுக்குத்

தகவல், சுற்றுலா சம்பந்தமான கையேடுகள் வழங்கப்படுகின்றன. அதேசமயம் சுற்றுலா, தங்கும் விடுதிக்கான முன்பதிவும் செய்யப்படுகிறது.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள "தமிழ்நாடு அரங்கினை" மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள், பார்வையிட்டுச் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

"இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழ்நாடு அரசு சார்பில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரங்கில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டு, அரசின் திட்டங்கள், சாதனைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் தொழில் வளமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதும் விளக்கப்பட்டுள்ளன. இப்பொருட்காட்சியை முன்னிட்டு 17.11.2023 அன்று தமிழ்நாடு நாள் விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. இந்த இரண்டரை ஆண்டு காலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இந்தியாவிலேயே 13ஆவது இடத்திலிருந்து தமிழ்நாட்டின் தொழில்துறை இன்று 3ஆவது இடத்திற்கு முன்னேறியிருக்கின்ற வகையில் பல்வேறு தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கின்றன.

மென்பொருளிலே தேசிய அளவில் முதலிடத்தைப் பிடிக்கக்கூடிய வகையில் மென்பொருள், உதிரிபாகங்கள் தயாரிப்பதில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. ஏற்றுமதியில் அதிக அந்நிய செலாவணி ஈட்டி இருக்கின்ற வகையில் தமிழ்நாடு முன்னேறி இருக்கின்றது. இப்படிப் பல்வேறு வகையில் முன்னேற்றம் அடைந்திருக்கும் இந்தச் சூழ்நிலையில் புதுடெல்லியில் வர்த்தகத்தால் ஒன்றிணைவோம் என்ற வகையில் தமிழ்நாடு சார்பில் அரங்கம் அமைத்துத் தமிழ்நாடு நாள் விழா கொண்டாடுவதில் பெருமைகொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உலகளவில் இருக்கக்கூடிய தொழிலதிபர்களை எல்லாம் அழைத்துத் தமிழ்நாட்டில் புதிய தொழில் தொடங்குவது தொடர்பாக உலக முதலீட்டாளர்கள் மாநாடு ஒன்றை வரும் ஜனவரி மாதம் நடத்த திட்டமிட்டு, அதற்கான முன்னெடுப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, அது சிறப்பாக அமைந்து மேலும் பல்வேறு தொழில்கள் உருவாகித் தமிழ்நாட்டில் உள்ள படித்த இளைஞர்களுக்கும், மக்களுக்கும் வேலைவாய்ப்பு உருவாகி அவர்கள் பொருளாதாரத்திலும், தமிழ்நாடு அரசின் பொருளாதாரத்திலும் நிச்சயமாக முன்னேற்றம் ஏற்படுகின்ற வகையில் அந்தப் பணிகள் அமையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அந்த வகையில் இந்தக் கண்காட்சி அதற்கு சாட்சியாக விளங்கும்".

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு கலைப் பண்பாட்டுத்துறையின் சார்பில், தமிழ்நாட்டில் புகழ்பெற்ற பரதநாட்டியம், கைச்சிலம்பாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம் ஆகிய கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

காந்தியச் சிந்தனை

"சாதி, மத, இனம் குறித்த பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருக்கும் இந்தியத் திருநாட்டை வழிநடத்தக் கிடைத்த ஒப்பற்ற ஆயுதம் காந்தியச் சிந்தனைகள் என்னும் கருத்தை இளைஞர் மனதில் ஆழப்பதியவைக்க சூளுரைப்போம்."

-மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

ரூ.929.37 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் 230 அடிப்படை வசதித் திட்டங்கள்

- நகர்ப்புரப் பகுதிகளில் முழுமையான நீர் ஆதார பாதுகாப்பினை உறுதிசெய்வது, அனைத்து வீடுகளுக்கும் வீட்டுக் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்குவது, கழிவுநீர், கசடு மேலாண்மை, பயன்படுத்தப்பட்ட நீரின் மறுசுழற்சி/மறுபயன்பாடு, கழிவுநீர் நிலைகளைப் புனரமைப்பது, பசுமைவெளிகள், பூங்காக்கள் உருவாக்குவது உள்ளிட்ட நோக்கங்களைக் கொண்டு ஒன்றிய, மாநில அரசுகள், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதிப் பங்களிப்புகளுடன், அடல் நகர்ப்புரப் புத்துணர்வு, நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 (அம்ரூத் 2.0) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு அரசின் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ், மொத்தம் ரூ.330.12 கோடி மதிப்பீட்டில் காரைக்குடி, இராஜபாளையம் நகராட்சிகள், வேலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், திருச்சிராப்பள்ளி, தாம்பரம், கடலூர், ஈரோடு, ஆவடி, திண்டுக்கல் மாநகராட்சிகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் 24x7 குடிநீர் வழங்கல் முன்னோடித் திட்டங்களைச் (24x7 water supply system to the selected pilot water zones) செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்.

- காரைக்குடி நகராட்சியின் விடுபட்ட பகுதிகளுக்கு ரூ.33.71 கோடி மதிப்பீட்டிலும், மதுரை மாநகராட்சியின் விடுபட்ட பகுதிகளுக்கு ரூ.452.42 கோடி மதிப்பீட்டிலும், பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தவும் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- பல்வேறு நகராட்சிகள், மாநகராட்சிகளில் மொத்தம் ரூ.11.07 கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளைப் புனரமைக்கும் 17 பணிகளும், ரூ.8.94 கோடி மதிப்பீட்டில் பசுமை வெளிகள், பூங்காக்களை உருவாக்குவதற்கான 27 பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

- நாமக்கல் மாவட்டம், மோகனூர், ஈரோடு மாவட்டம், அந்தியூர் பேரூராட்சிகளுக்கு மொத்தம் ரூ.46.74 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயலாக்கப்படவுள்ளன.

- பல்வேறு பேரூராட்சிகளில் மொத்தம் ரூ.17.49 கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளைப் புனரமைக்கும் 59 பணிகளும், ரூ.27.91 கோடி மதிப்பீட்டில் பசுமை வெளிகள், பூங்காக்களை உருவாக்குவதற்கான 110 பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

- சென்னைப் பெருநகர்க் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் மழைநீர்ச் சேகரிப்பு விழிப்புணர்வுத் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ.0.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- இதன்மூலம், மொத்தம் ரூ.929.37 கோடி மதிப்பீட்டில் 230 பணிகளைச் செயலாக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்.

- மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட நகரங்கள், அவற்றின் குடிநீர்த் தேவையில் தன்னிறைவைப் பெறவும், கழிவுநீரைப் பாதுகாப்பான முறையில் சுத்திகரிக்கவும், நீர்நிலைகளை மேம்படுத்தவும் அதன்மூலம் குடிநீர் ஆதாரங்களை உறுதிப்படுத்தவும் ஏதுவாக அமையும். மேலும், பசுமை வெளிகள், பூங்காக்கள், இந்நகர மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கான வாய்ப்புகளை மேம்படுத்தவும் வழிவகுக்கும்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா
“இதழாளர் - கலைஞர்”
கருத்தரங்கம் மற்றும் நூல் வெளியீடு

கோயம்புத்தூர் மாவட்டம், இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா “இதழாளர் – கலைஞர்“ குழுவின் சார்பில் “இதழாளர் – கலைஞர்“ கருத்தரங்கம் 20.11.2023 அன்று மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சு.முத்துசாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் / இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக்குழுத் தலைவர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் / இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக்குழு இணைத் தலைவர் திரு. செஞ்சி. கே.எஸ்.மஸ்தான் அவர்கள், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் / இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக்குழு இணைத் தலைவர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் “இதழாளர்-கலைஞர்” என்னும் சிறப்பு மலரினை கே.ஜி.மருத்துவமனை தலைவர் பத்மஸ்ரீ டாக்டர் ஜி.பக்தவத்சலம் அவர்கள் வெளியிட இந்துஸ்தான் கல்வி நிறுவனங்கள் செயலர் திருமதி சரசுவதி கண்ணையன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தலைமையில், திருமதி பர்வீன் சுல்தானா அவர்கள், கவிஞர் கவிதாசன் அவர்கள், புலவர் செந்தலை ந.கவுதமன் அவர்கள் பங்கேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு “இதழாளர் – கலைஞர்” கருத்தரங்கம் கலைஞர் அவர்களின் பன்முகத் தன்மைகளைப் பற்றிய கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இக்கருத்தரங்கில், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர் / இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக்குழு உறுப்பினர்-செயலர் திரு. த.மோகன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கிராந்திகுமார்பாடி, இ.ஆ.ப., மாண்புமிகு மாநகராட்சி மேயர் திருமதி கல்பனா ஆனந்தகுமார், இதழாளர்-கலைஞர் குழுவின் உறுப்பினர்களாகிய திரு. நக்கீரன் கோபால், திரு. கி.பாபுஜெயகுமார் (டெக்கான் க்ரோனிக்கல் நாளிதழ்) திரு. அருண் ராம் (டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ்) திரு. கோவி. லெனின் (பத்திரிக்கையாளர்), துணைமேயர் திரு. இரா. வெற்றிசெல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. நா.கார்த்திக், தேசியத் தூய்மைப் பணியாளர் நலவாரிய துணைத் தலைவர் திருமதி கனிமொழி, மண்டலக்குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தெரிந்து கொள்வோம்



1,000 மாணவர், இளைஞர்களுக்குத்

தொழில் முனைவோர் மேம்பாடு, புத்தாக்கப் பட்டயப் படிப்பு

தொழில் முனைவோர் மேம்பாடு, புத்தாக்க நிறுவனத்தின் சார்பில் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகளுக்குப் பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில், புத்தாக்கத் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 25 மாணவக் குழுக்களுக்கும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 30 மாணவக் குழுக்களுக்கும் என 55 புதிய கண்டுபிடிப்புகளுக்கு ரூ.32.50 இலட்சம் நிதியுதவி மாண்புமிகு அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்களால் வழங்கப்பட்டது.

- புத்தாக்கத் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 25 மாணவக் குழுக்களுக்கும், பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 30 மாணவக் குழுக்களுக்கும் என 55 புதிய கண்டுபிடிப்புகளுக்கு ரூ.32.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளன.

- வேக, வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இன்றைய விஞ்ஞான உலகில் பையோ டெக்னாலஜி. நானோ டெக்னாலஜி, ரோபோடிக்ஸ் ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகள் உருவாகினாலும், நாம் மற்ற உலக நாடுகளுடன் போட்டிப் போடுவதற்குப் புதிய புதிய கண்டுபிடிப்புகள் அவசியம் அத்தகைய புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கிட தமிழ்நாட்டில் உள்ள புத்தாக்கச் சிந்தனை கொண்ட இளைஞர்களைக் கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்.

- புத்தாக்கச் சிந்தனைக் கொண்ட நம் இளைஞர்களையும், மாணவர்களையும் ஊக்கப்படுத்திட EDII நிறுவனம் மூலம் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 26,410 இளைஞர்களுக்கும், ஊரக வளர்ச்சி, தகவல் தொழில்நுட்பம், தாட்கோ, மாவட்ட தொழில் மையம் போன்ற அரசுத் துறைகளுடன் இணைந்து 13,764 இளைஞர்களுக்கும், புத்தாக்கத் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3,05,669 கல்லூரி மாணவர்களுக்கும், 97 அரசு, தனியார் கல்லூரிகளில் உள்ள Incubation Centres மூலம் 74,969 மாணவர்களுக்கும் பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 4,78,000 பள்ளி மாணவர்களுக்கும் என ஆட்சிப் பொறுப்பேற்று, இதுவரை 8,98,812 இளைஞர்கள், மாணவர்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

- படித்த இளைஞர்கள், கல்வி பயிலும் மாணவர்கள் தங்களின் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சி வடிவமைப்புகளுக்கும் அவற்றைத் தயாரித்துச் சந்தைப்படுத்தவும் புத்தாக்கப் பற்று சீட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.2 இலட்சம் முதல் ரூ.5 இலட்சம் வரை நிதியுதவி வழங்கப்படுகிறது.

- கடந்த 2 ஆண்டுகளில், இத்திட்டத்தின்கீழ், 266 புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.7.39 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- மேலும், 101 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் தொழில் வளர் காப்பகங்கள் – Incubation Centres அமைக்கப்பட்டுள்ளன.

- இதில் 29 இன்குபேஷன் சென்ட்டர்களில் ரூ.19.84 கோடி மதிப்பீட்டில், புதிய இயந்திரங்கள் பரிசோதனைக் கூடங்கள் நிறுவப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.

- அரசின் தொழில் வளர் காப்பகங்களைப் பயன்படுத்தி 89 மாணவர்கள், தொழில் முனைவோர்கள் புதிய கண்டுபிடிப்புகளைத் தயாரித்து பலனடைந்துள்ளனர்.

- கல்லூரி மாணவர்கள் தங்கள் மாணவப் பருவத்திலேயே புதிய தொழிலைத் தொடங்கும் வழி முறைகளைத் தெரிந்து கொள்ள, தமிழ்நாட்டிலுள்ள 1,545 கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள்பயன்பெறும்வகையில்31இடங்களில் தொழில் முனைவோர் மையங்கள்- Hubs அமைக்கப்பட்டு தொழில் துவங்க உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

- இதிலிருந்து 50 மாணவர்களுக்கு ரூ.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு உள்ளது.

- மாணவர்களிடம் புத்தாக்க சிந்தனையை உருவாக்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு ரூ.1 கோடி மதிப்பில் "பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தினை" அறிவித்துள்ளார்.

- இதன்படி, 4,343 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் தொழில் முனைவோர்களாக மாற விழிப்புணர்வும், ஆலோசனையும் அளிக்கப்பட்டு வருகின்றன.

- இத்திட்டத்தின் மூலம் 40 மாணவக் குழுக்களின் சிறந்த புதிய கண்டுபிடிப்புகளுக்குத் தலா ரூ.25 ஆயிரம் முதல் ரூ.1 இலட்சம் வரை ரொக்க பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற MSME தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் மாநில அளவில் வெற்றி பெற்ற 10 சிறந்த மாணவக் குழுக்களுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.10 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

- 1,000 இளைஞர்களுக்குச் சுழற்சி முறையில் தொழில் முனைவோர், புத்தாக்கப் பட்டயப் படிப்பு வகுப்புகள் நடத்தப்பட உள்ளன.

- இதற்காக, 320 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் கிண்டி, EDII பயிற்சி நிலையம் ரூ.4.41 கோடி மதிப்பில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

- மேலும், 260 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில், EDII தலைமையிடத்தில் 10,260 சதுர அடியில் ரூ.1.72 கோடி மதிப்பில் ஒரு பயிற்சி நிலையமும் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, வகுப்புகள் தொடங்கப்படும்.

- புதிய கண்டுபிடிப்புகளை வர்த்தக ரீதியாக சந்தைப்படுத்த Start-Up-TN மூலம் இதுவரை SC/ST ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உட்பட 153 – ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு ரூ.41.96 கோடி பங்குகளாக முதலீடாக வழங்கப்பட்டுள்ளது.

- புதிய கண்டுபிடிப்பாளர்களை ஸ்டார்ட் அப் நிறுவனங்களாகவும், ஸ்டார்ட் அப் நிறுவனங்களை MSME நிறுவனங்களாக வளர்த்தெடுக்க, MSME துறையில் 3 வகையான சுயதொழில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ஆட்சிப் பொறுப்பேற்று, இதுவரை ரூ.892.94 கோடி மானியத்துடன் ரூ.3,312.16 கோடி வங்கி கடனுதவி வழங்கப்பட்டு 26,121 படித்த இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் போற்றிய மகத்தான திட்டங்கள்

அன்று...

"இலவச நிலம் வழங்கும் திட்டம்"

தமிழ்நாட்டில் நிலமில்லாத ஏழை, எளிய விவசாயக் குடும்பங்களுக்கெல்லாம் அவர்களின் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்காகவும், வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்காகவும், தமிழ்நாட்டு மக்களை கரையேற வைப்பதற்காகவும், தமிழ்நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு வழங்குவதற்காகவும் விவசாயிகள், தொழிலாளர்கள், பாட்டாளிகளின் குடும்பங்களுக்கு "இலவசமாக நிலங்களை வழங்கும் திட்டத்தினை" **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள் திருவள்ளூரில் 17.09.2006 அன்று தொடங்கி வைத்தார். அன்றைய தினம் 24,949 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 26,321 ஏக்கர் நிலம் பண்படுத்தி வழங்கப்படுகிறது.

இன்று...

பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்கு அங்கீகாரம் கொடுக்கும் நோக்கத்தில், கள ஆய்வு நிலுவையில் இருந்த விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பயனாளிகளான 7.35 இலட்சம் மகளிருக்குக் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 10.11.2023 அன்று தொடங்கி வைத்தார். அன்றைய தினத்திலிருந்து மொத்தம் 1,13,84,300 மகளிர்க்கு உரிமைத் தொகை வழங்கப்படுகிறது.

“தியாகச் சுடர்”

இந்தியாவினுடைய தேசப்பிதா என்று அழைக்கப்பட்டவரும், சாதிமத வெறியர்களுடைய தாக்குதலுக்குத் தன் உயிரைத் தியாகம் செய்து, அந்நாளை இன்று இந்தியா முழுமையும் “தீண்டாமை ஒழிப்பு நாள்- மதவெறியை மாய்க்கும் நாள்” என்று கொண்டாடுகின்ற வகையில் தன்னுயிரை இந்த நாட்டிற்காக, சுதந்திரத்திற்காகத் தந்த மிகப்பெரிய தியாகச் சுடர் உத்தமர் காந்தியடிகள் ஆவார்கள்.

காந்தியடிகளுடைய வாழ்க்கை, அவருடைய மறைவு இந்த இரண்டும் இந்திய நாட்டிலே ஒரு பெரிய அரசியல் மாற்றத்தையே ஏற்படுத்தியது. அவர் உயிரோடு உலவிய காலத்தில் அவருடைய கொள்கைகளை அவருடைய நடைமுறைகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளாமல் வாதிட்ட தந்தைப் பெரியார் அவர்கள், காந்தியடிகள் மறைந்த பிறகு பத்திரிகையிலே மறுநாளே அறிக்கை, வெளியிட்டார். அந்த அறிக்கை பெரியாருக்குக் காந்தியடிகள் மீது எந்த அளவிற்குப் பற்று, பாசம், மதிப்பு, மரியாதை இருந்தது என்பதை எடுத்துக்காட்டக்கூடிய அறிக்கையாகும். என்ன அறிக்கை என்றால், “காந்தியடிகள் ஒரு மதவெறியன் கொன்று குவித்துவிட்டான். எனவே, அந்த தியாக சீலருடைய பெயர் விளங்க இனிமேல் இந்தியாவையே ‘காந்தி தேசம்’ என்று அழைக்க வேண்டும்” என்று பெரியார் அறிக்கையே வெளியிட்டார்.

முரட்டுக் காந்திய பக்தராக, கொள்கைவாதியாக இருந்த தந்தை பெரியார்தான், காந்தியாரோடு மாறுபட்டு, தமிழ்நாட்டிலே அவர்கள் ஒரு இயக்கத்தைத் தொடங்கி, அந்த இயக்கத்தின் சார்பில் காந்தியடிகள் பெயரால் இந்த நாட்டிற்கே, இந்தியாவிற்கே ‘காந்தி தேசம்’ என்று பெயர் வைக்க வேண்டும் என்று சொன்னார்.

அந்த அறிக்கை பெரியாரோடு நின்றுவிட்டது. அதை யாரும் கவனிப்பாரில்லை. ஆனால், இன்றைக்குக் காந்தி சிலைகளைத்தான் நாம் திறக்க வேண்டியிருக்கிறது. அவருடைய பெயரால் இந்த நாடு அமையவில்லை என்று வருந்தாமலும் இருக்க முடியவில்லை. இருந்தாலும், தேசத்திலே பற்றுக் கொண்டவர்கள், காந்தியடிகளுடைய தியாகத்தை மதித்தவர்கள், தங்களுடைய வீட்டுப் பிள்ளைகளுக்குக் ‘காந்தி’ என்று பெயர் வைத்து மகிழ்ந்தார்கள்.

*- முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள் இராணிப்பேட்டையில் 16.02.2008 அன்று, அண்ணல் காந்தியடிகள் அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து...*

ஜனவரி 23 : நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் பிறந்த நாள்

சமத்துவ சமுதாயம் காண விரும்பியவர்

“நேதாஜி”

சாதி சமயமற்ற, மத பேதமற்ற ஒரு சமுதாயம் உருவாக வேண்டுமென்பதற்காக அக்கறை கொண்டவராக நேதாஜி அவர்கள் இருந்தார் என்று இங்கே சிலர் எடுத்துக் காட்டினார்கள். சமத்துவ சமுதாயம் காண விரும்பிய நேதாஜி அதைப்பற்றிக் கூறியுள்ள சில கருத்துக்களை உங்களிடத்திலே எடுத்துவைக்க நான் விரும்புகிறேன்.

“சுதந்திரத்தை நம் வாழ்வின் மூலமந்திரமாகக் கொண்டோமானால், நம் செயல், ஆற்றல் எதிலும் அதையே தூண்டும் சக்தியாகக் கருதுவோமானால் சமூகத்தின் சீர்திருத்தத் திட்டங்களைக் கூடச் சுதந்திரத்தின் அடித்தளத்தின் மீது நிறுவுவதே அவசியம். அந்த நோக்கிலிருந்து பார்த்தால் சுதந்திரத்தின் நீதிமுறை வேறொன்றுமில்லை, சமூகப் புரட்சியே.

எல்லாச் சமுதாயத்திற்கும் சுயேச்சை என்றால், பெண் ஆண் என்ற வேற்றுமை பாராட்டாமல் இருசாராருக்குமே சுதந்திரம் என்றுதான் அர்த்தம். இந்தச் சுதந்திரப் பங்கீட்டில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடும் இருக்கக் கூடாது. ஏழை பணக்காரன் என்ற வேறுபாடும் இருக்கக்கூடாது. பணக்காரன் ஏழை, இளைஞன், முதியவன், எல்லா வகையினரும், பெரும்பான்மையினர்- சிறுபான்மையோர் வகுப்பு அனைத்தும், ஒவ்வொருவரும் விடுதலை அடைய வேண்டும். ஆராய்ந்து பார்த்தால் சுதந்திரமே-சமத்துவமே-சகோதரத்துவமென்று தெற்றெனப் புரியும்.

சமூகத்தைத் தளைகளிலிருந்து மீட்க வேண்டுமானால் ஒவ்வொரு சமூக நிருவாகத்திலும், சட்ட நிர்மாணத்திலும் ஆண்களுக்குச் சரிசமமாகப் பெண் பாலருக்கும் உரிமை வழங்க வேண்டும். ஒரு சமுதாயம் தன் கட்டுத்திட்டங்களினால், பிறப்பிலோ வகுப்பிலோ இழிவானவரென்று ஒருவரையோ அல்லது ஒரு சாராரையோ சிறுமைப்படுத்துவதாக இருந்தால், சற்றும் கூசாமல் நெஞ்சு இளக்கமின்றி அந்த இடையூறுகளை நிர்மூலமாக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் கல்வியிலும் மனிதத் தன்மையிலும் மேலோங்குவதற்கு வாய்ப்பு அளித்தாக வேண்டும். இளைஞனை உடலிலோ, அறிவிலோ சிறியவனென்று அசட்டை செய்யக் கூடாது. சமூகத்தைச் சீர்படுத்தவும் நாடாளவும் இளைஞருக்கும் பங்கு தரவேண்டும். சமூகம், அரசியல், பொருளாதாரம், இந்த ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொருவருக்கும் சமமான அதிகாரமே தேவை. ஏற்றத்தாழ்வு இருந்தால் அவலமாகும். நாம் நிறுவும் புதிய சமுதாயத்தில் அனைவருக்கும் சம உரிமை, சமமான சந்தர்ப்பம், உடைமையில் சம அதிகாரம், சம அந்தஸ்து, வேற்றுமையைத் தூண்டும் முறைகளை ஒழித்தல், நிறபேதமோ, வகுப்புப் பேதமோ எதையும் விலக்குதல், வெளியாரின் ஆளுகையிலிருந்து விடுதலை பெறுவது யாவும் அதன் தலையாய கொள்கையாக அமைய வேண்டும்.

நண்பர்களே, நீங்கள் ஒருவேளை இதெல்லாம் நான் குடிக்கும் மனப்பால் என்று எண்ணிக் கொள்ளலாம். உங்களில் சிலர் நினைக்கலாம். இவன் கனவு உலகில் திரிகிறான். தற்போதைய உலகிற்கு ஒவ்வாத பிதற்றல் இவன் கூறுவது என்றெல்லாம், நீங்கள் கருதுவீராயின், நான் ஓர் உதவாக் கரையே. பிழைகளை ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. நான் கனவு காண்பவன்தான். ஆனால், இந்தக் கனவு எனக்குப் பிடித்திருக்கிறது. என் வரைக்கும் இந்தக் கனவு முழுதும் கடும் முயற்சியால் கைகூடும் என்றே தோன்றுகிறது. ஆகாயக்கோட்டை என்று சிலர் கருதும் இதுவே எனக்கு உணர்வூட்டி என் முயற்சிக்கு அரணாக நிற்கிறது. வாழ்வில் தெம்பை மூட்டுகிறது” என்று இந்தியச் சுதந்திரத்திற்காக அவர் போர்க்கொடி தூக்கிய நேரத்தில், இறுதிப் போர்க்களத்தில் நின்ற நேரத்தில் கூட, நாம் காண்பது கனவாக இருக்கலாம், ஆனால் இது நிறைவேறக் கூடிய கனவு என்று நம்பிக்கையோடு தெரிவித்தார்.

*- முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்*
சென்னை, காமராஜர் சாலையில்,
நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின்
திருவுருவச் சிலையினை 15.12.1997 அன்று
திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து...

கட்டுரை

சாதனைகள் புரிந்துவரும் சிறப்புமிகு செய்தித்துறை

- முனைவர் சு.கிருஷ்ணசாமி

நாளிதழ்கள் நிகழ்வுகளைச் செய்தியாக்குகின்றன. தமிழ்நாடு அரசு சார்பாக வெளியிடப்படும் இதழோ பெறும் செய்திகளை அரசாணைகளுடன் இணைத்து ஆவணமாக்குகிறது. அதனால்தான் அந்த இதழ் வரலாறாக வலம் வருகிறது.

செய்தி விளம்பரத்துறையின் அவசியத்தை ஆங்கில அரசு உணரும் காலம் ஒன்று வந்தது. ஜெர்மானிய சர்வாதிகாரி ஹிட்லரின் ஆதிக்கம் மூட்டிய போர்க் கனலில் தரணி வாழ் மக்கள் எல்லாம் தவிதவித்தனர். அதனை அறிந்துணர்ந்தது இங்கிலாந்து அரசு. இரண்டாம் உலகப் போரின்போது தன் பக்கமுள்ள நியாயத்தையும் ஹிட்லரின் எதேச்சதிகாரத்தால் ஏற்பட்டு வரும் பேராபத்தையும் இந்திய மக்களிடையே எடுத்துரைத்து அவர்களின் பேராதரவினைத் திரட்டுவதற்கு 1942ஆம் ஆண்டு பிப்ரவரி 16ஆம் தேதி போர் பிரச்சார அதிகாரியாக ஒருவரையும், வட்டாரப் போர் ஆலோசனைக்குழுவின் செயலாளராக திரு. ஹார்வி அவர்களையும் ஆங்கில அரசு நியமித்தது. அக்குழு தன் பணிகளைச் செய்து முடித்தது.

இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகும் நாட்டின் நிர்மானப்பணிகளைப் போர்க்காலப் பணிகளைப் போல் தொடர வேண்டும் என்றும் மக்களுக்கும் அரசுக்கும் இடையே தொடர்புப் பாலமாகச் செய்தி விளம்பரத்துறை இயங்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. சென்னை மாகாண முதலமைச்சர் ஆந்திர கேசரி திரு. பிரகாசம் அவர்கள், திரு. சி.வி.அனுமந்தராவ் என்பவரை விளம்பரத்துறைக்கு இயக்குநராக நியமித்தார்.

ஆரம்பத்தில் விளம்பரத்துறை அமைச்சராக திரு. பக்தவத்சலம் அவர்கள் இருந்தார். மூதறிஞர் திரு. ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது திரு. சி.சுப்பிரமணியம் அவர்கள் விளம்பரத்துறை அமைச்சரானார். கர்மவீரர் திரு. காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் விளம்பரத்துறை நன்கு செயல்பட்டது. விளம்பரத்துறை இயக்குநர் திரு. கே.திரவியம் அவர்கள் மிகசிறப்பாகச் செயல்பட்டு இத்துறைக்கு மேலும் பெருமை சேர்த்தார்.

1958இல் திரு. குழந்தைவேலு அவர்களும் 1968இல் திரு. டி.வி.வாசுதேவன் அவர்களும் விளம்பரத்துறையின் இயக்குநர்களாகப் பணியாற்றினர். 1967-1969இல் பேரறிஞர் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது செய்தி, விளம்பரத்துறை சிறப்புடன் இயங்கியது. 1969க்குப் பின் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சரான பின்பு செய்தி, விளம்பரத்துறை புதியதோர் ஆக்கம் பெற்றது. சென்னை, தஞ்சை, மதுரையில் அரசாங்க செய்தி நிலையங்கள் செயல்பட்டு வந்தன.

தமிழரசு இதழ் வெளியீடு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கண் சிகிச்சைக்காக 01.07.1970 அன்று அமெரிக்கா புறப்பட்டார். அதற்கு முந்தைய நாளான 30.06.1970 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கில் அவருக்கு நடத்தப்பட்ட வழியனுப்பு விழாவில் தமிழரசு இதழ் முதன்முதலில் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டது. மாதம் இருமுறைத் தமிழிலும், மாதம் ஒருமுறை ஆங்கிலத்திலும் "தமிழரசு" ஏடு வெளிவந்தது. 09.10.1972 அன்று தமிழரசு அச்சகம் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழரசு மட்டுமல்லாது திட்டம், விளையாட்டு மடல், உழைப்பவர் உலகம், திருக்கோயில், தமிழ்க் கல்வி போன்ற

பல பத்திரிக்கைகள் தமிழ்நாடு அரசு சார்பில் நடத்தப்பட்டன. சீரணி, மொழிச்செல்வம், ஆரோக்கிய மார்க்கம், மக்கள் நல்வாழ்வு, கல்வி, பாக்கியலட்சுமி, தமிழ்நாடு செய்தி போன்ற பல இதழ்களும் வெளியிடப்பட்டன. 01.01.1997 அரசு செய்தி என்ற புதியவகை சுவரொட்டிப் பத்திரிக்கையை தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டது.

குமரி முனையில் தமிழ்நாடு அரசு சார்பாக நடத்தப்பட்ட திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவினை முன்னிட்டு 'கோட்டம் முதல் குமரி வரை' என்ற சிறப்பு மலர் வெளியிட்டதுபோல் அவ்வப்போது பல சிறப்பு மலர்கள் வெளியிட்டன. 1997-1998இல் தமிழ்நாடு செய்தி தொழில்நுட்ப மையம் உருவாக்கப்பட்டது. அரசு பத்திரிகைகளின் தரமும், தொழில்நுட்பத் திறனும் மேம்படுத்தப்பட்டன.

2006 முதல் 2011 வரை தமிழகத்தில் ஆட்சியில் இருந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது அரசு, செய்தி விளம்பரத்துறை மற்றும் பத்திரிக்கைத்துறை வளர்ச்சிக்கும் பத்திரிக்கையாளர்கள் நல மேம்பாட்டிற்கும்; ஏராளமான நன்மைகளைச் செய்தது. அவற்றில் ஒரு சில மட்டும் இங்கு சொல்லப்படுகிறது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் பத்திரிக்கையாளர்களுக்கு அரசு வீடுகள் வழங்கப்பட்டன. பத்திரிக்கையாளர்களுக்கு ஓய்திவூயமும், குடும்ப ஓய்திவூயமும் உயர்த்தி வழங்கப்பட்டன. ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் பத்திரிக்கையாளர் நல நிதியம் உருவாக்கப்பட்டதோடு உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் பயன்களும் பத்திரிக்கையாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட்டன. சென்னை நிருபர் சங்கத்திற்கு ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் புதியக் கட்டடம் கட்டித் தரப்பட்டது. இத்துறை மூலம் பல சுதந்திரப் போராட்டத் தியாகிகள், தலைவர்கள், தமிழ் அறிஞர்களுக்குச் சிலைகள் அமைக்கப்பட்டும் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டும் இத்துறையால் பராமாரிக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசின் முயற்சியால் ஒன்றிய அரசு மூலம் சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு நினைவு தபால் தலைகள் வெளியிடப்பட்டன.

1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றதற்கு பிறகு 1972ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் சுதந்திர தின வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. அப்போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார். அவரது தலைமையிலான அரசு சுதந்திர தின வெள்ளி விழாவினை மிகச்சிறப்பாகக் கொண்டாடியது.

1997ஆம் ஆண்டு இந்தியச் சுதந்திர தின பொன்விழா ஆண்டாகும். அப்போது தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கோட்டையில் கொடியேற்றி இந்தியச் சுதந்திரத் தின பொன்விழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடினார்.

சுதந்திரத் தின வெள்ளி விழாவினை முன்னிட்டுச் சுதந்திர தின வெள்ளிவிழாச் சிறப்பு மலர் ஒன்றையும், சுதந்திரத் தின பொன்விழாவினை முன்னிட்டுச் சுதந்திரத் தின பொன்விழாச் சிறப்பு மலர் ஒன்றையும் தமிழரசு இதழ் வெளியிட்டுச் சுதந்திர தின வெள்ளிவிழா, பொன் விழாக்களுக்கு மேலும் பெருமை சேர்த்தது.

இந்தியச் சுதந்திரத் தின வெள்ளி விழா கொண்டாடப்பட்டதற்கு பிறகும் 1973ஆம் ஆண்டுக்கு முன்பு வரையிலும் சுதந்திரத் தின, குடியரசு தின விழாக்களில் மாநிலங்களில் தேசியக்கொடி ஏற்றும் உரிமை மாநில ஆளுநர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்தது.

இராஜமன்னார் குழு அறிக்கைக்குப் பிறகு கூட்டாட்சித் தத்துவத்தின்படி 1974ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களிடம் மாநிலங்களில் இந்தியச் சுதந்திரத் தின விழாக்கள் கொண்டாடும்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சர்களுக்குத்தான் சுதந்திரத் தினத்தன்று தேசியக் கொடி ஏற்றும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கோரிக்கை வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மாநிலங்களில் இந்தியச் சுதந்திரத் தின விழாக்கள் கொண்டாடப்படுகின்ற போது தேசிய கொடியை ஏற்றும் உரிமையை மாநில முதலமைச்சர்களுக்கு

வழங்கி மத்திய அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி 1974ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று தமிழ்நாட்டில் நடந்த இந்தியச் சுதந்திரத் தின விழாவின் போது தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை முதன்முதலாக ஏற்றினார். இது இந்திய ஜனநாயக வரலாற்றில் மிகப்பெரிய மைல்கல்லாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு இந்தியாவின் 75ஆவது சுதந்திர விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகங்களை எடுத்துரைக்கும் சிற்பங்கள் அமைக்கப்பட்ட சிறப்பு ஊர்திகளைக் குடியரசு தினத்தை முன்னிட்டு புதுடெல்லியில் நடைபெற்ற ஊர்வலத்தில் கலந்துகொள்ளச் செய்தது.

அத்தோடு சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் உருவங்கள் பொறித்த மூன்று சிறப்பு ஊர்திகளை உருவாக்கி தமிழ்நாடும் முழுவதும் அனுப்பி 75ஆவது சுதந்திரத் தினத்திற்கு மேலும் பெருமை சேர்த்தது தமிழ்நாடு அரசின் விளம்பரத்துறை. மாவட்டங்கள்தோறும் முக்கிய நகரங்களில் சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் பெருமைகளை உணர்த்தும் கண்காட்சிகளை இத்துறை நடத்தியது சிறப்பானதாகும்.

தமிழ்நாடு அரசின் திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் செல்லும் மகத்தான பணிகளைச் செய்தி விளம்பரத்துறை சிறப்பாகச் செய்து வருவது சிறப்பானதும் போற்றத்தக்கதாகும்.

நன்றி: இலக்கிய மலர் - 2023 என்னும் நூலிலிருந்து...

வெற்றிக்கதை

காஞ்சிபுரம் மாவட்டம்

உதவித்தொகை அல்ல... உரிமைத்தொகை...

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பயன்பெற்ற பயனாளிகள் நன்றி...

தமிழ்நாடு அரசின் 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "மகளிருக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடு அளித்தது முதல், தற்போது கட்டணமில்லாப் பேருந்துப் பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்று அறிவித்தபடி, தகுதிவாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் ரூ.1,000 உரிமைத் தொகையாக வழங்கப்படும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் எனச் சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய்த் தமிழ்நாட்டின் தலைமகன் – பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் மாதம் 15ஆம் நாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 27.03.2023 அன்று சட்டமன்றப் பேரவையில், இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அளித்த விளக்கத்தில், "மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்" இரண்டு நோக்கங்களைக் கொண்டது. பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு ரூ.12,000 உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

இந்தத் திட்டத்தில் மாநிலம் முழுவதும் விண்ணப்பங்கள் பெற 24.07.2023 முதல் 04.08.2023 வரை முதல் கட்டமாகவும், 05.08.2023 முதல் 14.08.2023 வரை இரண்டாவது கட்டமாகவும், மேற்சொன்ன இரண்டு கட்டங்களிலும், விடுபட்டவர்களுக்கு 18.08.2023 முதல் 20.08.2023 வரை சிறப்பு முகாம் வழியாகவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இணைந்துகொள்ள 1 கோடியே 63 இலட்சம் விண்ணப்பங்கள் அரசிற்கு வந்துள்ளன. அவற்றில் தகுதியுள்ள 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.09.2023 அன்று காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இத்திட்டத் தொடக்கத்தில் அடையாளமாக 13 மகளிருக்கு வங்கிப் பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார். மகளிரின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அறிவிக்கப்பட்டிருக்கும்

மாதம் ரூ.1,000 என்பது, குடும்பத் தலைவிகளுக்கு அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளி திருமதி ப.விஜயா அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது:

என் பெயர் ப.விஜயா, என் கணவர் பெயர் பரமசிவம், நான் காஞ்சிபுரம் மாவட்டம், கீழம்பி ஊராட்சி, காவங்கரைத் தெருவில் வசித்து வருகிறேன். நான் தினமும் பூ வியாபாரம் செய்து எங்களது வாழ்க்கையை நடத்தி வருகிறோம். ஒவ்வொரு மாதமும் குடும்ப செலவிற்கு என்னுடைய வருமானம் பற்றாகுறையால் கடன் வாங்கி குடும்ப தேவைகளை பூர்த்தி செய்து வந்தேன். ஆனால் தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் எனக்கு மாதம் ரூ.1000/- எனது வங்கி கணக்கின் மூலம் கிடைக்கிறது. இதனால் என்னுடைய குடும்ப தேவைகளை யாரிடமும் கடன் பெறாமல் நானே பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது. ஒரு பெண்ணாக இத்திட்டத்தின் மூலம் தன்னம்பிக்கை பெருகி உள்ளது. இத்திட்டத்தின் மூலம் எங்கள் வாழ்க்கை தரத்தினை உயர்த்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளி பிரியதர்ஷினி அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது:

என் பெயர் பிரியதர்ஷினி. என் குடும்பம் நெசவுத்தொழில் செய்து வருகிறது. எனக்குப் படிப்பதற்கு மிகவும் விருப்பம். என்னுடைய குடும்பச் சூழ்நிலை காரணமாக என் படிப்பைத் தொடர முடியவில்லை. கலைஞர் மகளிர் உரிமைத் தொகையானது என் வைப்புக் கணக்கில் வரவு செய்யப்பட்டவுடன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். மகளிர் உரிமைத் தொகையானது ரூ.1,000 ஆனது என் படிப்பிற்கான கட்டணம் செலுத்துவதற்கு மிகவும் உதவியாக உள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்தொகையினை உதவித்தொகை என்று சொல்லாமல் மகளிர் உரிமைத்தொகை என்று சொன்னதைக் கேட்டு எனக்கு மிகவும் பெருமையாக உள்ளன. அவருக்கு எப்படி எனது நன்றியைச் சொல்வது, எதன் மூலம் சொல்வது என யோசித்துக் கொண்டிருக்கையில் Thank you CM Sir என்று எழுதி முதலமைச்சர் அவர்கள் செல்லும் வழியில் நன்றியைத் தெரிவித்ததில் நான் மிக மிக மகிழ்ச்சி அடைகிறேன். இதன்மூலம், தமிழ்நாடு அரசுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.

2024ஆம் ஆண்டிற்கான
அரசு பொது விடுமுறை நாட்கள்

வ. எண்	பொது விடுமுறை	தேதி	கிழமை
1.	ஆங்கிலப் புத்தாண்டு	01.01.2024	திங்கட்கிழமை
2.	பொங்கல்	15.01.2024	திங்கட்கிழமை
3.	திருவள்ளுவர் தினம்	16.01.2024	செவ்வாய்க்கிழமை
4.	உழவர் திருநாள்	17.01.2024	புதன்கிழமை
5.	தைப்பூசம்	25.01.2024	வியாழக்கிழமை
6.	குடியரசு தினம்	26.01.2024	வெள்ளிக்கிழமை
7.	புனித வெள்ளி	29.03.2024	வெள்ளிக்கிழமை
8.	* வங்கிகள் ஆண்டு கணக்கு முடிவு (வணிக / கூட்டுறவு வங்கிகள்)	01.04.2024	திங்கட்கிழமை
9.	தெலுங்கு வருடப் பிறப்பு	09.04.2024	செவ்வாய்க்கிழமை
10.	ரம்ஜான்	11.04.2024	வியாழக்கிழமை
11.	தமிழ்ப் புத்தாண்டு / டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த தினம்	14.04.2024	ஞாயிற்றுக்கிழமை
12.	மகாவீரர் ஜெயந்தி	21.04.2024	ஞாயிற்றுக்கிழமை
13.	மே தினம்	01.05.2024	புதன்கிழமை
14.	பக்ரீத்	17.06.2024	திங்கட்கிழமை
15.	மொகரம்	17.07.2024	புதன்கிழமை
16.	சுதந்திர தினம்	15.08.2024	வியாழக்கிழமை
17.	கிருஷ்ண ஜெயந்தி	26.08.2024	திங்கட்கிழமை
18.	விநாயகர் சதுர்த்தி	07.09.2024	சனிக்கிழமை
19.	மிலாதுன் நபி	16.09.2024	திங்கட்கிழமை
20.	காந்தி ஜெயந்தி	02.10.2024	புதன்கிழமை
21.	ஆயுத பூஜை	11.10.2024	வெள்ளிக்கிழமை
22.	விஜயதசமி	12.10.2024	சனிக்கிழமை
23.	தீபாவளி	31.10.2024	வியாழக்கிழமை
24.	கிருஸ்துமஸ்	25.12.2024	புதன்கிழமை

* தமிழ்நாட்டிலுள்ள வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், சென்னை கலைவாணர் அரங்கில் 01.12.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பாரம்பரிய கைவினைக் கலைகளில் ஆர்வம் கொண்ட இளைஞர்களை ஈர்த்து கலைத்தொழில் முனைவோர்களாக உருவாக்கும் ‘நீயே உனக்கு ராஜா’ என்கிற திட்டத்தை துவக்கி வைத்து கைவினைத் திறன் பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு பெட்டகங்களை வழங்கினார்.

தமிழரசு
Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மிக்ஜாம் புயல்
நிவாரணப் பணிகள்

Published by : D.MOHAN, I.A.S., on behalf of Information and Public Relations Department Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : D.MOHAN, I.A.S.,